இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து மார்கழி. Dec. 2013
Free Circulation

# வெற்றிமணி
Vettimaniy

மணி 63 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 207

Orientalische Textilien & Schmuck
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
அதிரடி மலிவு விற்பனை!
பட்டுச்சேலைகள் பஞ்சாபிகள் இன்னு பல..
மேலதிக விபரம் 10ம் பக்கம்
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# அடடா! இன்னும் ஒரு பூமியா?



பிரியமான பிரித்தானியப் பிரதமர்



விண்வெளியில், விவசாயம்!



இவ்விதழ் வெற்றிமணி அன்னைக்குச் சமர்ப்பணம்

ஃபாஸ்ட் ஃபுட் திருமணங்கள்.



அழகே! அழகே!

2014



அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52 44137 DORTMUND Tel:0231 819288 விபரம் பக்கம் 11

புதியதோர் தொழில் நுட்பம்! புதியதோர் வாய்ப்பு!!
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 21

Gopara Gnanam
நத்தார்,புதுவருட அதிரடி மாபெரும் மலிவு விற்பனை!
Tel: 0231/5450028- Mob: 01713306542 மேலதிக விபரம் 8ம் பக்கம்
Rheinische Str.81-- 44137 Dortmund

உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும்
ஐங்கரன்
கலைஞர் JAYA TV
தொலைபேசி இல. 0044 208 543 43 22
Ayngaran foods
30 High Street Colliers Wood,
Colliers Wood
London, SW19 2JE- U.K
ayngaran.com
AYNGARAN

மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Kipper str.Tor.3- 44147 Dortmund
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
டோட்முண்ட் நகரில்
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!
மாபெரும் ராஜமுத்திரை
பஞ்சாபிகள் சேலைகள் 50% கழிவு விலையில் இன்றுமுதல் 14.01.2014 வரை
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
11th ANNIVERSARY
Mr.P.Sritharan, Proprietor
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Jewellers & Silk House
London's Largest Selections
எப்பொழுதும் நியாயமான விலை புத்தம் புது டிசைன்கள்
Rathy ரதி
28 Ealing Rd Wembley HA0 4TL London Tel: 02089033063
209 upper tooting Road tooting sw19 7gt 0208682 2233

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




**Tel.: 0201/236925**
**Fax: 0201/236928**

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...**

Ria MONEY TRANSFER
இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

**APIRAAMI ENTERPRISE**
Pferdemarkt 9
45127 ESSEN

**மக்களின் மனம் கவர்ந்த ஸ்தாபனம்**

**T.R.S Traders**



**மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்**

இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**T.R.S Traders**
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

**Tel.: 0231/160 494**
**Fax: 0231/165 6524**









மாதவி

# வீட்டு இலாச்சிக்குள் சுருண்டுகிடக்கும் பாவனையற்ற பழைய வயர்கள்!

வீட்டில் எத்தனை அலுமாரி இருக்கோ, அத்தனை அலுமாரி இலாச்சிக்குள்ளும் நிறைந்து வழியும்பொருள்கள் இருக்கும்.
அது பழைய கடிதமாக இருக்கலாம்,பழைய புகைப்படங் களாகவும் இருக்கலாம். என்ன வெளியில் கண்பட இருக்கிறதோ அவை எல்லாம் ஒளியும் இடமாக இந்த லாச்சியிருக்கும்.

திடீர் என ஒரு விருந்தினர் வீட்டுக்கு வந்தால் மேசையில் குப்பைபையாகக் கிடக்கும் அனைத்தும் அந்த இலாச்சிக் குள் சென்றுவிடும். பின்பு அவை மீண்டு வருவது முயற் கொம்புதான்.

சரி இப்ப சொல்லவருவது அந்த லாச்சிக்குள் வருடக் கணக்காக பாவிக்காமல் கிடைக்கும் ஒரு பொருள் வயர்கள்.

இந்த வயர்கள் றேடியோவுக்கும் ஒலிபெருக்கி பெட்டிக்கும் தொடர்பு தரும் வயர், அல்லது தொலைபேசி, கணனி மின்சார உபகரணங்கள் அல்லது தொலைக்காட்சி பெட்டிகள், என இவை வாங்கும் போது அதற்குள் வேறு பாவிப்புக்கு எனவரும் பிரத்தியேக வயர்கள், காலம் முழுவதும் அவை என்னத்திற்கு என்று தெரியாமலே முடங்கி கிடக்கின்றன இந்த இலாச்சிக்குள்.

முன்பு எல்லாம் என்ன பொருள் என்றாலும் ஒரு தொடர்பு இல்லாமல் இயங்காது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதற்கு ஒவ்வொரு நிறுவனமும் நிலத்துக்கடியில் தாட்டுவைத்த வயர்த் தொடர்புகள் இன்று சற்றலைட் வந்ததினால் கோடிக்கணக்கில் பாவனை இழந்து போய் விட்டதாம். இது போன்று தொலை பேசிக் கம்பிகள் மற்றும் வீட்டில் இன்று எதற்கெடுத்தாலும் றிமோட் வந்தந்தால் வயர்கள் வேலை இழந்துபோயின. வயலஸ்! வயலஸ்!! என்று கொஞ்சக்காலம் எதற்கெடுத்தாலும் பேசப்பட்டது. இப்போது அது சர்வ சாதாரணம் என்றமையால் அப்பேச்சே நின்றுவிட்டது.

இனி வாழ்வில் ஒருபோதும் தேவைப்படாத இந்த வயர்கள் நம் வீட்டில் பெரும் இடத்தை இந்த இலாச்சிக்குள் பிடித்துக் கொண்டு இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இப்போ தொடாமலே காதல் மட்டுமல்ல எல்லாமே மலரும் காலம்.
பார்த்தால் பசி தீரும் என்று படம் ஒன்று முன்பு வந்தது. இனி நிஜமாகலாம். எந்தத்தொடர்பும், வயிற்றுக்கும் வாய்க்கும் இல்லாமல் பசியடங்கும் காலம் கனிந்து வரலாம்.
அப்படி வந்தால் இலாச்சிக்குள் இருக்கும் வயர்களுடன் குசினி இலாச்சிக்குள் இருக்கும் கரண்டிகளும் கூட்டணி அமைத்துக்கொள்ளும்.
காலத்தால் கரையும் பல பொருட்கள். அதனை நாம் இனித்தேவை இல்லை என்று தெரிந்தாலும் அவற்றை எறியமுடியாது தவிக்கின்றோம்.
இந்த வகையில் இன்று வீடுகளில் வயர்கள் மலைப்பாம் பெனச் சுறுண்டுகிடக்கின்றன.

**கொஞ்ச நேரம் ஒதுக்கி தரம்பிரிப்போம். இலாச்சிகளுக்கும் இடம் அளிப்போம்.**

( தரம்பிரிக்கிறோம் என்று பிரிக்கத் தொடங்கும்போது ஒரு தொலை பேசி அழைப்பு வந்தால், தரம்பிரிப்பதை இடை நிறுத்திவிட்டு, பேசப்போவோம். பின்பு நேரத்தைப் பார்த்தால் பாதிநாள் பேச்சோடுபோயிருக்கும்.
உடன் தரம்பிரித்ததை மீண்டும் அதே இலாச்சிக்குள் ஒரு அமுக்கு அமுக்கிவிட்டு வந்திடுவோம். இலாச்சி முன்பு இருந்ததைவிடக் கேவலாமக இருக்கும்.)

மீண்டும் காலத்தால் கரைந்துபோன ஒரு பொருளுடன் வருகிறேன்.

**வெற்றிமணியில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள்**
முடிந்தவரை மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பரங்கள் உடனுக்கு உடன் செய்வதற்கும், தங்களுக்கு பதில் தருவதற்கும் அது மிகவும் வசதியாக இருக்கும். மேலும் 2014 ம் ஆண்டு புதிய விளம்பரங்கள் தரவிரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்யவும். பத்திரிகையின் வளர்ச்சிக்கும், வடிவமைப்புக்கும், இவை பெரிதும் உதவியாக இருக்கும். ஆதரவிற்கு நன்றி

**vettimaniy@hotmail.com**




Wilhelm Str.09
33602 Bielefeld

**Bielefeld நகரில்....** **3 in one**

**Lakshmi Jewellery &Silks**

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
**மாபெரும் மலிவுவிற்பனை**
1.12.2013 முதல் 31.12.2013 வரை
அனைத்து ஆடைவைகைளும்
20% முதல் 50%வீதம் வரை மலிவு விலையில்
வாருங்கள் வந்து பயன்பெறுங்கள்

**Asia super markt**

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்


தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்Lakshmi Jewellery &Silk

தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de
Tel:0521 4283 510



**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0157 88 77 31 56

e-mail: vettimaniy@hotmail.com

QB 830

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)



# இன்று தமிழ் மக்களுக்குப் பிரியமான பிரித்தானியப் பிரதமர் டேவிட் கேமரூன்



யாழ்ப்பாணத்தில் பிரித்தானியப் பிரதமர்

கடந்தமாதம் பொதுவாக தமிழ்மக்கள் பேச்சில் இடம்பெற்ற பேச்சுப் பொருள் இலங்கையில் நடந்து முடிந்த 23 வது பொதுநலவாய அமைப்பின் தலைவர்களது 23 வது மாநாடு. இந்த மாநாடு கடந்த 15ம்திகதி முதல் 17ம் திகதி வரை இலங்கையில் நடைபெற்றது.
இதன் முதலாவது மாநாடு 1971 ஆண்டு சீங்கப்பூரிலும் அதனையடுத்த இரண்டு மாநாடு கனடாவிலும் ஆசிய நாடுகளில் சிங்கப்பூர், இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்றதையடுத்து தற்போது இலங்கையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.
அடுத்த மாநாடு மொரிசியஸ் நாட்டில் நடைபெறவேண்டி இருந்தது. ஆனால் அந்நாட்டுப்பிரதமர் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொண்டு இலங்கையில் நடைபெற்ற மாநாட்டைப் புறக்கணித்தார்.
இன்று பொதுநலவாய மாநாட்டின் தலைவராக வந்துள்ள இலங்கை ஜனாதிபதி மொரிசிஸ் மாநாட்டில் கலந்து கொள்வதைத் தவிர்க்கவும், அடுத்த மாநாடு மொரிசியஸ் நாட்டில் நடைபெறுவதை ஏற்க மறுத்து விட்டார். அதனால் அடுத்த மாநாடு கென்யாவில் நடைபெற உள்ளது.

இலங்கையின் கடந்த கால நிகழ்வுகள் குறித்து தீர்ப்பு எழுத யாரும் காமன்வெல்த் மாநாட்டை பயன்படுத்தக் கூடாது என்று இங்கிலாந்து பிரதமர் கேமரூனுக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்து இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சா பேசி சில மணி நேரங்களிலேயே கேமரூன் யாழ்ப்பாணம் போய் இறங்கியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சர்வதேச ஊடகப்பட்டாளத்தையும் இலங்கையில் தரையிறக்கி, இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி ஓர் திறந்த ஆய்வுக்கு வழிவகுத்த மாநாடாகவே இந்த மாநாட்டைப் பார்க்க முடிந்தது.
போக்குற்றங்களை ஆதரங்களுடன் உலகுக்கு அம்பலப் படுத்திக் கொண்டிருக்கும் சனல் 4 கூட சனாதிபதியைச் சந்தித்து கைகுலுக்க முடிந்தது. இந்தச் சந்திப்பு தவிர்க்கமுடியாததாக இருந்தாலும், இலங்கையில் ஜனநாயகம் ஊடகசுதந்திரம் இன்னமும் உண்டு, என்பதனை அரசு முன்வைக்க ஒரு சாட்சியாகவும் அமைந்துள்ளது.
உண்மை எதுவாக இருந்தாலும் அதற்குள் தமக்கு தமக்கு ஆதரவானதை செய்தியாக்கும் மரபு இன்று நேற்று வந்தல்ல!
தமிழ்மக்களைப் பொறுத்த அளவில் இம்மாநாடு பல நன்மைகளைப் பெற்று தந்துள்ளது. ஒன்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கேமரூன் (15.11.2013) திட்டமிட்டு அமைத்த யாழ்விஜயம், (1948ம் ஆண்டு இங்கிலாந்து அரசிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் யாழ்ப்பாணத்திற்குப் போன முதல் வெளிநாட்டுத் தலைவர் டேவிட் கேமரூன்தான் என்பதால் இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பயணமாக பார்க்கப்படுகிறது.)

அங்கு அவர் நேரில் கண்டு,கதைத்துச் சேர்த்த உண்மை நிலைகளும், அனுபவங்களும், எதிர்காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்க உதவியாக இருக்கும் என்பதும் ஆகும்.

**தொடர்ச்சி 12 பக்கம்**

## பொதுநலவாய மாநாடு...
## இலங்கை எதிர்கொள்ளப் போகும் புதிய சவால்கள்!

கொழும்பு: காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாடு முடிவடைந்த நிலையில் இலங்கை அரசு புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதாக இலங்கையில் வெளியாகும் சண்டேடைம்ஸ் ஏடு தெரிவித்துள்ளது.
சண்டேடைம்ஸ் ஏட்டில் வெளியான செய்தி விவரம்:
இந்திய பிரதமர் மன்மோகன்சிங், கொழும்பு மாநாட்டுக்கு வராத காரணத்தினால் மீண்டும் ஒருமுறை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நேரத்தில் இலங்கை, இந்தியாவை தவிர்த்து சீனா மற்றும் பாகிஸ்தானுடன் அதிக உறவை ஏற்படுத்த முனையுமாயின் அது இந்திய - இலங்கை உறவை பெரிய அளவில் பாதிக்கும்.
மேலும் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் இலங்கைக்கு விடுத்த எச்சரிக்கை வெறுமனே இங்கிலாந்தால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்று எடுத்துக்கொள்ள முடியாது. மாறாக தமது நட்பு நாடான அமரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் ஒட்டு மொத்த எச்சரிக்கையாகவே இதனை கருத வேண்டியுள்ளது.
ஏனெனில் கேமரூன் இலங்கைக்கு செல்வதற்கு முன்னர் இது தொடர்பில் இந்திய பிரதமருக்கு விளக்கம் அளித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
முன்னர் இலங்கை சர்வதேச விசாரணை தொடர்பில் வெறுமனே வார்த்தை பிரயோகங்களை பிரயோகிப்பதை போன்றல்லாமல் இனிமேல் கருத்தை வெளியிடும் போது காமன்வெல்த் நாடுகளின் தலைவர் என்ற நிலையில் கருத்துக்களை வெளியிட வேண்டும்.
இது இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் தமது கூட்டணிகட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு மத்தியில் பெரிய பிரச்னையை ஏற்படுத்தக்கூடும். இவ்வாறு அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒரு பெண்ணின் டைரியில் இருந்து...



10 வயதில் :
நானும் அவனும் வீட்டுப்பாடம் படித்துக் கொண்டிருந்தபோது அவன் வேண்டு மென்றே என் கைகளைத் தொட்டுப் பேனா வாங்கும்போது எனக்கு ஏற்பட்ட உணர்வுதான் காதல் என்பதோ? ஒரு நிமிடம் பரவசத்தில் உடல் சிலிர்க்க, அதை மறைத்துக்கொள்ளப் பெரும் பிரயத்தனப்பட்டேன். அப்போது என் கண்களில் நான் உணர்ந்ததுதான் ஒருவேளை சந்தோஷக் கண்ணீராக இருக்குமோ?
15 வயதில் :
நானும் அவனும் தனியாக இருந்த ஒரு சமயத்தில் கொஞ்சம் எல்லை மீறிப் பிடிபட்டுக்கொண்டோம். சற்றும் தயங்காமல் அவன் பழியைத் தன்மேல் போட்டுக்கொண்டு மரண அடி விழுந்தபோதும் மற்றவர்களின் முன்னால் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவன் ரத்தம் பார்த்து என் விழிகளில் கண்ணீர் ரத்தமாக வழிந்தது.
18 வயதில் :
பள்ளிப் பிரிவுபச்சார விழா முடிந்ததும் மனம் முழுதும் இறுக்கமும் தவிப்புமாக நான் அவனிடம் குட்பை சொல்ல முயற்சித்தபோது அவன் என்னை இறுக அணைத்து 'என்னை மறந்து விடுவாயா?' என்று கலங்கிய கண்களுடன் கேட்டான். என் கண்கள் ஏற்கனவே கண்ணீர் சாகரத்தில் நனைந்திருந்தன.
21 வயதில் :
நானும் அவனும் கல்லூரிக்கு மட்டம் போட்டுவிட்டு நீண்ட பயணத்துடன் கூடிய டேட்டிங் செய்தோம். எத்தனையோ வாய்ப்புக்கள் இருந்தும், ஏன் நானே ஒருவகையில் தயாராக இருந்தும் எண்ணற்ற முறை என்னை முத்தமிட்டிருந்த அவன் அன்று ஏனோ என்னைத் தொடக்கூட இல்லை. சாதகமான சூழ் நிலையில் கூடச் சுயக் கட்டுப்பாடுடன் நடந்துகொள்ளும் அவனைப் புரிந்து கொண்ட என் கண்கள் பெருமிதத்தில் வெளியிட்ட கண்ணீரை அவனுக்குத் தெரியாமல் துடைத்துக் கொண்டேன்.

26 வயதில் :
அந்த நாள் வந்தே விட்டது. கையில் சிவப்பு ரோஜாவுடன் முழந்தாளிட்டு அவன் என்னை ப்ரபோஸ் செய்தான். அவனை அவனே முட்டா ளாக்கிக் கொண்டதைப்போல அப்படியொரு அறியாமையான வேண்டுதல். அப்போது சொன் னான்: "நான் உன்னை விரும்புகிறேனென்று நீயும் அறிந்திருப்பாய்". உன்னதப் புன்னகை புத்த என் இதழ்களின் சிருங்காரத்தை உணரவில்லை அப்போதும் கண்களில் வழிந்த அதே சந்தோஷக் கண்ணீர்.
35 வயதில் :
நான் களைப்பாக இருப்பதைப் பார்த்தால் எனக்குக் கா.ஃபி போட்டுக்கொடுத்துத் தூங்க வைத்துவிட்டு அவர் வீட்டுவேலைகளை முழுமையாகச் செய்து முடிப்பார். கடைசியில் அவர் என்னருகில் படுத்துக்கொள்ளும்போது நான் விழித்திருப்பதை அறியாமல் நெற்றியில் முத்தமிட்டுக் 'குட் நைட்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்வார். என் மூடிய விழிகளுக்குள் நன்றியின் கண்ணீர் தளும்பும்.
50 வயதில் :
சிக்கலான சமயங்களில் அவர் ஆ.ஃபீஸ் கவலையில் அல்லது உடல் நிலை சரியில்லாமல் இருந்தாலும் என்னைச் சிரிக்க வைப்பதற்காக ஜோக்கடித்து என் சிரிப்பை ரசிப்பார். ஆனால், பாவம் அப்போதும் என் ஆனந்தக் கண்ணீரை அவர் உணர முடியாமல் துடைத்துக் கொள்வேன். அவரும் சிரித்துக்கொண்டிருப்பார்.
60 வயதில் :
தனது கடைசி மூச்சின் சுவாசத்தின்போது அவர் சொன்னார் : ".எனக்கு எல்லையில்லாத காதலைக் கொடுத்தாய். என் ஆண்மையைப் பெருமிதத்துடன் வாழ் நாள் முழுக்க உணரச் செய்தாய். ஒரு காதலின் பின்னால் எனக்கு இவ்வளவு உன்னத மான வாழ்வு கிடைக்குமென்று நான் எதிர்பார்த் திருக்கவில்லை. நன்றி...

என் கைகளைப் பற்றியிருந்த அவரின் கரங்கள் இறுதியாகத் துவண்டுவிட்டன. என் விழிகளில் நிரந்தரக் கண்ணீர்த்துளிகளைப் பரிசளித்துவிட்டு எப்போதும் எங்கேயும் என்னைக் கூடவே அழைத்துச்செல்லும் அவர் இப்போது முதல் முறையாக என்னை விட்டுவிட்டுச் சென்றார். இந்த முறை நான் கண்ணீரைத் துடைக்க வில்லை...!
நன்றி.கருத்துக்களம்.



# அடடா! இன்னும் ஒரு பூமியா?




ஹாலிவுட் தயாரிப்பாளர்களின் வயிற்றில் பால்வார்க்கும் விஷயங்களில் மிக முக்கியமானது இந்த ஏலியன் சமாச்சாரங்கள் என்று சொன்னால் சட்டென ஒத்துக் கொள்வீர்கள். ஆண்டு தோறும் தவறாமல் வரும் வேற்றுக் கிரக வாசிகள் ஏதோ ஒரு வடிவத்தில், உறுமியோ, சிரித்தோ, மிரட்டியோ கல்லாவை நிரப்பி விடுகின்றனர்.

நம்மைத் தவிர வேறு ஏதோ ஒரு கிரகத்தில் உயிர்கள் வாழ்கின்றன என்பதைக் கற்பனையில் நினைப்பதே ஒரு சுகமான அனுபவம். குறிப்பாக விஞ்ஞானிகளுக்கு அது ஒரு உற்சாக டானிக். இந்தப் பிரபஞ்சத்தின் கோடானு கோடி சூரியக் குடும்பங்களில் எத்தனை பூமி போன்ற கோள்கள் இருக்கும் என்பதைத் தேடித் தேடியே, தாடியை நரைக்க விட்டு, வாழ்க்கையை முடித்துக் கொண்ட விஞ்ஞானிகள் எக்கச் சக்கம்.

பூமியைப் போன்ற கோள்கள் என்பதற்கு விஞ்ஞானம் ஒரு அளவு கோல் வைத்திருக்கிறது. கோளின் அளவு ஏறக்குறைய பூமியைப் போல இருக்க வேண்டும். ரொம்ப உறைய வைக்கும் குளிராக இருக்கக் கூடாது. அப்படியானால் சூரியனை விட்டு ரொம்ப ரொம்ப தூரத்தில் இருக்கக் கூடாது. ரொம்பச் சூடாகவும் இருக்கக் கூடாது. அதாவது சூரியனுக்கு ரொம்பப் பக்கத்தில் கொஞ்சிக் குலவவும் கூடாது. இரண்டுக்கும் இடைப்பட்ட இடத்தில் இருக்க வேண்டும். அப்போது தான் சரியான வெப்பநிலை இருக்கும்.

இப்படிப்பட்ட பல வேண்டும், வேண்டாம்களின் அடிப்படையில் கலி∴போர்னியா பல்கலைக்கழகம், மற்றும் ஹவாய் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது, இந்தப் பிரபஞ்சத்தில் பரவிக் கிடக்கும் சூரியக் குடும்பங்களில் ஐந்தில் ஒரு சூரியக் குடும்பத்தில், பூமியைப் போன்ற ஒரு கோள் இருக்கலாம் என்பதே அந்த அறிவிப்பு !


நாஸாவின் கெப்ளர் விண்கலத்தின் தகவல்களின் அடிப்படையில் வெளியான இந்த கணக்கு உலகெங்கும் உள்ள விஞ்ஞானிகளையும், விஞ்ஞான ஆர்வலர்களையும் சீட்டின் நுனியில் வந்து பரபரப்புடன் அமர வைத்திருக்கிறது ! கெப்ளர் சும்மா குத்து மதிப்பாக இந்தத் தகவல்களைச் சொல்லவில்லை, 2009ம் ஆண்டு முதல் இன்று வரை பால்வெளியில் உள்ள கோள்களைச் சுட்டுத் தள்ளிய ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் புகைப்படங்களின் அடிப்படையில் தான் இந்த புள்ளி விவரத்தைச் சொல்லியிருக்கிறது.

அதிலிருந்து முதலில் 42,557 நட்சத்திரங்கள் பிரித்து எடுக்கப்பட்டன. இதெல்லாம் சூரியனைப் போன்ற கோள்கள். அவற்றைச் சுற்றி வரும் கோள்களில் தெரிய வந்தவை 603 ! அந்த 603ல் பத்து கோள்கள் பூமியைப் போன்றவை என ஏகப்பட்ட கூட்டல் கழித்தல்களுக்கும் பின் ஒரு கணக்கு எட்டப்பட்டிருக்கிறது.

## புத்தம் புது பூமி வேண்டும்

இந்த கணக்கு கூட்டல்களெல்லாம் பூமியின் அளவு அல்லது அதைப் போல இரண்டு மடங்கு அளவு, பூமியின் வாழ்க்கைச் சூழல், பூமியின் ஈர்ப்பு விசை, தண்ணீரின் தேவை, ஒளியின் அவசியம் போன்ற பலவேறு வரைமுறைகளின் அடிப்படையில் எட்டப்பட்ட விஷயங்கள்.

இவற்றையெல்லாம் தாண்டி நினைத்துப் பார்க்க முடியாத குளிரிலோ, வினாடியில் சுட்டெரிக்கும் தீயிலோ வாழக்கூடிய உயிரினங்கள் வேறு கோள்களில் இருக்கலாம். அவை அந்தக் கோள்களின் அடிப்படைக் குணாதிசயம் என்றோ, கடவுளின் படைப்பின் மகத்துவம் என்றோ நாம் சொல்லிக் கொள்ளவும் செய்யலாம் தப்பில்லை !




பூமியைப் போன்ற கோள்களில் நமக்குத் தெரிந்து நமக்கு வெகு அருகே இருக்கும் கோள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது தெரியுமா ? 12 ஒளியாண்டு தூரம் ! அதென்ன 12 ஒளியாண்டு தூரம் ? அதாவது ஒளியின் வேகத்தில் பயணித்தால் பன்னிரண்டு ஆண்டுகளில் அந்த கோளை அடைந்து விடலாம் ! இன்னும் கொஞ்சம் கஷ்டமாகச் சொல்ல வேண்டுமென்றால் 120 டிரில்லியன் கிலோமீட்டர் தூரம் பயணிக்க வேண்டும். ஒரு டிரில்லியன் என்பது எவ்வளவு என்பதைக் கண்டு பிடிக்க ஒன்றுக்குப் பின்னால் 12 பூச்சியங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். சிம்பிள் கணக்கு தான் ! அதற்கு அடுத்தவை 50 ஒளியாண்டு தூரத்துக் கோள்கள். அட போங்கப்பா என நீங்கள் சொல்வது கேட்கிறது !

நமது பால்வெளியில் 200 பில்லியன் நட்சத்திரங்கள் உண்டென்று ஒரு தோராயக் கணக்கு உண்டு. அதில் 10 சதவீதம் சூரினைப் போன்றவை. அதாவது 20 பில்லியன். அதில் 20 சதவீதம் பூமியை ஒத்த கோள்கள் என்றால் சுமார் 4 பில்லியன் ! அதாவது நமது பால்வெளியில் சுமார் 4 பில்லியன் கோள்கள் பூமியை ஒத்த கோள்களாம் !

ஊர் தான் உலகம் என ஆதி மனிதன் நம்பினான், பின் தட்டையான நாடே உலகம் என்றான், பிறகு சூரியக் குடும்பம், பால்வெளி, என பிரிந்து வளர்ந்து இப்போது நம்மைச் சுற்றி கோடானு கோடி கோள்கள், அவைகளில் கோடானு கோடி உயிர்கள் இருக்க சாத்தியம் என அறிவியல் வியப்பூட்டுகிறது.

எனினும். சயின்ஸ் ∴பிக்ஷன் ஹாலிவுட் படங்களைப் போல ஏதேனும் மாயாஜாலம் நடந்தாலொழிய அத்தகைய கோள்களில் எட்டிப் பார்ப்பது இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு நமக்குச் சாத்தியப் படும் என தோன்றவில்லை.

**இப்போதைக்கு இத்தகைய அறிவியல் தகவல்களைப் படித்து கனவுகளை வளர்த்துக் கொள்வோம் !**

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450


ASIJAH EUROPE
Tel: +31 511 76 00 06
Tel: +31 511 76 00 07
Fax: +31 511 76 00 08
Mobile: +31 6 12 17 55 99
புதிய முகவரி:
VOORSTRAAT 32
9291 CK KOLLUM
THE NETHERLANDS
Email: info@asijah.com
Email: asijaheurope@hotmail.com



ASIJAH EUROPE
Wholesale Distributors of finest Sri Lankan Grocery Foods

ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.
Web: asijah-europe.com

# ரஷ்யாவில், மிகப் பழமைவாய்ந்த விஷ்ணு சிலை கண்டுபிடிப்பு!



MOSCOW: An ancient Vishnu idol has been found during excavation in an old village in Russia's Volga region, raising questions about the prevalent view on the origin of ancient Russia. The idol found in Staraya (old) Maina village dates back to VII-X century AD.

Staraya Maina village in Ulyanovsk region was a highly populated city 1700 years ago, much older than Kiev, so far believed to be the mother of all Russian cities.

மாஸ்கோ: விஞ்ஞானம் வளர வளர அதன் உதவியுடன் மெய்ப்பொருளும் தோண்டி எடுக்கப்படுகின்றது. ரஷ்யாவில், புராதன, விஷ்ணு சிலையை, தொல்லியல் துறை ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.ரஷ்ய நாட்டில், வோல்கா பகுதியில் உள்ள, மாய்னா என்ற கிராமத்தில், கடந்த, ஏழு ஆண்டுகளாக, தொல்லியல் துறையைச் சேர்ந்த வல்லுனர்கள் அகழ்வாராய்ச்சி பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சி குறித்து, ஆய்வுக் குழுவைச் சேர்ந்த கோஜ்வின்கா கூறியதாவது:

மாய்னா கிராமத்தில், 1,700 ஆண்டுகளுக்கு முன்பு, ,8,000 பேர் வசித்துள்ளனர்.இப்பகுதியில், ஏழு மற்றும் 10ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட, மகாவிஷ்ணுவின் சிலை கிடைத்துள்ளது.

இதுவரை நடந்த அகழ்வாராய்ச்சியில் புராதன நாணயங்கள், பதக்கங்கள், மோதிரங்கள் மற்றும் ஆயுதங்கள் கிடைத்துள்ளன.இவ்வாறு கோஜ்வின்கா கூறியுள்ளார்.இந்த புராதன கிராமத்தின் தோற்றம் மற்றும் அழிவு குறித்த சர்வதேச கலந்துரையாடல் நிகழ்ச்சியில், தற்போது கிடைத்த மகாவிஷ்ணு சிலை, காட்சிக்கு வைக்கப்பட்டது.

## ரிக் வேதத்தில், இப்பகுதி, புனிதத் தலமாகவும், 722 பறக்கும் விமானங்கள் இருந்ததாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

ரிக் வேதத்தில், இப்பகுதி, புனிதத் தலமாகவும், 722 பறக்கும் விமானங்கள் இருந்ததாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சிலை கிடைத்திருப்பதன் மூலம், ரஷ்யா மற்றும் இந்தியாவுக்கு இடையில் பண்டைக் காலத்திலேயே தொடர்பு இருந்தது உறுதியாகி உள்ளது. பெருமாள் கோவில்களில், பூஜை, அர்ச்சனைகள் எவ்வாறு செய்யப்படுகிறதோ அதேபோன்ற, பூஜை, அர்ச்சனைகள், ரஷ்ய சர்ச்சுகளில் செய்யப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி பெயரில், அவர்களும் ஒரு விழாவைக் கொண்டாடுகின்றனர்.

# நெஞ்சில் நிறைந்த காந்திஜி!



ஒரு சமயம் பம்பாயில் அன்னி பெஸண்டு அம்மையாரின் பிறந்த நாள் விழா கூட்டத்திற்கு மகாத்மா காந்திஜி தலைமை தாங்க வந்திருந்தார்.

இச்சமயம் இவ்விரண்டு பெரியவர்களுக்குமிடையே கடுமையான கருத்து வேற்றுமை இருந்தது. எனவே காந்திஜி அம்மையாரை கூட்டத்தில் தாக்கிப் பேசுவார் என்று பலர் எதிர்பார்த்திருந்தனர்.
ஆனால் காந்திஜி "நான் பெசன்டு அம்மையாரை வெகு நாட்களாக அறிவேன் "அனேக ஆண்டுகளுக்கு முன் லண்டன் விக்டோரியா ஹாலில் இவரது பேச்சைக் கேட்டேன் அப்போதிருந்தே நான் இவரிடம் பெரு மதிப்புக் கொண்டிருக்கின்றேன்.


அம்மையார் செய்யும் சேவைகளை ஆதிஷேன் போல் ஆயிரம் நாவு பெற்றாலும் என்னால் எடுத்துச் சொல்ல முடியாது இன்று எனக்கும் அவருக்கும் இடையே கருத்து வேற்றுமை இருக்கின்றது."சூரியனுக்கெதிரே" நாம் கண்ணை முழுவதும் திறக்க முடியாவிட்டால் அது சூரியனுடைய குற்றமல்ல பார்க்கும் நம் கண்களின் குற்றமே.

நான் மனம்விட்டுச் சொல்கிறேன். எனக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்படும் போது அது என்னுடைய தவறு என்றே நான் எண்ணுகின்றேன் என்றார்.

நமக்கு மிகவும் பிடித்த ஒருவரைப் பாராட்டிப் பேசுவதுமிகவும் எளிதான செயல். ஆனால் காந்திஜியோ தன்னிடம் கருத்து வேறுபாடு கொண்டிருந்தவரையும் மிகவும் புகழ்ந்து தன்னைக் குறைத்துப் பேசி நம் நெஞ்சில் அழியா இடம் பெற்றுவிட்டார்.



# விண்வெளியில், விவசாயம்!








ஆம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் விரைவிலேயே காய்கறிகளை பயிரிட்டு அதனை உணவாக்கிக்கொள்ளும் நடைமுறையை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா கொண்டுவர இருக்கின்றது.

பூமியில் இருந்து கிட்டத்தட்ட 435 கிலோ மீற்றர் உயரத்தில் மிதந்துகொண்டிருக்கிறது சர்வதேச விண்வெளி நிலையம்.இங்கிருந்து விஞ்ஞானிகள் அங்கு சென்று பல நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் மிக முக்கியமாக அன்றாட உணவுகள், அனைத்தும் பூமியில் இருந்துதான் செல்கின்றன. அப்படி ஒருநாள் உணவை அனுப்பிவைக்க சுமார் ஆறரைலட்சம் ரூபாய் செலவாகிறதாம். எனவேதான் விண்வெளிநிலையத்தில் இருப்போருக்கான உணவை அங்கேயே பயிரிட்டு வளர்த்துக்கொள்ளும் ஆராய்ச்சியை நாசாவுடன் இணைந்து கையில் எடுத்திருக்கிறது கெனடி விண்வெளி மையம்.
இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கும் பயிர் இது. லெட்ரூஸ் என்னம் ஒரு வகை இலைக்கோஸ்.
எந்த சூழ்நிலையையும் சமாளித்து வளரும் பயிர் இது. விண்வெளியில் இதை வளர்க்க விசேட வளர்ப்பு தொட்டியையும் வடிவமைத்திருக்கின்றோம். இந்தத் தொட்டியில் உள்ள சிவப்பு,நீலம்,பச்சை,நிற எல்.ஈ.டி. (LED) மின்குமிழ்கள், சூரிய வெளிச்சத்தின் வேலையைச் செய்யும். மேலும் செடிகளில் ஈரப்பதத்தை தக்கவைக்க விசேட தண்ணீர்பாசன முறையையும் இணைத்திருக்கிறோம். இது தண்ணீர் சிக்கனத்தையும் மனதில்வைத்து உருவாக்கப்பட்டது. என்கிறார் இந்த வேலைத்திட்டத்திற்கு தலைமை ஏற்றிருக்கும் ஜியோயா மஸ்ஸா
இந்த விண்வெளி பயிரிடலுக்காக மைக்ரோவேவ் அவண் அளவே உள்ள ஒரு விவசாயத் தொட்டி உருவாக்கப்பட்டுள்ளது. வரும் மார்கழி 09 ம் திகதி அளவில் ஸ்பேஸ் எக்ஸ் சி.ஆர்.எஸ் 3 என்ற விண்கலம் மூலம் ,அது சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படவும் இருக்கிறது.

“ஆனால் எடுத்த எடுப்பில் இந்தச் செடி வளர்த்து விண்வெளியில் உள்ள விஞ்ஞானிகள் சாப்பிட்டுவிட முடியாது. முதலில் நாங்கள் சொல்லும்படி இச் செடி வளர்த்துப் பறித்து, அவர்கள் பூமிக்கு அனுப்பிவைப்பார்கள். பூமியில் லாத வேறு சூழலில் வளர்த்ததால், அதில் வேறு ஏதேனும் மனிதனுக்குத் தேவை இல்லாத மூலக்கூறுகள் உள்ளதா என நாங்கள் ஆராய்ச்சிக் குட்படுத்துவோம். உண்ணலாம் எனத் தெரிந்த பிறகே இதனை உண்ண அனுமதிப்போம்.” என்கிறார் இன்னொரு பொறுப்பாளர் ஹோவார்ட் லெவின்
வெஜ்ஜி எனப்பெயரிட்டிருக்கும் இத்திட்டம் வெற்றியடைந்தால் விண் வெளியில் வெற்றிகரமாக விவசாயம் நடக்கும். யார் கண்டது? அங்கிருந்து மரக்கறிகள் இங்கு இறக்குமதி செய்யவேண்டிய நிலைகூட வரலாம். நன்றி: தமிழர்தகவல்-கனடா

## கனடாவில் “பிஞ்சு முகத்தின் தேடல்” அறிமுக விழா



கடந்த 14.10.2013 கனடாவில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் 70 வது பிறந்ததினத்தில், அவரது படைப்பான **பிஞ்சு முகத்தின் தேடல்** அறிமுக விழா இடம்பெற்றது. மேற்படி நூல் **வெற்றிமணியின் 21** வது வெளியீடாகும். அந்நூலின் வெளியீட்டுவிழா கடந்த 06.04.2013 யேர்மனியில் சிறப்பாக இடம்பெற்றது. மேலே கனடாவில் இடம்பெற்ற அறிமுகவிழாவின் சில நிழல்படங்களைக்காணலாம்.



## கனடாவில் சிறுவர்க்கான இறுவட்டு வெளியீடு

புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ்ச் சிறுவர் பயன்பாட்டுக்கு உதவக்கூடிய (சீ.டீ) “பாச்செண்டு” எனும் இறுவட்டு ஒன்று கனடாவில் கடந்த ஆவணித் திங்கள் 23ஆம் நாள் வெளியிடப்பட்டது.
சிறுவர்க்கான வெளியீடுகள் பலவற்றை வெளியிட்ட முன்னாள் அதிபர் சபா. அருள்சுப்பிரமணியம் அவர்களின் 15 பாடல்கள் அடங்கிய இறுவட்டு திரு. வர்ண இராமேஸ்வரன் அவர்களது இசையமைப்போடு வெளி வந்துள்ளது. தமிழ்கற்க விரும்பும் சிறுவரின் சொற்களஞ்சியத்தைக் கூட்டும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. தமிழபிமானிகளின் ஆதரவு நாடப்படுகிறது. தொடர்புகட்கு: arul.saba25@gmail.com (905) 479-5375




# நோர்வேயில் இந்துக்களுக்கு என்று ஓர் மயானம்!

## ஐரோப்பாவில் அது இங்குதான் உண்டு!





தமிழர் வாழாத நாடு இல்லை. ஆனால் தனக்கு என்று ஒரு நிலம் இல்லை. அதாவது ஒரு நாடு இல்லை என்பது தொடர் பேச்சாக அமைந்துவிட்டது. ஆடி அடங்கும் வாழ்க்கைதான் ஆனால் ஆறடிநிலமென்றாலும் வேண்டாமா? உறங்குவதற்கு. இதோ அந்தக் குறையை நோர்வே நாட்டில் தீர்த்து வைத்துவிட்டார்கள். பிறப்புண்டேல் மரணமும் உண்டு. பிறக்கும்போது எந்தமதமும் கிடையாது. பிறந்தபின்பு எதாவது ஒரு மதநம்பிகை வந்து வாழ்வை வளமாக்கும். அவரவர் தாம்கொண்ட மதத்தின் அடிப்படையிலேயே தங்கள் மரணச்சடங்கைக் நடத்த விரும்புவர். இந்த விருப்பத்திற்கு சுதந்திரமாக வழிசமைத்துக் கொடுத்துள்ளது நோர்வே நாடு.

எத்தனையோ நாடுகளில் இந்துக்கள் வாழ்ந்தாலும் அந்த நாடுகளில் இந்துமயானம் இருப்பது இல்லை. (ஆசியாவில் அல்ல) இப்போ நோர்வேயில் உள்ள இந்துமாமன்றத்தின் பெருமுயற்சியால் இங்கு இந்து மயானம் ஒன்று அமைக்கப்பட்டது அவர்களின் பெரும் சாதனையாக அமைந்துள்ளது. இந்த இந்து மயானத்தை Rogaland நகரசபை அமைத்துக் கொடுத்துள்ளது.

ஐரோப்பாவிலே இங்குதான் இந்து மயானம் இருக்கிறது. நோர்வே நாட்டில் Stavanger Rogaland என்னுமிடத்தில் சென்ற 28 வருடங்களாக இந்துமாமன்றம் 250 உறுப்பினர்களைக் கொண்டு இந்து சமயத்தவர்களால் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்த மன்றத்தை ஆரம்பித்தவர் இலங்கையிலிருந்து இங்கு வந்த முதலாவது தமிழர் திரு ஜெகதீஸ்வரன் நாராயணசாமி அவர்களாவர். அந்நகரத்தில் மாதத்தில் வரும் கடைசி வெள்ளிக்கிழமை தோறும் சுவாமிப் படங்களை வைத்து ஆராதனைகள் நடாத்தி வருகின்றார்கள்.





இங்கு நிரந்தர இடத்தில் ஒரு ஆலயம் அமைப்பதற்காக ஆலோசனைகள், கருத்துக்களைக் கேட்பதற்காக ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்கள் அவர்களுடன், ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன் அவர்களையும் அழைத்திருந்தனர். அங்கு அன்று நடைபெற்ற ஆலய பூஜைகளின் பின், வந்திருந்த அடியார்களின் இந்துசமயம் சம்பந்தமான கேள்விகளுக்கு மிகவும் விளக்கமான பதில்களை குருக்கள் வழங்கினார். இது சுமாராக இரண்டரை மணித்தியாலம் வரை நீடித்தது. அங்கு வாரம்தோறும் சனிக்கிழமைகளில் தமிழ் வகுப்பு நடத்தப்பட்டுவருவது சிறப்பாகும்.

## சுன்னாகம் றோட்டறக் கழகத்தின் புதிய தலைவியாக ஸ்ரீரங்கநாயகி



ஸ்ரீரங்கநாயகி.

தன்னலம் கருதாது இளம் வயதிலேயே மாணவர் கல்வியிலும் ஏழ்மையில் தவிக்கும் மக்கள்மீதும் அன்பும் அக்கறையும் கொண்டு செயல்பட்ட செயல் வீராங்கனை ஸ்ரீரங்கநாயகி.

இந்தஇளம் வயதிலே அவருக்கு பதவிகள் நாடிவர மேல் குறிப்பிட்ட குணவியல்புகள் காரணமாகின. அவர் வெற்றிமணியின் கல்விப்பணிக்கும் யாழ்மண்ணில் கரம் கொடுத்தவர். அவரை வெற்றிமணிக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை செல்வி சுபோதினி சபாரத் தினம் அவர்களைச்சாரும்.

விளையாட்டுத்துறையில் பட்மின்ரன், கிறிக்கற், கூடைப்பந்தாட்டம், கால்பந்தாட்டம் போன்ற பல் துறைவிளையாட்டு வீராங்கனையாக மட்டுமன்றிபேச்சு கவிதை கட்டுரை போன்றவற்றில் சிறந்து விளங்குபவர்.

சுன்னாகம் றோட்டறக் கழகத்தில் 2006 காலப்பகுதியில் இணைந்து செயலாளர், இதழாசிரியர் போன்ற பதவிகளை வகித்து இக்கழகத்தில் இரண்டாவது பெண் உறுப்பினராக தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். இவரது தலைமையில் கழகம்பல சாதனைகள் செய்ய வெற்றிமணி வாழ்த்துகின்றது.


Gopara Gnanam
Rheinische Str. 79, 81. 44137 Dortmund. Tel. : 0231/5450028
Mobile : 0171 3365 42 | www.goparagnanam.com | goparagnanam@hotmail.com
SALE
நத்தார்,புதுவருட
அதிரடி மாபெரும் மலிவு விற்பனை! 16.12.2013-31.12.2013
எங்கள் பொருட்களின் உங்கள் முன்னிலைக்கு தவறவிடாதீர்கள்
TRS மைசூர்பருப்பு 2 Kg Buy 2 Get 1 Free- TRS உழுத்தம் பருப்பு 2Kg Buy 2 Get 1 Free
தஞ்சாவூர் பொன்னி அரிசி 10 Kg 9.99 € -சிவப்புபச்சை அரிசி 5 Kg Buy 1 Get 1 free 6.99.€
அவித்த கோதுமை மா 5Kg 5.99 € - Kings Curry Powder 900g 5.99€
வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
Tel: 0231/5450028 Mob: 01713306542
Rheinische Str.81
44137 Dortmund




பருத்தித்துறை அருள்மிகு கோட்டுவாசல்
ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம்
புனரமைக்கப்பட்டு
கும்பாபிஷேகப் பெருவிழா





விரைவில் கொன்றல் மரத்தாள் அம்மன் அருளால் நடைபெறவுள்ளது. இவ் அரும்பணி நிறைவுற்று, அருள்பெருக்கெடுக்க, நீங்கள் மனமுவந்து பெருநிதி அளியுங்கள்!
ஆலய தர்மகத்தா ஏ.சந்திரமூர்த்தி
Bank of Ceylon (இலங்கை வங்கிக்கணக்கு) பருத்தித்துறை
கணக்கு.இல:73 62 78 90 வங்கி இல.00073 42 592
ஆலயத்திருப்பணிச்சபை நிர்வாகிகள் வீ.ராமச்சந்திரன், சி.தீபானந்
Tel: 0094 77 65 20 315 சி.சக்திவேல்: 0049 15213016154

# குறைகளை நிறைவாக மாற்றிய இருவர்!







இந்த உலகில் எந்த குறையுமின்றி இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், குறையோடு பிறந்தவர்களும் உள்ளனர். அவ்வாறு குறையில்லாமல் சாதித்தவர்களை விட, குறையிருந்து சாதித்தவர்கள் தான் அதிகம். அவர்களது சாதனைகளுக்கு அளவே இல்லை. இந்த காலத்தில் குறையில்லாமல் இருப்பர்களுக்கே, தன்னம்பிக்கை இல்லாமல், வாழ்வில் தோற்றுப் போய்விட்டால், மறுபடியும் அதிலிருந்து மீள்வதற்கு நீண்ட நாட்கள் அல்லது வருடங்கள் ஆகின்றன.

ஏனெனில் அவர்களுக்கே அவர்கள் மீது நம்பிக்கை இல்லை. பின் எப்படி வரமுடியும். ஆனால் குறையோடு பிறந்தவர்களைப் பார்த்தால், அவர்களுக்கு குறை இருக்கிறது என்ற எந்த ஒரு எண்ணமும் இல்லாமல், தன்னம்பிக்கையுடன் எந்த ஒரு செயலையும் துணிச்சலோடு செய்து, சாதனை படைத்து வருகின்றனர். மேலும் சிலரும் குழந்தைப் பருவத்திலிருந்து குறை உள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் கூட தனக்கு இப்படி ஆகிவிட்டதே என்று மனதை தளர விடாமல், தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு, சாதித்துள்ளனர்.

எனவே இத்தகையவர்களை பார்த்தாலாவது, எந்த குறையுமின்றி தன்னம்பிக்கை இழந்து இருப்பவர்கள், வாழ்க்கையை துணிச்சலோடு வாழ்ந்து காட்டி, ஒரு நல்ல நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணத்தை வரவழைக்க வேண்டும். சொல்லப்போனால் குறையோடு இருப்பவர்களை விட, குறையில்லாமல் இருப்பவர்களுக்குத் தான் தன்னம்பிக்கை குறைவாக இருக்கும். இப்போது அவ்வாறு குறையோடு இருந்தும், அதிலும் கேட்கும் திறனை இழந்தும் சாதித்த, வரலாற்றில் இடம் பெற்றிருக்கும் பிரபலமான இருவரைப் பற்றி பார்ப்போமா!!!

### தாமஸ் ஆல்வா எடிசன்


தாமஸ் ஆல்வா எடிசன் வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழிலதிபர்களில் ஒருவர் தான் தாமஸ் ஆல்வா எடிசன். இத்தகையவர் தான் தற்போது அனைவரது வீட்டில் எரியும் பல்புகளை கண்டுபிடித்தவர். இவருக்கு காது கேட்காது. ஏனெனில் குழந்தைப் பருவத்தில் இவருக்கு வந்த ஒரு நச்சுக் காய்ச்சல், அவரது காதில் உள்ள சவ்வை பாதித்து, காது கேட்டகாமல் போயிற்று.

### லூட்விக் ஃவான் பேத்தேவன்

லூட்விக் ஃவான் பேத்தேவன் **Ludwig van Beethoven** இவர் ஒரு ஜெர்மன் இசையமைப்பாளர் மற்றும் இசைக்கலைஞர். அவரிடம் உள்ள ஒரு அற்புதமான ஒரு விஷயம் என்னவென்றால் இவருக்கும் காது கேட்காது. ஆனால் இவர் தனது திறமையால் ஒரு சிறந்த இசையமைப்பாளர்களில் ஒருவராக உள்ளார். மேலும் இவரது காது செவிடு அடைந்திருப்பது, இதுவரை அவரது இசையில் ஒருபோதும் தெரிந்ததில்லை. அவ்வளவு எளிமையான முறையில் ஒரு பிழையுமின்றி இசையை அமைப்பார்.







## ”கிரேக்கனின் புரிசுப்பொருளை நம்பாதே”

### இப்படிச் சொல்லக் காரணம் இதோ!

'ட்ராய்' நகரினை முற்றுகையிட்ட மாபெரும் கிரேக்கப்படை நீண்ட நாட்களாக அந்த நகரத்தினை வெல்லமுடியாமல் கடற்கரையில் நின்றது. சில நாட்கள் அமைதிகாத்த கிரேக்கப்படைகள் சென்றுவிட்டது என்று நம்பிய 'ட்ராய் படைகள்' கடற்கரையில் ஒரு பெரிய மரக்குதிரை இருப்பதை கண்டார்கள். அதன் அருகிலே ஒரே ஒரு கிரேக்கவீரன் நின்று கொண்டிருப் பதைக் கண்டார்கள்.

தன்னை தனியே விட்டுவிட்டு கிரேக்கப் படை சென்று விட்டதாக 'சினான்' என்கிற அந்த கிரேக்க படைவீரன் சொன்னான். “ ஏதேன்” என்கிற கடவுளின் கோவிலுக்கு செய்யப்பட்ட அழிப்பிற்கு பரிகாரமாக இந்தக் பெரிய மரக்குதிரையை 'பரிசுப்பொருளாக' கிரேக்கர்கள் விட்டுச் சென்றிருப்பதாக ”ட்ராய்” நகரமக்களிடம் சொன்னான்.

இதை நம்ப மறுத்த ட்ராய் நகரின் மதகுருமார் ”லகூன்” Laocoön எனும் ஒருவர் , “ கிரேக்கர்களிடம் இருந்து பரிசுப்பொருளை கொண்டுவருபவரையும் நம்புவதற்கில்லை” (I fear Greeks, even those bearing gifts) என்றார். எச்சரித்த மதகுருமார் அன்றிரவே கொலை செய்யப்பட, பிறரின் எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு ”ட்ரோஜான் குதிரை” யாராலும் வெல்ல முடியாத இரும்புக்கோட்டையான “ட்ராய்” நகரத்திற்குள் இழுத்து வரப்பட்டது

சரியான நேரம் அறிந்து குதிரைக்குள் ஒளிந்திருந்த கிரேக்க வீர்ர்களிடம் ஒற்றைக் கிரேக்கவீரன் 'சினான்' சமிக்கையை கொடுக்க, இரும்புக் கோட்டையாக இருந்த 'ட்ராய்' நகரத்திற்குள் முட்டாள்தனத்தினால் இழுத்து வரப்பட்ட ”ட்ரோஜான்-குதிரையில்”, இருந்து வெளிப்பட்ட நயவஞ்சக வீரர்கள் உறக்கத்திலிருந்த 'ட்ராய்' நகர மக்களை வேட்டையாடினார்கள். எதற்கும் அசையாத இரும்புக்கோட்டை சில கணத்தில் வீழ்ந்தது.


இதுவே பின்னாளில் ”கிரேக்கனின் பரிசுப்பொருளை நம்பாதே” என்னும் சொல் வரக்காரணமானது!







# மூளை பக்கவாதம் இருந்தால் ஏற்படக்கூடிய முக்கிய 8 அறிகுறிகள்!!!



மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகளினால் மூளையின் செயல்பாடு கொஞ்சம் கொஞ்சமாக குறையும் நிலையே மூளை பக்கவாதம் என்று அழைக்கப் படுகிறது. மூளை பக்கவாதம் ஏற்படுவதற்கான காரணங்கள்: இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் பாதிக்கப்படுவதான இஸ்கீமியா என்றழைக்கப்படும் நிலையினாலோ அல்லது இரத்த ஒழுக்கினாலோ மூளை பக்கவாதம் ஏற்படக்கூடும். ஆனால் சாமான்ய மக்கள், மூளை பக்கவாதம் என்றால் என்ன என்றோ, அதன் வெளிப்பாடுகள் பற்றிய தெளிவோ, அதற்கான உடனடி சிகிச்சைககள் பற்றியோ, இதனால் பாதிக்கப்பட்டோரை இதிலிருந்து மீட்பது எப்படி என்பது பற்றியோ பெரும்பாலும் அறிந்து வைத்திருப்பதில்லை. சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், புகைப்பிடித்தல், உடல் பருமன், அதிக கொழுப்புச்சத்து மற்றும் இதய நோய்கள் போன்றவை மூளை பக்கவாதம் ஏற்படுவதற்கான மிக முக்கிய அபாயகரமான காரணிகளாக விளங்குகின்றன. இங்கு அந்த மூளை பக்கவா தத்தின் சில முக்கிய எச்சரிக்கை அறிகுறிகளை பட்டியலிட்டுள்ளோம். அதைப் பார்ப்போமா!!!

முகச் சாய்வு நோயாளியின் முகம் ஒரு பக்கமாக சாய்ந்து காணப்பட்டாலோ அல்லது முகத்தின் ஒரு பக்கம் மட்டும் மரத்துப் போனது போன்று உணர்ந் தாலோ, உடனடியாக மருத்துவ உதவி பெறுவது அவசியம். இதற்கிடையில், நோயாளியை புன்னகைக்கச் சொல்ல வேண்டும். ஒருவேளை அவரால் சரியாக புன்னகைக்க இயலவில்லை யெனில், தாமதிக்காது மருத்துவமனைக்கு விரைவாக அழைத்துச் செல்ல வேண்டும்.

கைகள் வலுவிழத்தல் பக்கவாத நோயாளி, தன் ஒரு கையோ அல்லது இரு கைகளுமோ மரத்துப் போய் விட்டது போன்றோ அல்லது வலுவிழந்தது போன்றோ உணர்வார். அந்நேரத்தில் அவரது கையை உயர்த்திச் சொல்லிப் பாருங்கள். அவர் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால், அவரது கை கீழ் நோக்கி விழுவதைக் காணலாம்.

பேசுவதற்கு சிரமப்படுதல் பக்கவாதத்தினால் பாதிக்கப்படும் போது நோயாளிகளின் பேச்சு குழறுவதைக் காணலாம். சுலபமான கேள்விகள் சிலவற்றை கேளுங்கள் பொதுவாக அவர்களால் சரியாக பதிலளிக்க முடியாது. அதனால் அவர்கள் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்ப தை உறுதி செய்து கொள்ள, மீண்டும் மீண்டும் அவர்களை பதிலளிக்கச் சொல்லி சோதித்துப் பாருங்கள்.சமன்பாட்டை இழத்தல் பக்கவாத நோயாளிகள் அவர்களது உடலின் சமன்பாட்டை இழந்து, சிறு அசைவுக்கும் சிரமப்படுவதோடு, ஒருங்கிசைவு இன்றியும் அவதிப்படுவர்



குடையும் தலைவலி காரணம் ஏதுமின்றி, ஒருவர் திடீரென தாங்கவியலாத தலைவலியால் அவதிப்படுவாராயின், அது பெரும்பாலும் இரத்த ஒழுங்கினால் உண்டாகக்கூடிய பக்கவாதத்தின் அறிகுறியாகவே இருக்கும்.

குறைந்த கால நினைவிழப்பு நினைவிழத்தலினால் நோயாளி பெரும் அவதிக்குள்ளாவார். குறைந்த கால அவகாசத்திற்குள்ளாகவே, சற்று முன் நிகழ்ந்த எதையும் அவர்களால் நினைவில் நிறுத்திக் கொள்ள இயலாது.

பார்வைக் கோளாறு திடீரென பார்வை இருளடைதல் அல்லது பார்வைக் கோளாறுகள் போன்றவையும் மூளை பக்கவாதத்தின் அறிகுறிகள் தான்.

தலைசுற்றல்.ஃ.சமநிலை இழத்தல் மூளை பக்கவாதம், ஒருவர் தன் சமன்பாட்டை இழக்கும் படி செய்யும். இதனார் பாதிக்கப்பட்ட ஒருவர் தகுந்த காரணம் ஏதுமின்றி தன் உடலின் சமநிலையை இழக்க நேரிடும்.







அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

# இலகுவான இளமைதரும் டயட் இதோ!

## இரண்டு நாள்விரதம்!

இன்று இளைஞர்கள் சரி முதியவர்கள் சரி பேசும் பொதுவான விடையம் ஆரோக்கியமும், உடல்கட்டுமே! (டயற்றிங் Dieting)
அவர்கள் அழகாகவும் ஆரோக்கியமாகவும காட்சியளிக்க பல முறைகளைக்கையாள்வார்கள். சிலர் உடல்பயிற்சியையும். சிலர் நடைப்பயிற்சியையும் மற்றும் சிலர் உணவுவகைகளாலும் இதைவிடச் சிலர் மருந்து மாத்திரைகளும் தங்கள் எடையைக்குறைக்க முயல்வர்.

இதில் மரதன் ஓட்டத்தில் உலகக்கிண்ணம் பெற்றவர் 101 வயது. (1.4.1911) இவர் மரதன் ஓடியவர் இந்திய நாட்டைச்சேர்ந்த Fauja Singh (பஞ்சாபி). இவர் இங்கிலந்தில் வசிப்பவர். இவர் ஓடியது கொங்கொங் நாட்டில். 10 கி.மீ மரதன் தொடர்ந்து சிறப்பாக ஓடிமுடித்தவர். இவர் லண்டனில் 26 மைல்களை 7. மணித்தியாலம் 49 நிமிடத்தில் ஓடியவர். இவரே உலகில் அதிய உயர்வயதில் ஓடிய மரதன் ஓட்டக்காரர்.




People call me “the Turbaned Tornado” I'm the oldest marathon runner in the world. I ran the London Marathon in seven hours and 49 minutes. I've completed eight other marathons in the past 12 years, including the Toronto Waterfront Marathon, which I ran when I was 100 years old. How do I do it? Simple: firstly, I eat only vegetarian foods I am told that vegetarians tend to live an average of six to 10 years longer than meat-eaters do. But I also walk or jog every day. Age may bring wisdom, but if you want stamina, endurance and a lifetime of good health, turn to nutritious vegetarian foods.

இவரை இங்கு ஏன் குறிப்பிடுகின்றோம் என்றால்... இவருக்கு எந்த நோயும் இல்லை. எந்த மருந்தும் எடுக்கத்தேவையும் இல்லை. இதற்குக்காரணம் இவரது உணவு முறையும், ஓட்டமும்தான். இவர் அதிக அளவு விரும்பி மரக்கறிகளையே உண்பார். மரக்கறி என்று சொல்லிவிட்டு கோப்பை கோப்பையாக அடைவதில்லை. அவர் என்றுமே ஒரு குழந்தை உண்ணும் அளவுதான் உண்டு வந்தார்.
1930 ஆண்டில் உலகப்போர் நடந்தபோதும், வேறு உணவுப்பஞ்சம் பல வந்தபோதும், அதிகம்பேர் பசியால் மரணிப்பர் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அப்படியான காலத்தில்தான் அவர்களது ஆயுள் 6 வயது அதிகரித்ததாம். காரணம் அளவு சாப்பாடு.(யுத்தகால கொடுமைகளைவிட்டு உணவுப்பழக்கத்தைமட்டும் நோக்கவும்)

பலவிதமான டயட்வைகள் உண்டு GM, Atkins இன்னும் பல. ஆனால் இந்த டயட்டிற்கு ஏதாவது ஒரு பின்விளைவு இருக்கும். சில நாம் தொடர்ந்து செய்யமுடியாது அதன் மீது ஆர்வம் இல்லாமல் போய்விடும்.




**சிவஜெனனி அரவிந்தன்**

### இரண்டு நாள்விரதம்!

இந்த டயட் ஒரு வாரத்தில் இருதினங்கள் விரதம் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு வெள்ளி புதன் அல்லது திங்கள் வியாழன் இப்படி எதுவாக இருந்தாலும் இருதினங்கள் இருக்க வேண்டும். விரதம் என்றால், ஒன்றும் சாப்பிடாமல் அல்ல. பெண்ணாக இருந்தால் ஒரு நாளைக்கு 500 கலோரிகளும், ஆணாக இருந்தால் 600 கலோரிகளும் ஒரு நாளைக்கு (விரதவேளையில்) உண்ணலாம்.

உதாரணத்திற்கு அவித்த முட்டையில் 155 கலோரி, வாழைப்பழத்தில் 89 கலோரி ஒரு உருளைக்கிழங்கில் 77 கலோரி. அப்பிளில் 52 கலோரி. இப்படி யாவற்றிற்கும் கலோரிகள் உண்டு. விரதம் இருப்பதனால். எம்மில் இருக்கும் கெட்ட கொல்ஸ்ரோல் இரத்த அழுத்தம், சக்கரைவியாதி, புற்றுநோய் ஆகியவற்றைக் குறைக்கலாம். இதுமட்டுமல்லாது இளமையாகவும் தோற்றமளிப்பீர்கள்.
IGF 1 ஹோர்மோன் நாம் உண்ண உண்ண புதிய புதிய கலங்களை உருவாக்கி வருவது. ஆனால் நாம் விரதம் இருக்கும் போது IGF 1 குறைக்கப்பட்டுவிடும். இதனால் புதிய கலங்கள் உற்பத்தி குறைந்து பழுதடைந்த கலங்கள் புதுப்பிக்கப்படும். புதிய கலங்கள் உருவாவதைவிட பழுதடைந்த கலங்கள் புதிப்பிக்கப்படும்போதே நாம் இளமையாக இருப்பதை காட்டும். (உடல் சருமம் சுருங்கி காய்ந்து முறுகி கரும்புள்ளிகளாகவும் இருக்கும் பகுதி புதுப்பிக்கப்பட்டால் ஆக எப்படி இருக்கும் வனப்பு!) dann பழுது கூட சரிப்படுத்த வாய்ப்பு உண்டாகும். வயதுபோனபின்பு வரும் நோய்களும் இதனால் குறையலாம்.
இந்த IDF1 மட்டத்தை எப்படிக் குறைப்பது என்றால் கலோரிகளைக் குறைப்பதனாலும் புரதச்சத்து அளவாக் உண்டாலும் இந்த IGF 1 மட்டம் குறைவுடன் எமது எடையும் குறையும்.

### பசியோடு படியாதே என்று இனிச் சொல்ல முடியுமா?

அமெரிக்காவில் ஒரு எலி ஒன்றைப் பசியிருக்கவிட்டு அதன் நரம்புக்கலங்ளை பரிசோதித்துள்ளனர். அதில் புதியகலங்கள் உருவாகியிருந்தது கண்டுபிடிக் கப்பட்டது. புதியகலங்கள் உருவானமையால் புத்திக்கூர்மை விருத்தியடைந் துள்ளது. பசி எலியை புத்திசாலியாக்கிறது. நமக்கு எதுவேண்டுமானாலும் முதலில் எலியில்தானே சோதிப்போம். எனவே இது நமக்கும் பொருந்தக் கூடும்? இந்த டயட் கர்ப்பவதிகளும் மெலிவனவர்களும் செய்யக்கூடாது.

இந்த டயட்விரதம் 2 நாட்கள் மட்டுமே! (2 நாள்தான்! அதிக நாட்கள் இருக்கக் கூடாது.) உங்கள் உடலில் எடைகுறைந்து அழகுபெற குறைந்தது 2 மாதம் தேவை!
எனவே உடன் குறையவில்லையே என்று நிறுத்தாதீர்கள். இந்த நிகழ்வினால் பழுதடைந்த கலங்கள் அப்படியே இருக்க புதுக்கலங்கள் வந்து பழைய கலங்களை விலத்தி வளருவது தடைப்படும் இதனால் வயிற்றில் உருவாகும் கொழுப்பு படைகள் (ரையர் ரையர் வளயங்கள் இல்லாமல் போகும். அடடா விரத்தில் இத்தனை சங்கதிகளா? நம் முன்னோர்கள் வாழ்வுயாவும் காரண காரியங்களுடனேயே இணைந்திருந்தது. இந்த விரதத்தை முயற்சியுங்கள் வந்தால் அழகு! போவதற்கு எதுவும் இல்லையே!


T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

3ம் பக்கத் தொடர்ச்சி...

### இன்று தமிழ் மக்களுக்குப் பிரியமான பிரித்தானியப் பிரதமர்...

பிரித்தானிய பிரதமரின் யாழ் விஜயம்! இங்கிலாந்தில் பிரதமர் டேவிட் கேமரூன். தீபாவளிக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு மக்களை மகிழ்விப்பதைப் போன்றோ அல்லது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிசேல் இந்தியச்சிறுமிகளுடன் தீபாவளிக்கு கைகோத்து அமெரிக்காவில் ஆடியதுபோன்றோ இந்த யாழ் விஜயம் கருதப்படவில்லை.



### பிற மதங்கங்களையும் கலாச்சரங்களையும் மதிக்கும் பண்பு

இது உண்மையான காலத்தின் தேவையான கடமையாக அமைந்தது. (அதற்காக மேற்குறிப்பிட்ட தீபாவளிக் கொண்டாட்டங்களில் ஜனாதிபதிகளின் நடைமுறைகள் பிழை என்று ஒருபோதும் சொல்லவில்லை. அதுவும் தன்னாட்டில் வாழும் மக்களது மதத்தையும் கலைகலாச் சாரத்தையும் மதிக்கும் ஒரு செயலாகவே நாம் காண்கின் றோம். நாமும் அவர்களைப்போல் பிறமதந்தங்களையும் அவர்களது கலாச்சரத்தையும் மதிக்கப்பழவேண்டும் என்பதனை எடுத்துச்சொல்லும் நிகழ்வாகவும் அவற்றைப் பார்க்கின்றோம்.)

பிரித்ததானியாவின் பிரதமர் தமிழ்மக்களின் அவலங்களை மேலோட்டமாகப் பாத்துவிட்டு போனதாகக் கொள்ளாமல், அவர் நாடு திரும்பியதும் பாராளுமன்றத்தில் சுதந்திரமான கருத்தை தெரிவித்தார். இலங்கையில் போர்குற்ற விசாரணை திருப்திகரமாக இல்லை! அதற்கு வரும் பங்குனிக்கு முதல் திருப்தியான விசாரணை அமைய வேண்டும் என்றும் ஒரு வித காலக்கேடு விதித்து உள்ளார்.
இதனால் வரப்போகும் பங்குனி என்பது வருடம் வருடம் வந்து போகும் - ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் நிறை வேற்றப்படும் போர்குற்ற விசரனைக்கான தீர்மானம்“ போல் அமையாது இம் முறை காத்திரமானதாக அமைய இந்தக் காலக்கேடு உதவலாம்.





யாழ்ப்பாணத்தில் பிரித்தானியப் பிரதமர்பிரதமர்

என்ன இருந்தாலும் இந்த விசாரணைகள் முலம், இலங்கை அரசினை அடிபணியவைக்கவேண்டும் என்பது நோக்கமல்ல. அதன் நோக்கம் இவ்வளவு இழப்பிற்குப் பின்னும் இலங்கைத் தமிழ்மக்களுக்கு உரிய உரிமை களை அரசு வழங்க முன்னவரவேண்டும் என்பதனை வலியுறுத்தும் ஒரு செயற்பாடாவே அமையும்.

நடந்து முடிந்த மாநாட்டில் கனடிய பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்களைக் கண்டித்து மாகாநாட்டில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தார். இது உலகநாடுகளை இலங்கையில் என்ன நடைபெறுகிறது நடைபெற்றது என்பதனை பார்க்க வைத்தது.
இங்கிலாந்து பிரதமர் மாநாட்டைப் புறக்கணிக்காமல் அங்கு சென்று உண்மை நிலையை எடுத்து வந்து உலகுக்கு காட்ட மாநாட்டை புறக்கணிக்காது விட்டார். அதனை செயலிலலும் காட்டினார். அதற்காக இரு பிரதமர்களும் உலகத்தமிழர்கள் நெஞ்சில் இடம் பிடித்தனர்.





லண்டனில் தீபாவளிக் கொண்டாட்டத்தில் பிரதமர்

பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கேமரூன். இலங்கை சென்றார் கிரிக்கட்விளையாடினார். யாழ்ப்பாணம் சென்றார் குடிசைகளைத் தேடித்தேடிச் சென்று சிறுவர்கள் முதல் முதியவர்கவரை கண்டு அளவளாவினார். பின்பு இந்தியா சென்றார் அங்கும் சிறுவர்களுடன் கிரிக்கட் விளை யாடினார், பின்பு ஏன் நாம்கூட செய்ய நினைக்காத தெருக்கடை தேநீர்கடையில் பச்சிவேண்டிச் சாப்பிட்டார். பார்ப்பவர்களுக்கு இது ஏன் பிரதமர் விளைாடுகிறார் என்று இருந்தாலும், நாடு திரும்பியதும் தன் விளையாட்டைச் சரியாகக்காட்டி விட்டார்.









இந்தியாவில் தெருவோரத்தில் உள்ள ஒரு பெட்டிக்கடையில் பச்சி சுவைக்கும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கேமரூன்

சென்ற மாதம் மட்டுமல்ல 2013 இல் தமிழ்மக்களால் பெரிதும் பாராட்டப் பெற்ற பிரதமர் பிரித்தானிய பிரதமரே!

தமிழ் மக்களின் நம்பிக்கை வீண்போகமல் இருக்க ஊடகங்களும் அரசியல்தலைவர்களும் கனிந்துவரும் இச்சூழலை அறிவுடன் சிந்தித்து செயல்படவேண்டும் என்பதே இன்று தாயகத்தில் வாழும் தமிழர்களதும் புலம் பெயர்வாழ் தமிழர்களதும் வேண்டுதல்களாக உள்ளது. இன்று தமிழர்கள் வேண்டி நிற்பது சலுகைகளை அல்ல! தமிழ்மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளையே!





உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb3 VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb3 ist Partner der Gothaer

யேர்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!
THUSHI DEKO GERMANY
New in Germany
THUSHI DEKO GERMANY
T.Thiruselvam:
Tel: 02305-85945
0176-60810813
www.thushi-deko.de



# கென்னடியின் உயிரைக் குடித்த விசித்திரமான மர்ம “தோட்டா”



அன்று இன்றுபோல் ஊடகங்கள் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. தொலைக்காட்சி இல்லை, தொலைபேசி, வசதிகள் இல்லை, ஏன் பேஸ்புக்கில்லை. இப்படிப்பல இல்லைகள் குவிந்த காலம் அன்று. அந்தக் காலத்தில் ஒரு நாட்டின் தலைவர்மீது அதீத பற்றுக்கொள்ள அவர்பற்றிய விபரங்கள் முழுமையாக அறிய சந்தப்பம் இல்லை.
ஆனால் அன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கெனடி ஆசியாவில் சந்து பொந்து எல்லாம் பிரபலமாக இருந்தது, ஆச்சரியமான ஆனந்தமான ஒரு உண்மையாகும்.
ஏன் யாழ்ப்பணத்திலே கெனடி நுலகம்,கெனடி சலூன்,என்று இருந்தது.
அவர் சுடப்பட்டு மரணமானபோது குடும்பத்தில் ஒருவரை இழந்த துக்கம் உலகமக்களுக்கு ஏற்பட்டது. கெனடியின் கொலை பற்றிய துப்புக்கள் இன்றுவரை முழுமையாகக் கிடைக்கவில்லை. அவ்வப்போது சிலதகவல்கள் வந்து போகும். இப்போ ஒரு புதியதகவல் கிடைத்துள்ளது அது இதுதான்.



## வெளிவராத புதிய தகவல்கள்!



நியூயார்க்: குண்டடிபட்ட கென்னடிக்கு சிகிச்சை அளித்த நர்சுகளில் ஒருவர், கென்னடியின் மரணம் குறித்தான புதிய தகவல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார். அதில் கென்னடியின் கழுத்தில் பாய்ந்திருந்த துப்பாக்கிக் குண்டு ஒன்று மிகவும் விசித்திரமாக இருந்ததாக புதிய தகவலை தெரிவித்துள்ளார் அவர். அமெரிக்காவின் 38-வது அதிபராக பதவி வகித்தவர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜான் எப் கென்னடி. இவர் கடந்த 1961 முதல் 1963-ம் ஆண்டு வரை பதவி வகித்தார். 1963-ம் ஆண்டு **நவம்பர் 22-ந்தேதி** தனது 46-வது வயதில் டெக்காஸ் மாநிலம் டல்லாஸ் நகரில் மனைவி ஜாக்குலினுடன் காரில் செல்லும்போது சுட்டுக் கொல்லப்பட்டடார். கென்னடி இறந்து கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் ஆகும் நிலையில் அவரது மரணம் குறித்து புதிய சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது. குண்டடி பட்ட கென்னடிக்கு முதலுதவி அளித்த பைலிங் ஹால் (78) என்ற நர்ஸ் தற்போது சில பரபரப்புத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.
இது குறித்து அவர் லண்டன் பத்திரிக்கை ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது...

முதலுதவி.... தலையில் துப்பாக்கி தோட்டாக்கள் பாய்ந்த நிலையில் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஜான் எப்.கென்னடியின் தலையை தூக்கி பிடித்தபடி அவரது சுவாசம் சீரடைவதற்கான முதலுதவியை நான் செய்தேன்.

விசித்திரக்காட்சி.... அப்போது ஒரு விசித்திரமான காட்சியை நான் பார்த்தேன். துப்பாக்கி குண்டுகளால் காயமடைந்த பலருக்கு நான் சிகிச்சை அளித்துள்ளேன். ஆனால், அன்று கண்டது போன்றதொரு காட்சியை நான் இதுவரை பார்த்ததே இல்லை.
அரை அங்குல தோட்டா... அவரது காதுக்கும், தோள்பட்டைக்கும் இடையே கூர்மையான ஒரு விசித்திர தோட்டாவை நான் பார்த்தேன். அந்த தோட்டா சுமார் அரை அங்குல நீளம் இருந்தது.

கூர்மையானது... சாதரணமாக துப்பாக்கியில் இருந்து வெடித்து சீறிப்பாயும் தோட்டாக்களின் முனை மழுங்கிப்போய் இருக்கும். ஆனால், அந்த தோட்டாவின் முனை மட்டும் கூர்மை மழுங்காமல் இருந்தது. எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

சிராய்ப்பும் இல்லை.... மேலும், துப்பாக்கியின் குழலில் இருந்து வெளியேறும் வேகத்தில் தோட்டாவின் வெளிப்பகுதிகளில் சிராய்ப்பு (தேய்வது) அறிகுறி தென்படும். அதுவும் அந்த தோட்டாவில் தென்படவில்லை.

குழப்பம்.... எந்தவகை துப்பாக்கியில் இருந்து அந்த தோட்டா வெளியே வந்தது என்ற அறிகுறிகளை அந்த தோட்டாவை பரிசோதித்து கண்டுபிடிக்க இயலாத நிலையில் அது இருந்தது.

வித்தியாசமானது.... ஜான் எப்.கென்னடி படுகொலை தொடர்பான விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட தோட்டாக்களில் இருந்து அது மிகவும் வித்தியாசமாக தோற்றமளித்தது.

மர்ம தோட்டா எங்கே..? அந்த தோட்டாவும் அறுவை சிகிச்சை மூலம் அவரது உடலில் இருந்து அகற்றப்பட்டது. ஆனால், கடைசி வரை அந்த “மர்ம தோட்டா சமர்க்கிப்படவில்லை.

எவ்வளவுதான் விஞ்ஞானம் வளர்ச்சிகண்டாலும், அதற்கு ஈடாக மார்மங்களும் வளர்ச்சி பெற்றுவிடுகிறதோ!




சிவசக்தி மங்கள சேவை


உங்கள் வீடுகளில் நடைபெறும் திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள், போன்ற அனைத்த வைபவங்களுக்கும் தேவையான ஆலங்கார ஒழுங்குகள் எம்மால் செய்த தரப்படும். இன்னும் மேலதிக சேவைகள் உண்டு. உடன்தொடர்பு கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு: அ.மதிஜயா: 0152 107 40 485
sivasakthi 2013@hotmail.com

# கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் வெற்றிமணி ஆசிரியரின் அன்னைக்கு சமர்ப்பணமாக சிவத்தமிழ் வெளியீடு!






இலங்கையில் (1950 இல்) வெளிவந்த முதலாவது சிறுவர் மாத இதழ் வெற்றிமணி. அதன் ஸ்தாபகரும் ஆசிரியருமான அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களது அன்புத் துணைவியாரது 31 வது நாள் நினைவு அஞ்சலி கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அமரர் திருமதி நவநிதி சுப்பிரமணியம்அவர்கள் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியை ஆவார். வெற்றிமணியின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் அன்று அன்னையின் ஈடுஇணையற்ற பங்களிப்பே காரணமாகும்.
தந்தை ஆரம்பித்து வைத்த பணியினை சிறப்பாக யேர்மனியில் அவரது புதல்வன். மு.க.சு.சிவகுமாரன் ஆற்றிவருகின்றார்.
வெற்றிமணிப் பத்திரிகையுடன் ஆன்மிக இதழாக சிவத்தமிழும் நீண்டகாலமாக வெளிவருகின்றது. மகனின் இப்பணியினை எண்ணி மனம் மகிழ்ந்த அன்னை, தனது இறுதி நேரம் வரை பக்கபலமான ஓர் வாசகியாக, நல்விமர்சகியாக திகழ்ந்தார் .

அமரர் நவநிதி சுப்பிரமணியம் அவர்களது 31 வது நினைவு நாள் அஞ்சலி நிகழ்வில் அவர் விரும்பிப் படிக்கும் சிவத்தமிழ் அன்னைக்கே சமர்ப்பணமாக வெளிவந்தது.
படத்தில் அமரர் நவநிதி சுப்பிரமணியத்தின் மூத்த புதல்வி திருமதி. கலாநிதி லோகதாசன் அவர்கள் "சிவத்தமிழ்" சஞ்சிகையை அன்னைக்கு சமர்ப்பணம் செய்து வெளியிடுவதனையும், சிவத்தமிழ் சிறப்பிதழினை திரு.திருமதி மோகன் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

**2000 ஆண்டு வெற்றிமணி பொன்விழாவின் போது யேர்மனியில் அன்னையுடன் வெற்றிமணி ஆசிரியர்**



### சுவாமி விவேகானந்தரின் 150 பிறந்த நாளை முன்னிட்டு

## சிவத்தமிழ் நடத்திய ஓவியப்போட்டி




கொழும்பு இராமகிருணமிஷன் நிறுவனம், சுவாமி விவேகனந்தரது 150 வது பிறந்நாள் நிகழ்வுகளை தொடர்ந்து நடத்திவருகின்றது. அத்தோடு ஆசியாவிலேயே முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட ஞாயிறு பாடசாலையை யையும் சிறப்பாக நடத்தி, மாணவர்களது மனதில் தெய்வ சிந்தனையையும், உள்ளம் பண்பட்டு, சிறந்த மனிதனாக வளர நற்போ தனைகளையும் விதைத்து வருகின்றது. இலங்கையில் பல பாகங்களிலும் கிளைகள் நிறுவி வறியமாணவர்களது கல்விக்கும் ஆதரமாக இருந்து வருகின்றது.
மேற்படி இராமகிருணமிஷன் கொழும்பு தலைமையகத்தில் கல்விபயிலும் (Sunday School) 400க்கு மேற்பட்ட மாணவர்கள் இடையில் யேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி வெளியீடான சிவத்தமிழ் சஞ்சிகை ஓர் ஓவியப் போட்டியினை நடத்தியது. இப்போட்டி சுவாமி விவேகானந்தர் 150 பிறந்தினம் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பபட்டன. படத்தில் "சிவத்தமிழ் ஓவியப் போட்டி" யில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் சுவாமிஜி.ராஜேஸ்வரானந்தா






விநாயகர் துணை

ஓம் சக்தி ஜோதிட நிலையம்

Pandit:JAGANATH

OM SHAKIHI JOTHIDA NILAYAM

ஜேர்மனி வாழ் தமிழ்மக்களுக்கு ஓர் நல்ல செய்தி அகில உலக பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டிற் ஜெகநாத் அவர்களின் வருகை

வாழ்வு மேன் மேலும் வளம்பெறவும் தடையாகவுள்ள திருமணங்கள் - காதல் விவகாரங்கள் வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும், மற்றும் குடும்பத்தினரிடையேயுள்ள கருத்து முரன்பாடுகளை நீக்கியும், குழந்தை செல்வங்கள் தடைப்பெறும் சர்ப்பதோஷம் ராகு கேது தோஷ நிவர்த்தி பொருட்டு பரிகாரங்களையும் வழங்கியும், வேலைவாய்ப்பு நோய் நொடி, பிணி, கடன் தொல்லைகளில் இருந்து விலக்கி வெற்றிபெறவும், பணம் பொருள் வீடுவாசல் பெற்று வாழ்வில் பயன்பெற நாடுங்கள் ஜோதிடர் பண்டிற் ஜெகநாத்திடம். உங்கள்வசம் ஜனன ஜாதக குறிப்பில்லாவிடின் அவற்றினை கணித்து பலன் சொல்லப்படும் இல்லையேல் கை ரேகையின் மூலமும் பலன் சொல்லப்படும். தொடர்புகளுக்கு நாடவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:-

+49(0) 201 999 79 882 Mobile + 49(0)1521 666 1106

Am 09.00 to 08 .00 Pm

Heintzmannstraß-26
(Altendorfer Straße)
45143 Essen
Germany

# ஆண் சாரதிகள் மட்டுமே!
# அதிக விபத்துக்குள்ளாகிறார்கள் ஆய்வில் தகவல் !!



பெண் வாகன ஓட்டுநர்களை விட ஆண் வாகன ஓட்டுநர்களே அதிக விபத்துகளை ஏற்படுத்து கின்றனர். இதை நாம் கூறவில்லை. மேலை நாட்டில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

கவனச் சிதைவு காரணமாக பெண் ஓட்டுநர் களைவிட ஆண் ஓட்டுநர்கள் இரண்டு மடங்கு விபத்துகளை ஏற்படுத்துகின்றனர். விபத்தைச் சந்தித்த ஆண்களில் 10 பேரில் ஒருவர், கவனச் சிதைவால் விபத்து ஏற்பட்டது என்று ஒத்துக் கொண்டிருக்கின்றார். ஆனால், 20 பெண்களில் ஒருவர்தான் கவனச் சிதைவால் விபத்தைச் சந்தித்திருக்கின்றார்.

மேலும், வாகனத்தைச் செலுத்தும்போது கவனத்தை இழந்து ஏறக்குறைய விபத்துக் குள்ளாகும் நிலை ஏற்பட்டதாக மூன்றில் ஒரு பங்கு ஆண்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் ஐந்தில் ஒரு பங்கு பெண்களுக்குத்தான் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆண்களின் கவனத்தை அதிகமாகச் சிதைக்கும் விஷயம், கார் ஸ்டீரியோவை சரிசெய்வது. இதன் காரணமாகவே சாலையில் இருந்து பார்வையை விலக்க நேர்வதாக 76 சதவீத ஆண்கள் கூறியிருக்கின்றனர்.

மூன்றில் இரண்டு பங்கு பேர், வாகனத்தைச் செலுத்தும்போது பானம் பருகுவது, சாப்பிடுவது போன்றவற்றால் கவனத்தை இழக்கின்றனர். ஆய்வில் பதில் தெரிவித்தவர்களில் பாதிப் பேர் சிடியை எடுப்பது, வைப்பதில் சாலையில் தடுமாறி விடுவதாகக் கூறியிருக்கின்றனர். கால்வாசிக்கு மேற்பட்டோர், செல்போன் பேசுவதன் மூலம் பிரச்சினையைத் தேடிக்கொள்கின்றனர். வாக னத்தை ஓட்டும்போது எஸ்.எம்.எஸ். அனுப்புவது தங்கள் வழக்கம் என்று பலர் கூறியிருக்கின்றனர். வாகனத்தை ஓட்டிக்கொண்டே வழித்தடப் படத்தைப் பார்ப்பது, 'ஷேவிங்' செய்வது, முத்தமிடுவது, செய்தித்தாளில் பார்வையை ஓட்டுவது போன்றவையும் ஆண்களுக்கு விபத்தை ஏற்படுத்துகின்றன.



## வெற்றிமணியின் அன்னை!

கடந்த 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை எனது அன்னையின் மறைவினால் கடந்தமாதம் நவம்பர் இதழ் வெளிவரவில்லை, என்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.
இலங்கையில் அன்னையின் மறைவு அறிந்து எனது இல்லத்திற்கு (யேர்மனி) நேரில் வந்தும், தொலை பேசிமூலமாகவும், மின்னஞ்சல் மூலமாகவும், முகப்புத்தகம் வழியாவும் ஆறுதல் அளித்த தமிழ் உள்ளங்களுக்கு வெற்றிமணிக்குடும்பத்தின் சார்பாக நன்றி கூறுகின்றேன்

அன்புடன் உங்கள் வெற்றிமணி ஆசிரியர்
**சிவகுமாரன்.**



## என்னெப்பெற்றால் தமிழாலயத்தில் நடைபெற்ற
# 12ம் ஆண்டு சித்தியெய்திய மாணவர்களின் மதிப்பளிப்பு 2013

யேர்மனி என்னெப்பெற்றால் தமிழாலயத்தில் பாலர் வகுப்பிலிருந்து கல்வி பயின்ற மாணவர்கள் 2013 ஆண்டு தமிழ்க்கல்விக்கழகம் நடத்திய பொதுத்தேர்வில் 6 மாணவிகள், 12ஆம் ஆண்டு தேர்வெழுதிச் சித்தி யெய்தினார்கள். அவர்களுக்கு 10.10.2013 அன்று எமது தமிழாலயத்தால் பட்டயங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. 12ம் ஆண்டு சித்தியெய்திய மாணவர்கள் செல்வி. சாரா செல்வராசா, செல்வி. சந்திரசேகரன், செல்வி. செந்தூரி திருச்செல்வம், செல்வி. தனுசியா உதயகுமார், செல்வி. தயானா தற்பரானந்தம் ஆகியோர். இந்த 6 மாணவர்களும் எமது தமிழாலயத்துக்கு தொடர்ந்து தூயபணியாற்ற முன் வந்துள்ளார்கள். 4 மாணவிகள் துணை ஆசிரியர் பணிக்கும், 2 மாணவர்கள் தமிழாலய நிர்வாகத்துக்கும் பணியாற்ற முன்வந்துளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் தமிழ்க்கல்விக்கழக ஓய்வுபெற்ற பொறுப்பாளர் தமிழாலயத் தந்தை, திரு. இரா. நாகலிங்கம் ஐயாவும் அவர்தம் பாரியாரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அத்துடன் மானிலப் பொறுப்பாளர் திரு. செல்லர் தெய்வேந்திரன் அவர்களும், அவர்தம் பாரியாரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்கள்.

படத்தில்....
தமிழ்க்கல்விக்கழக ஓய்வுபெற்ற பொறுப்பாளர் தமிழாலயத் தந்தை,திரு. இரா. நாகலிங்கம் ஐயா, திருமதி. ஆயிலியம் நாகலிங்கம் அம்மா, மானிலப் பொறுப்பாளர் திரு. செ.தெய்வேந்திரன் 12ம் ஆண்டு கல்விகற்ற மாண வர்களும், அவர்களது பெற்றோர்களும், ஆசிரியர்களும், நிர்வாகியும்.....
12ம் ஆண்டு கல்விகற்று சித்தியெய்திய மாணவர்களும், ஆசிரியையும்...
12ம் ஆண்டு கல்விகற்று சித்தியெய்திய மாணவர்களும், நிர்வாகியும்.....
(தகவல்: கந்தையா அம்பலவாணபிள்ளை என்னெப்பெற்றால்)



# ஃபாஸ்ட் ஃபுட் திருமணங்கள்.







"திருமணங்கள் ஆயிரம் காலத்துப் பயிர்", "வீட்டைக் கட்டிப் பார், கல்யாணம் பண்ணிப் பார்" என்பதெல்லாம் ஏறக்குறைய வழக்கொழிந்து விடும் நிலமையில் தொங்கிக் கொண்டிருக்கும் பழமொழிகள்.

முன்பெல்லாம் ஒரு கல்யாணம் முடிவானால் ஊருக்கே அது ஒரு திருவிழாச் செய்தி. இரு வீட்டாரும் சந்தித்துப் பேசுவதில் துவங்கி, ஒவ்வொரு விஷயமாய் இரண்டு வீட்டுப் பெற்றோர்களும், பெரியோர்களும் பார்த்துப் பார்த்துச் செய்வார்கள். எத் தரப்புக்கும் எந்தக் குறையும் வந்து விடக் கூடாதென்பதில் ஊர்ப் பெரியவர்கள் ரொம்பவே கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பார்கள்.
யாராவது வாய்தவறி ஏதாவது சொல்லி விட்டால் உடனே பெரியவர்கள் முன்னின்றி அதை சமரசம் செய்து வைப்பார்கள். "வாழப் போறவங்க மன நிறைவோட போணும்" என ரொம்பவே பிராக்டிகலான ஒரு பதிலையும் சொல்வார்கள்.

**பெண் பார்க்கப் போவது வெட்கத்தை முற்றத்தில் தெளித்துக் கோலம் போடும் ஒரு ஆனந்த அனுபவம்.**

பெண்பார்க்கப் போவது வெட்கத்தை முற்றத்தில் தெளித்துக் கோலம் போடும் ஒரு ஆனந்த அனுபவம். நிச்சயம் குறிக்கும் நாள் அந்த வெட்கத்தை வீட்டு வரவேற்பறைக்கு நீட்டிக்கும் காலம். அதன் பின் சேலை எடுப்பது, வளையல் கொடுப்பது, இத்யாதி இத்யாதி என திருமணம் ஒரு சுவாரஸ்யமான அனுபவமாய் விரியும்.
அப்போதெல்லாம் திருமணம் பெரும்பாலும் முற்றங்களில் தானே நடக்கும். வாழை மரத்தை வெட்டித் தோரணம் கட்டுவதில் துவங்கி நடக்கின்ற களேபரங்கள் ஒரு தித்திக்கும் திருவிழாக் கோலம். திருமணத்துக்கு முந்திய நாளிலேயே வீடு முழுக்க சுற்றமும், சமையல் தடபுடல்களும், சிரிப்புச் சத்தங்களும், கிண்டல் கேலிகளும் என உறவின் இன்னொரு படலமே அங்கே அரங்கேறும். பனை மர உச்சியில் கட்டப்பட்டிருக்கும் ஊதுகுழல் ஒலிபெருக்கியில் சர்வ நிச்சயமாய் டி.எம்.எஸ் பாடிக்கொண்டிருப்பார், அல்லது கட்டபொம்மன் கர்ஜித்துக் கொண்டிருப்பார்.
"மணமகளே மருமகளே வா" எனும் பாடல் ஒலிக்காத கல்யாணங்கள் பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரை இல்லவே இல்லை. மைக் செட் காரர் வந்திறங்கிய உடனே கேட்கும் முதல் கேள்வியே அது தான். "லேய்.. மங்களப்பாட்டு, கட்டப்பொம்மன் கதைவசனம் எல்லாம் இருக்காலே.. " !!!
திருமணத்தன்று பெற்றோர் நெகிழ்விலும், மகிழ்விலும், அழுகையிலும் தான் இருப்பார்கள். கால்நூற்றாண்டு காலம் தன் கால்களைச் சுற்றிச் சுற்றி வந்த மகளுக்கு கால்க்கட்டு போட்டு அனுப்பி வைக்கிறோமே ! அவள் அந்த வீட்டில் நன்றாக இருப்பாளா ? எல்லோரும் அவளை நல்ல முறையில் கவனித்துக் கொள்வார்களா ? பொத்திப் பொத்தி வளர்த்த மகளை, கட்டிக் காப்பார்களா, கண்கலங்க வைப்பார்களா ? என மனசு இடைவிடாமல் அடித்துக் கொள்ளும்.

கண்ணீர் விட்டு அழாமல், பெற்றோரின் பாதங்களைத் தொழாமல் எந்தப் பெண்ணும் திருமணத்தைச் சந்தித்ததேயில்லை என்பதே பழைய நிலமை. திருமணமாகி சில மாதங்கள் கழிந்து புது வீட்டில் பெண் மகிழ்ச்சியாய் இருக்கிறாள் என்பதைக் கண்டறிந்தபின்பே பெற்றோர் கொஞ்சம் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுப்பார்கள். அந்தக் கணம் வரை அட்வைஸ் மழையும், பாசப் பயணங்களும், பதட்டங்களுமாக அவர்களுடைய தினங்கள் கழியும். இதெல்லாம் இப்போது மருவி மருவி, அருவிக் கரையில் கிடக்கும் கூழாங்கற்கள் போல வடிவம் மாறி விட்டது.
"அம்மா.. எனக்கு இந்தப் பொண்ணைப் புடிச்சிருக்கு, கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கேன். என்ன சொல்றீங்க ?" எனக் கேட்கும் பிள்ளைகள் நல்ல பிள்ளைகள் எனும் பட்டியலில் சேர்கிறார்கள். காரணம், அந்த அளவுக்கு கூட பெற்றோரின் ஈடுபாட்டை இளைஞர்கள் இப்போதெல்லாம் நாடுவதில்லை. "அம்மா... இந்த பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கேன். அடுத்த மாசம் முகூர்த்தம் வருது." என்பது தான் பெரும்பாலான இன்றைய இளசுகளின் திருமண ஆயத்தம்.

"பொண்ணு எப்படிடே ?" எனக் கேட்கும் தந்தையர்களுக்கு சரியான பதில் பல நேரங்களிலும் கிடைக்காது. "பொண்ணைப் பாக்காம ஓ.கே சொல்லுவேனா ?", "பொண்ணு வீட்லயும் பேசிட்டேன். அவங்களுக்கும் ஓ.கே தான்", "பொண்ணை எனக்கு ஆறு மாசமா தெரியும் ஃபேஸ்புக் பிரண்ட்", "என் ஃப்ரண்டுக்குத் தெரிஞ்ச பொண்ணு", "மேட்ரிமோனில பாத்தேன்", " பொண்ணு என் கூட தான் வர்க் பண்ணுது.. நல்ல பொண்ணு தான்" இப்படி ஏதோ ஒற்றை இரட்டை வரி தான் பெரும்பாலான பதில்கள்.

**ஆன்லைனில் ஆள் பார்த்து, அப்படியே ஸ்கைப்பில் பேசி, அம்மாக்களிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு, நண்பர்களுடன் கலந்தாலோசித்து ஒரு திருமணத்தை முடிவு செய்கிறார்கள் இளசுகள். மண்டபம், சாப்பாடு, அழைப்பிதழ், ஆடைகள், நகை என என்ன தேவையோ அவற்றையெல்லாம் போன், மின்னஞ்சல், ஆன்லைன், என அவர்களாகவே தீர்மானித்துக் கொள்கிறார்கள்.**

கலந்து கொள்ள வருகின்ற விருந்தினர்களில் ஒருவர். அல்லது விருந்தினர்களில் முக்கியமானவர் எனும் இடம் தான் பெற்றோருக்கு. "மாம்.. இதான் பொண்ணோட அம்மா, இது பொண்ணோட சித்தி" என மண்டபத்திலேயே கூட அறிமுகம் நடக்கும் நிகழ்வுகளும் இப்போதெல்லாம் சர்வ சாதாரணம்.

பார்த்துப் பார்த்துச் சமைக்கும் சாப்பாட்டைச் சாப்பிடும் வயிறுகள் நன்றாக ஜீரணமாகின்றன. ஃபாஸ்ட் ஃபுட் உணவுகளோ பெரும்பாலும் ஒத்துக் கொள்ளாமல் வயிற்றைப் பதம் பார்க்கின்றன.

அதனால் தான் பழைய காலத்துத் திருமண பந்தங்களைப் போல இந்தக் காலத்தில் இல்லை. விவாகரத்துகளின் எண்ணிக்கை சகட்டு மேனிக்கு உயர்ந்து கொண்டே போகிறது. "சமைக்க மாட்டேங்கறா, அவன் ஹைட் கம்மியா தெரியறான்" என்றெல்லாம் காரணம் காட்டி மணமுறிவுகள் தினம் தோறும் நடந்து கொண்டே இருக்கின்றன.

தொடர்ச்சி 17ம் பக்கம்...



தோற்றம் 02.12.48 மறைவு 25.11.11

குமரக்கோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும்
யேர்மனியில் ochtrup வதிவிடமாகவும் கொண்ட

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**
**அமரர் சின்னத்துரை யோகராசா**


எங்கள் ஆருயிர் தெய்வமே!
எமை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஓடிவிட்டனவே!
ஆறாத்துயரில் மீளாமல்
இருக்கின்றோம் அப்பாவாய் மாமாவாய்
அன்புக்குழந்தையின் பேரனாய்
அணைத்ததெய்வமே!ஏன் இந்த இளவயதில்
எமன் உமை கவந்தானோ?
ஏற்றிப்போற்றும் அன்பே!உம் ஆத்மா
சாந்திக்காய்வேண்டுகிறோம் நாமே!
அன்புடன்
மகன் மகள் மருமக்கள்
S.Gobiy: 01798080340


## சரஸ்வதி கல்யாணமாலை



**இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள்.**

**தொடர்புகளுக்கு: செல்வி:**
**0173 27 50 457- Tel: 02333 86 93 159**
**02333 86 93 165**





# ஃபாஸ்ட் ஃபுட் திருமணங்கள்.

இட்ஸ் பார்ட் ஆ.்.ப் லை.்.ப்" என விவாகரத்துகளை எடுத்துக்கொள்ளும் இளைய தலைமுறை அச்சப்பட வைக்கிறது. சிக்கல்கள் இல்லாத குடும்ப உறவுகள் இல்லை. அப்படிப்பட்ட சிக்கல்களை எப்பாடு பட்டாவது தீர்த்து வைப்பது தான் பழைய வழக்கம். இருவரும் பேசி, இரண்டு வீட்டாரும் பேசி, குடும்பத்தினர் பேசி சிக்கல்களைச் சரிசெய்வார்கள். ஒரு விவாகரத்து அத்தி பூத்தாற்போல நடந்தாலே அந்த ஊருக்குள் அது ஒரு அதிர்ச்சிச் செய்தியாய் தான் உலாவரும்.

எடுத்தோம் கவிழ்த்தோம் எனும் திருமணங்கள் நிலைப்பதில்லை. அதற்காக இளைஞர்கள் எதையும் முடிவு எடுக்கக் கூடாதென்பதல்ல. காதலிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. தனது மணப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. ஆனால் அதை பெற்றோரின் மனம் காயப்படாத அளவுக்கு செய்ய வேண்டும் என்பது மட்டுமே நான் சொல்லும் விஷயம்.

"இந்தப் பெண்ணை புடிச்சிருக்கு. கல்யாணம் பண்ணி வைக்கிறீங்களா" எனுமளவுக்கேனும் இளைஞர்கள் இருப்பதே ஆரோக்கியமானது. ஒரு திருமணம் என்பது சடங்கல்ல, அது வாழ்வின் மிகப்பெரிய அனுபவம். ஆனந்தங்கள் பந்தி வைக்கும் இடம். அதைப் பார்த்துப் பார்த்துச் செய்வதிலும், அதை நிகழ்த்தி முடித்து நிம்மதி கொள்வதிலும் தான் பெற்றோரின் ஆனந்தம் நிலைக்கும். அந்த ஆனந்தத்தை பெற்றோருக்கும் தரும் பிள்ளைகள் கடவுளின் வரங்கள்.

"நீங்கதாம்பா எல்லாம் பாத்துக்கணும். நீங்க சொல்றது படி செய்யறேன்" ன்னு என் பையன் சொல்லிட்டான் என ஒரு தந்தை சொல்லும் போது அவருடைய கண்களைக் கவனியுங்கள். அந்தக் கண்ணில் இருக்கும் கர்வமும், பாசமும், பெருமிதமும், ஈரமும் ஒரு வாழ்க்கைப் பாடத்தைச் சொல்லித் தரும். அத்தகைய அனுபவத்தைக் கொடுக்காத ஒரு திருமணத்தினால் என்ன பயன் இருக்கப் போகிறது.

மணப் பெண்ணும், மணப் பையனும் ஏற்கனவே சந்தித்துக் கொள்ளாத திருமணங்கள் இப்போது இல்லை. அதில் தவறேதும் இல்லை. ஆனால் பெற்றோருடன் இணைந்து செய்யும் திருமண ஏற்பாடுகள் மிகவும் அவசியம். அது தான் ஒரு புதிய குடும்ப உறவுக்கு தன்னம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும், பரவசப் பகிர்தலையும் நல்க முடியும்.

பறவை எச்சம் போல விழுந்த இடத்தில் முளைப்பதல்ல திருமணப் பயிர்கள். அது சரியான நிலத்தைத் தேர்வு செய்து, பக்குவப்படுத்தி, விதைத் தேர்வு செய்து, நல்ல நாளில் விதைத்து, பாசனத்தைக் கவனித்து, புழு பூச்சிகள் அரிக்காமல் பாதுகாத்து, சரியான காலத்தில் விளைச்சல் இருக்கிறதா என சோதித்து இப்படி படிப்படியாய் செய்ய வேண்டிய விஷயம். அத்தகைய திட்டமிட்ட, வலுவான குடும்ப உறவை உருவாக்க பெற்றோரின் ஆசீரும், அருகாமையும், வழிகாட்டுதலும், உதவியும் நிச்சயம் தேவை.

இன்றைய இளைஞன் நாளைய தந்தை. இன்றைய இளைஞி நாளைய அன்னை. இப்போது நீங்கள் எதைக் கட்டுகிறீர்களோ, அது தான் நாளை உங்களுக்காகவும் கட்டப்படும். திருமணம் ஆனந்தத்தின் அடையாளம். பெற்றோரின் கண்ணீர்த் துளிகளின் மேல் கட்டப்பட்டால் அது எப்போதுமே வேர்பிடிக்கப் போவதில்லை !

---

## சஞ்ஜே இசையில் வெளிவந்த Oneway ஆல்பத்தில் இருந்து ஒருபாடல்




# அழகே அழகே ஆணழகே!

**பாடல்:சேவியர்**
**இசை: சஞ்ஜே**
**பாடகர்:**
**ரோகினி சதீஸ்-எம்.சீ.ஜீவா**

பெண் :

அழகே அழகே ஆணழகே - நீ
பிரிந்தால் சருகாய் எனதுயிரே
உயிரே உயிரே ஆருயிரே - நீ
கலந்தால் சொர்க்கம் எனதருகே

ஆண்மைக் கதிரே வருவாயா - என்
ஆயுள் ரேகை வரைவாயா
அருகே அருகே விரைவாயா - என்
உயிரின் உயிராய்க் கரைவாயா

ஆண் :

மானே
கொட்டும் காதல் பார்த்தேன்
கொஞ்ச நேரம் சாரல்
மழையிலே நனைஞ்சேன்

உயிரில் தொடுப்பேன்
கூடு கட்டிக் கொடுப்பேன்
பஞ்சவர்ணக் கிளியே
நிம்மதியில் படுப்பேன்.

உனதிரு விழியிலே
கசிந்திடும் துளியிலே
சொட்டச் சொட்டக் கரைஞ்சேனே நானே

கொட்டுகிற மழையிலே
வெட்டுகிற வெயிலிலே
மொட்டு விட்டக் காதலியும் நீயே

பாழாப் போன மனசுக்குள்ளே - - அடி
தானாக் காதல் நுழைஞ்சிடுச்சே
நாலாத் திசையிலும் கிளையிருக்கே - அது
நானா, காதல் தானா ?

பெண்

காரப் பார்வை கண்ணழகா
வீரப் பார்வை மின்னலடா
தாரமாக ஆசையடா
ஓரப் பார்வை வீசடா

ஆண்

உறவிலே அள்ளிக்கொள்வேன்
இரவிலே பின்னிக் கொள்வேன்
மனம் கொத்தும் மலர் உனை
நரை வரை நெஞ்சில் கொள்வேன்

சிரிப்பினில் சிக்கிக் கொண்டு
அழுகையில் கட்டிக் கொண்டு
எப்பொழுதும் சுற்றிக் கொண்டு
பூவை உந்தன் பூனை ஆவேன்

நீதானே என் தேசம்
யாசிப்பேன் உன் நேசம்

நீதானே என் கீதம்
நேசிக்கும் சங்கீதம்

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059



Nimal வீடியோ அன் போட்டோ
Professional Video Movie
கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் எதுவானாலும் மனதோடு நிற்க நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை நாடுங்கள்
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55 Tel:01776794261



# இறைவன் படைப்பில் தாய்.

தாய் எனும் உறவு, எந்த விதமான மகத்துவத்தோடும் ஒப்பிட முடியாத உறவு. தன்னலத்தின் ஒரு சிறு துரும்பு கூட இல்லாத தூய்மையைச் சொல்ல வேண்டுமெனில் தாயன்பைத் தான் சொல்ல வேண்டும். எல்லோருடைய மனதிலும் அம்மாவைப் பற்றிய பிம்பங்களும், பிரமிப்புகளும், நினைவுகளில் நீங்காமல் இருக்கும். பெரும்பாலான நினைவுகளை புரட்டிப் பார்த்தால் அவை பால்ய காலத்து நினைவுகளாகவே இருக்கும்.

மழலைக் காலம் தான் அன்னைக்கும், குழந்தைக்கும் இடையேயான தூய்மையான உறவின் முகவுரையை எழுதுகிறது. இறைவனின் படைப்பில் குறை என்று எதுவுமே இல்லை. பச்சைக் குழந்தை பால்குடிக்கத் துவங்கும் போது அந்தக் குழந்தையால் சுமார் 15 இன்ச் தூரம் தான் பார்க்க முடியுமாம். அது ஒரு தாயின் மார்புக்கும், முகத்துக்கும் இடைப்பட்ட தூரம். பாலும், பாசமும் ஒரே நேரத்தில் குழந்தை அருந்த இறைவன் செய்த விந்தை இது என்றால் மிகையில்லை.

"தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்" என்கிறது பைபிள். இறைவனின் அன்பை ஒப்பீடு செய்ய ஒரு தாயின் அன்பை இறைவனே தேர்ந்தெடுக்கிறார் என்றால், அவர் தாயன்பை உலகின் உன்னத அன்பாய் நிலைநாட்டியிருக்கிறார் என்பது தானே பொருள்.

அன்னையைப் பற்றிப் பேசும்போது ஒரு பிரபலமான யூதப் பழமொழியைச் சொல்வார்கள். "கடவுளால் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் இருக்க முடியாது என்பதனால் தான் அன்னையைப் படைத்தார்" என்று ! கடவுளின் பிரதிபலிப்பாகவும், பிம்பமாகவுமே அன்னை நமக்கெல்லாம் தரப்பட்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

இந்த உலகம் தொழில்நுட்பத்தினாலோ, அழகினாலோ, வளங்களினாலோ கட்டி எழுப்பப்படவில்லை. அது அன்பினால் கட்டி எழுப்பப் படுகிறது. அன்பை நீக்கி விட்டுப் பார்த்தால் உலகம் வெறுமையின் கூடாரமே ! ஒரு மனிதனின் வாழ்நாளை அலசி ஆராய்ந்து பாருங்கள். அவன் நல்ல மனிதனாய் வாழ்கிறானா இல்லையா என்பதை அவன் தனது தாயை நேசிக்கிறானா இல்லையா என்பதை வைத்து அளவிடலாம். தாயை நேசிக்காத மனிதனால் மற்ற எதையும் ஆத்மார்த்தமாய் நேசிக்க முடியாது. தாயின் நேசத்தைப் பெறாதவர்களே பிற்காலத்தின் நிம்மதியற்ற, வரையறையற்ற, ஒழுங்கீனமான வாழ்க்கைக்குள் செல்கின்றனர். அன்னை தான் ஒரு குழந்தைக்கு சரியான வழியையும், வாழ்வையும் காட்ட முடியும்.

உங்கள் பெற்றோர் மீது அன்பும், மரியாதையும் வையுங்கள். அவர்களை முதிர் வயதிலும் பாதுகாத்து நேசியுங்கள். என்கிறது இஸ்லாமிய புனித நூல் குரான். ஒரு தாய் குழந்தையை நேசிக்கும் அதே நேசத்தில் தேசத்தையும் நேசியுங்கள் என்கிறார் புத்தர். கணக்கற்ற தெய்வங்களை அன்னையாய் பாவித்து அன்னைக்கு அதிகபட்ச மரியாதை செலுத்துகிறது இந்து மதம். தாயை நேசிக்க வேண்டாமெனச் சொல்லும் மதங்கள் இல்லை ! தாயின்றிப் பிறந்த மனிதர்களும் இல்லை.

உலகையெல்லாம் உருக உருக நேசித்து விட்டு, தனது தாயை முதியோர் இல்லம் அனுப்புபவர்கள் போலித்தனத்தின் பிம்பங்கள். அவர்கள் வெள்ளியடிக்கப்பட்ட கல்லறைகள். வெறும் பெருமைக்காகத் திரிபவர்கள். அவர்கள் அன்பின் அரிச்சுவடி கூடத் தெரியாதவர்கள். இன்று உலகெங்கும் முதியோர் இல்லங்கள் புற்றீசல் போலக் கிளம்பி விட்டன. மாதம் தோறும் பணத்தைக் கட்டி கால்நடைகளைப் பராமரிக்க குத்தகைக்கு விடுவதைப் போல மனிதர்கள் செயல்படுகிறார்கள்.

தன் குழந்தையை அரை நொடி கூட இடுப்பை விட்டு இறக்கிவிட மனமில்லாமல் சுமந்து சுமந்து மகிழ்வார்கள் அன்னையர். நிலவைக் காட்டியும், நிலத்தைக் காட்டியும் சோறூட்டுவார்கள். இடுப்பில் சுமந்து கொண்டு மைல்கணக்காய் நடந்து திரிவார்கள். வினாடி நேரமும் விடாமல் நெஞ்சில் சுமந்து திரிவார்கள். அத்தகைய அன்னையரைக் கடைசியில் மகன் முதியோர் இல்லங்களில் தள்ளி விடுகிறான்.



## சொர்க்கத்தை வீடுகளில் இறக்கி வைக்கும் இறைவனின் பிரதிநிதி.

முதியோர் இல்லங்களின் மூலைகளில் தன் மகனின் வருகைக்காக காத்திருந்து காத்திருந்து ஒரு முறை கூட எட்டிப் பார்க்காத மகனின் நினைவுகளுடன் ஏக்கத்தில் இறந்து போகும் அன்னையர் ஏராளம் ஏராளம். முதுமை என்பது இறைவனின் ஆசீர்வாதத்தின் அடையாளம். முதுமை வரை வாழ்கின்ற பெற்றோரைக் கொண்டிருப்போர் வாழ்க்கையில் அதீத அன்பை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். அத்தகைய முதுமைப் பெற்றோரை ஒரு குழந்தையைப் போல பாதுகாப்பதில் இருக்கிறது மனிதத்தின் அழகிய வெளிப்பாடு.

இறைவனின் பிம்பங்களான அன்னையர், தாங்கள் உயிராய் நேசித்த பிள்ளைகளாலே உடைபடும் நிலையைக் காண்கையில் விழிகள் மட்டுமல்ல விரல்களும் கூட கண்ணீர் விட்டுக் கதறும். அன்னையைத் தனது இறுதி மூச்சு வரை அன்பில் சுமக்காத மனிதன், வாழ்வதில் அர்த்தமே இல்லை. ஒரு மனிதனால் உணரக் கூடிய அதிகபட்ச வலியைத் தாங்கி குழந்தையைப் பெறுகிறாள் அன்னை. அந்த வலியைத் தாங்கிய அன்னை அதை விட அதிக வலியை அனுபவிப்பது குழந்தைகள் அவர்களை உதாசீனப்படுத்தும் போது தான்.

கண்டதும் காதல் என்பார்கள், காணாமலேயே வருகின்ற அளவற்ற காதல் அன்னையிடம் தான் உருவாகும். தனது வயிற்றில் சுமக்கும் கருவின் உருவம் தெரியாமலேயே அதில் உயிரை வைத்து உருவாக்க அன்னையால் மட்டுமே முடியும். அதனால் தான் தாய் இரண்டாம் இறைவனாகிறாள். குழந்தையின் முதல் அழுகையில் மட்டும் ஆனந்தமடைந்து, அடுத்தடுத்த அழுகைகளில் கூடவே அழும் அதிசய உள்ளமாகிறாள்.

வாழ்வின் உன்னதத் தருணங்களை இரண்டு இடங்களில் தான் அனுபவிக்க முடியும். ஒன்று உங்கள் அன்னையின் அருகாமையில், இரண்டு, உங்கள் குழந்தைகளின் அருகாமையில். இரண்டுமே தாயன்பு தவழும் இடங்கள்.

தாயன்புக்கு ஈடாக எதைச் சொல்ல முடியும் ? கவிஞர் கலீல் ஜிப்ரானின் வார்த்தைகள் கவிதையாய் விழுகின்றன. "

அன்னை தான் எல்லாமே ! கவலைகளின் ஆறுதல். துயர நேரத்தின் நம்பிக்கை. பலவீனத்தை நிரப்பும் பலம். அன்பின் துவக்கம், இரக்கமும் மன்னிப்பும் உறையுமிடம். அன்னையை இழப்பவர்கள் "ஆசீர்வதிக்கும், பாதுகாக்கும்" தூய ஆன்மாவை இழந்து விடுகிறார்கள்."

தாய் இறைவனின் பிம்பம். சின்ன சொர்க்கத்தை வீடுகளில் இறக்கி வைக்கும் கடவுளின் பிரதிநிதி. அன்னையை நேசிக்கத் தெரியாதவர்கள் வாழ்க்கையை வாசிக்கத் தெரியாதவர்கள். மனிதர் என்று அவர்களை அழைக்க மறுதலித்து விடுங்கள்.

அன்னையை நேசிப்போம். நிஜத்தில் வாழ்த்தாலும், நினைவில் வாழ்ந்தாலும்.

∴சேவியர்




ஸ்ரீ ஓம் சக்தி ஜோதிடம்

மலையாளபகவதி பூஜாஜ்
உலக புகழ் பெற்ற இந்தியா ஜோதிடர்
பண்டிதர் சங்கர்

Astrology Predication is god gift,
passed down from generation to generation
Meet me once & change your future

30 வருட அனுபவம் பெற்றவர்

இவர் அமெரிக்கா, கனடா, லண்டன், நியூசிலாண்ட், சிங்கப்பூர் , மலேசியா முதல் தடவையாக ஜேர்மனியில் சந்திக்கவுள்ளார்.

Lange str 98,
44 137 Dortmund,
Germany.

ஆலோசனை மற்றும் தீர்வுகள்

வியாபாரங்கள் - எதிரிகள்
உடல்நிலை - வேலை
குழந்தையின்மை - திருமணம்
பணம் - குடிபோதை
காதல் - விவாகரத்து
வழக்குகள் கண் திருஷ்டி
குடும்ப ஒற்றுமை
படிப்பு வாகனப் பொருத்தம்
மற்றும் பல.....பிரச்சனைகளுக்கு



Mobile
0174 6400 418,
0151 71 200 666

# உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது யேர்மனியை பொருளாதார வளர்ச்சியடைய செய்தமைக்காக

## ஜெர்மன் அதிபர் ஏஞ்செலா மெர்க்கலுக்கு இந்திரா காந்தி விருது





டெல்லி: 2013-ம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதிக்கான விருது ஜெர்மன் அதிபர் ஏஞ்செலா மெர்க்கலுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்திரா காந்தி அறக்கட்டளை ஆண்டுதோறும் அமைதி, முன்னேற்றம், உலக ஒற்றுமைக்காக பாடுபடுவோரை தேர்வு செய்து விருது வழங்கி வருகிறது. நடப்பாண்டிற்கான விருதுக்கு ஜெர்மன் அதிபர் ஏஞ்செலா மெர்க்கல் (வயது 59) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
ஐரோப்பா மற்றும் உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது ஜெர்மனை பொருளாதார வளர்ச்சியடைய செய்தமைக்காக ஏஞ்செலா மெர்க்கலுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இதற்கு முன்னர் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, சர்வதேச அணு சக்தி கழகத்தின் முன்னாள் தலைவர் முஹம்மது அல்பராடய், பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் பவுன்டேஷன், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன், பிரேசில், லைபீரிய அதிபர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## தாய்ப்பாலும் சந்தைக்கு வந்துவிட்டது!




அமெரிக்காவில் தாய்ப்பால் வியாபாரம் படுஜோர். தடுத்து நிறுத்த சமூக ஆர்வல அமைப்புகள் வலியுறுத்தல்.
மனிதநேய அடிப்படையில் பலர் உடல் உறுப்புகளை தானம் செய்கிறார்கள். ஆனால் அமெரிக்காவில் சிறுநீரகம், நீண்ட தலைமுடி (உரோமம்), தாய்ப்பால், கருமுட்டை ஆகியவை விற்பனை அமோகமாக நடக்கிறது. இணையதளம் மூலம் ஏராளமானோர் இவற்றை விலை பேசுகிறார்கள். கரு முட்டை விற்க ஆயிரக்கணக்கான பெண்கள் கருத்தரிப்பு சிகிச்சை மையங்களில் காத்துக்கிடக்கிறார்கள்.
இந்த வகையில் நீண்ட கூந்தல் சுமார் ரூ.160 ஆயிரத்திற்கும், ஒரு அவுன்ஸ் தாய்ப்பால் ரூ.600 என்று விலை போகிறது. தாய்ப்பாலை வாங்குவதற்கு மிக அதிக அளவில் மக்கள் ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிகிறது. தங்கள் குழந்தைகளுக்கு கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் தாய்ப்பால் ஒரு நல்ல நோய் எதிர்ப்பு சக்திமிக்கது என்பதால் அதை வாங்குவதற்கு அதிகளவு ஆர்டர் வருகிறது. தாய்ப்பாலை அடுத்து இரண்டாவது இடத்தில் இருப்பது தலைமுடிதான். விதவிதமான ஹேர்ஸ்டைலை வைத்துக்கொள்ள விரும்பும் மக்கள் சொந்தமாக முடி வளர்க்க நேரம் இல்லாதவர்கள், முடியை வளர்க்க விரும்பாதவர்கள் ஆன்லைனில் தலைமுடியை வாங்கி தங்கள் ஆசையை பூர்த்தி செய்து கொள்கின்றனர்.
இதனிடையே மனித உறுப்புகள் மற்றும் தாய்ப்பால், தலைமுடி போன்றவைகளை விற்பதற்கு அமெரிக்காவில் உள்ள சமூக ஆர்வல அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. பணத்திற்காக இதுபோன்று மனித உறுப்புகளை விற்பதை தடைசெய்ய வேண்டும் என அவை வலியுறுத்தி வருகின்றன.




கடலுக்கு மீன்பிடிக்கச்சென்று வீட்டில் இருந்து கொண்டுபோன சாப்பாடை மட மட என்று விழுங்கிவிட்டு, வெறுங்கையோடு வரும் நாட்களும் உண்டு. படகு இருந்து என்ன வலையிருந்து என்ன அதிட்டக்காற்று அடித்தால் நடுக்கடலில் அல்ல தரையிலும் மீன்பிடிக்கலாம்.
இதோ கடந்த 14ம்திகதி கொஞ்சம் பிடித்தால் போதும் என்று கடலுக்குப் போனகப்பல் ஊருக்கே உணவு வழங்க மீன்களைப் பிடித்துக் கொண்டு வந்து நின்றது. எங்கே மயிலிட்டியிலா அல்லது பாசையூர் கரையிலா, அல்லது பருத்தித்துறையிலோ. அல்ல! இது மாலதீவில் உள்ள J Resort Alidhoo என்கின்ற ஒரு குட்டித்தீவில். இந்த மீன்கள்.. Tuna fish வைகையைச் சேர்ந்தன. மீன்கள் மொத்த நிறை 1000 கிலோவிற்கு மேல். உல்லாசப்பணிகள் தினம் அலைமோதும்.
இத்தீவினை 30 நிமிடத்தில் சுற்றி நடந்து வரலாம். ஆனால் அதன் அழகு முப்பொழுதும் நினைவிருக்கும். இங்கு 30 வருடங்களுக்கு மேலாக எமது தாயகத்தைச்சேர்ந்த வைரவநாதன் யோசேவ் ரட்ணராஜா என்னபவர் முக்கியபதவியில் இருந்து நிர்வாகித்து வருகின்றார்.அவர் இலங்கையில் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தில்லையம்பதி மணவறைச் சோடினை



Heidenheim: குணம்: Tel: 09833 5693 Handy: 0152 139 830 43
01756 34 67 40

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

# ஆசிரியர்களும் ஆச்சரியங்களும்!

பாடசாலைக்காலத்தில் பிழைசெய்தால் மேசைக்குமேல் ஏற்றிவிடுவார்கள் பாடம் முடியும் வரையும் நிற்கும்படி. அல்லது தோப்புக்கரணம் போடும்படி சொல்வார்கள். சிலர் முழங்காலில் மண்டியிட்டு இருக்கும்படி சொல்வார்கள்.

முக்கியமானது அங்கே சொல்பவர்கள் ஆசிரியர்கள். செய்பவர்கள் மாணவர்கள்.
இப்போ காலம் மாறிப்போச்சு! தாய்நாட்டில் நடந்த ஒரு அதிசயச் சம்பவம்!

ஓர் ஆசிரியை மாணவனைத் தண்டிக்க. அதனை அறிந்த மாணவனின் தந்தை பாடசாலைக்குச் சென்று ஆசிரியையை அழைத்து கண்டித்துப் பேசிவிட்டு, முழங்காலில் நிற்கும்படி பணித்துவிட்டுப்போன ஒரு சம்பவம் நடந்துள்ளது. இது தமிழ் படங்களைப் பார்த்ததினால் வந்த தாக்கமாக இருக்கலாம்.

**அடுத்து ஓர் ஆசிரியை நடந்து கொண்ட விதத்தைப்பாருங்கள்!**

தனக்கு விரும்பத்தகாத ஒரு பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லும்படி கல்விக்கழகம் அறிவித்தல் அனுப்ப, அதனை எதிர்த்து பாடசாலையின் கூரையில் நின்று போராட்டம் நடத்தியுள்ளார். போராட்டத்தைக்கண்டு மக்கள் வியக்கவில்லை. ஆனால் அந்த உயரத்திற்கு எப்படிச் சேலையுடன் ஏறினார் என்றே வியந்தனர்.



**படம் கற்பனை சம்பவம் உண்மை!**

## கமலின் இளைய மகளுடன் ஜோடி சேரும் ரஜினி மருமகன்





கமலின் இளைய மகள் அக்ஷரா ஹாஸன் தனுஷ் நடிக்கும் பாலிவுட் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க ஒப்புக் கொண்டுள்ளாராம். கமலின் மூத்த மகள் ஸ்ருதி பெற்றோர் வழியில் நடிக்க வந்துவிட்டார். அவர் தற்போது தெலுங்கு மற்றும் இந்தி படங்களில் நடித்து வருகிறார். இதற்காக அவர் மும்பையில் வீடு எடுத்து தங்கி உள்ளார். அவரது தங்கை அக்ஷராவும் மும்பையில் தனது தாயுடன் தங்கி உள்ளார். மாட்டேன் மாட்டேன் அக்ஷரா ஹாஸனுக்கு படங்களில் நடிக்க பல வாய்ப்புகள் வந்தன. ஆனால் அவரோ நான் நடிக்க வர மாட்டேன் கேமராவுக்கு பின்னால் இருக்கவே விரும்புகிறேன் என்று திட்டவட்டமாக கூறினார். தனூக்கு ஓ.கே. இத்தனை காலமாக நடிக்க மறுத்து வந்த அக்ஷரா இந்தி இயக்குனர் ஆர். பால்கியின் படத்தில் தனுஷ் ஜோடியாக நடிக்க ஒப்புக் கொண்டுள்ளாராம். படத்தில் அமிதாப் பச்சனும் இருக்கிறார்.
தனுஷ் ஸ்ருதி ஹாஸனுடன் 3 படத்தில் நடித்துள்ளார். இந்நிலையில் அவர் ஸ்ருதியின் தங்கை அக்ஷராவுடன் நடிக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



**ஸ்ரீதரன் - கருணேஸ்வரி தம்பதிகளின்**

**திருமண வெள்ளிவிழா**

**06.11.2013**

கடந்த மாதம் 16.11.2013 திகதி Dortmund S.K.Silks & Gold Paraadise உரிமையாளர்

ஸ்ரீதரன் தம்பதியினரின் திருமண வெள்ளிவிழா சிறப்பாக நடைபெற்றது.

அவர்கள் பல்லாண்டு! பல்லாண்டு!! சிறப்பாக வாழ! வெற்றிமணி நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றது


KAILAS
Fisch- Feinkost
டோட்முண்ட் நகரில்
கடல் உணவுக்கு
ஓர் கடை
கைலாஸ்

Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!

ஒரு மெய்கண்டான் கலண்டர் இலவசம்!
மீன் 50 € விற்கு- அல்லது
பலசரக்குப் பொருட்கள் 100€ விற்கு
வாங்குபவர்களுக்கு ஒரு மெய்கண்டான் கலண்டர் இலவசம்!

Tel:0231 137 433 95
Handy:0163 47 60 857,0163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de



பசுமையான
உடன் மரக்கறி
வகைகளுக்கும்
எம்மை நாடுங்கள்

Adler Str.05
44137 Dortmund

துரித பணமாற்றுச் சேவை
அதிகூடிய பெறுமதியில் தாயகத்தில்
பணம் பெற எம்மை நாடுங்கள்!




NSB National Savings Bank
HNB
Bank of Ceylon BOC
instant cash

இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம்
இங்கு வளங்கும் பணத்திற்கு

# வெற்றிமணி அன்னைக்கு!

## வாழ்ந்தாய் முழுவாழ்வு!



புவிபுகழும் 'மூகசு' பொன்மனத்திற் பூத்த
நவநிதியே நற்றமிழை நன்கு - சுவைக்கும்
தவமகளே போயினையோ சந்ததமும் வாழ்க
சிவபுரத்தின் செல்வனடி சேர்ந்து.

பெற்றாய் அருங்கணவன் பெற்றாய் பெருமக்கள்
உற்றாரும் கல்வி உலகத்து - மற்றோரும்
வாழ்த்தத் தருமவழி வாழ்ந்தாய் முழுவாழ்வு
கூத்தனறி வானே குணம்.

பூசுகின்ற நீறதுபோல் போற்றும் புனிதமன
ஆசிரிய நாயகியே என்னெழுத்தின் - பேசரிய
வாசகியே நின்னை வணங்குகின்றேன் நன்றியுடன்
தேசனடி வாழ்க சிறந்து.

**கவிஞர். வி. கந்தவனம்**

**கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் பவளவிழாவில் வெற்றிமணித்தாய் திருமதி. நவநிதி சுப்பிரமணியம்**





**யேர்மனியில் வெற்றிமணி பொன்விழாவில் (13.05.2000) சிறப்பு விருந்தினராக வெற்றிமணி ஸ்தாபகரின் துணைவியார் திருமதி. செ. சுப்பிரமணியம் அவர்களும் அருகே. பிரதமவிருந்தினர் டாக்டர் சீர்காழி. சிவசிதம்பரம் மற்றும் இலக்கியச்செம்மல் இந்துமகேஷ் அவர்கள்**




பற்றுமிகக் கொண்டு தமிழ்ப்
பாசம் வளர்த்த மகள்

வெற்றிமணி என்னும் தமிழ்
விருந்துக்கும் தாயிவளே!

முற்றும் உணர்ந்த தமிழ்
மூதறிஞன் மூகாசு (மு.க.சு)

உற்றதுணையாக உவகையிலே
வாழ்ந்த மகள்!

பெற்றெடுத்த செல்வங்கள்
பேரெடுக்க மனம்குளிர்ந்து

பெற்றுவந்த வாழ்விதனைப்
பெரும்பேறாய்க் கண்ட மகள்!

அன்புடன்
தாங்கள் பெறாத
பிள்ளைகளில் ஒருவனாக
**இந்துமகேஷ்**- யேர்மனி



## என்னைச் சுமந்து வந்த முத்துப்பேழை

தந்தை தொடங்கிய வெற்றிமணிக்கு
அன்னை நீ கொடுத்த ஆதரவு
தொந்தரவு ஏதும் செய்யாததே!
பொன்னை சேர்க்கவும், மண்ணை பெருக்கவும்
அந்தரத்தில் நீ பறந்திருந்தால்
எண்ணெய் இல்லா விளக்காய்
அன்றே அணைந்திருக்கும்.

பார்த்தாயா உன் பொறுமை
இன்று பார்வியக்க வெற்றிமணி
பக்குவமாய் ஒலிக்கின்றது.
தொண்ணூற்றி மூன்று வயதிலும்
வெற்றிமணி கண்டதும் பதினாறாகிடும் உன் வயது.
புவியூருக்கு என்னைச் சுமந்து வந்த பேழைக்கு
பேரின்ப வாழ்வு தந்த ஈசனடி போற்றி

**அன்பு மகன் சிவகுமாரன்**

**கனக்ஸ்**




# வளர்க்க முடியுமாயின்...

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் இதனை மறவாமை வேண்டும்

நான் பிள்ளை வளர்ப்புப் பற்றிய ஒரு கவிதை வாசித்தேன. என்னை மிகவும் கவர்ந்தது. நான் பிள்ளை வளர்ப்பிலே தவறுகள் பல இழைத்துள்ளேன்.

பொதுவாகவே பிள்ளை வளர்ப்பு என்பது மிகவும் பிரச்சினைக்குரிய விசயம். ஆதனை மிகவும் இலாகவமாக அணுக வேண்டும்.

'பல பெற்றோர்கள் அப்படிச் செய்திருக்கலாம், அது நான்றாயிருந்திருக்கும்' என அங்கலாய்ப்பதை கண்டிருப்பீர்கள்.

ஆகவே இதனை வாசித்த பொழுது பிள்ளை வளரப்பதற்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா என எண்ணனேன். ஆனால் அது சாத்தியமில்லை. என் பிள்ளை வளர்ப்பில் நான் விட்ட பிழைகளைத் திருத்துவதாயின் அவர்களும் மீண்டும் எனக்குப் பிள்ளைகளாக அல்லாவா பிறக்க வேண்டும். அது சாத்தியம் இல்லையே.

எத்தனையோ பெற்றோர்கள் என்னைப் போன்று தம் பிள்ளை வளர்ப்பினை மீள்பார்வை செய்து பார்ப்பார்கள். அப்போதுதான் தாம் விட்ட தவறுகளை உணர்வார்கள் வருந்துவார்கள்.

இக்கவிதையிலே பொதிந்துள்ள உண்மைகளைப் புரிந்து கொள்வார்கள். இக்கவிதையை எழுதிய கவிஞரும் எம்மைப் போன்று மீள்பார்வை செய்தபின்னர் வருந்து கிறார். அதன் விளைவே இக்கவிதை

எனது பின்ளையை மீண்டும் ஒரு முறை வளர்க்க முடியுமாயின்,

நான் கட்டி எழுப்புவது முதலில் சுயமதிப்பு, அதன் பின்னரே வசிக்கும் வீடு ,

நான் விரலினை வரைவதற்கு கூடுலாகவும் சுட்டிக்காட்டக் குறைவாகவும் பாவிப்பேன், நான் திருத்துவதைக் குறைத்துக் கொள்வேன் பிணைப்பினைக் கூட்டிக் கொள்வேன்,

நான் கடிகாரத்த்தைப் பார்ப்பதை நிறத்தி கண்களால் கண்காணிப்பேன்,நான் சுமைகளை நிறையவே ஏற்பேன் பட்டங்கள் பலவற்றினைப் பறக்கவிடுவேன்,

நான் காரிய மனப்பான்மையுடைவனாக நடப்பதை நிறுத்தி காரிய மனப்பான்மையுடன் விளையாடுவேன்.

பெரிய வெட்டை வெளிகள் ஊடாக ஓடுவேன் வானில் அதிக நடசத்திரங்களைப் பார்ப்பேன். கூடுதலாகக் கட்டி அணைப்பேன் குறைவாகக் கட்டி இழுப்பேன்'

~Diane Loomans,

GAAYATREE PARTY SERVICE
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.

கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி

இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.




e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck
Gaayatree Party Service

Kaneen electronics
www.kaneenelectronics.de
புதியதோர் தொழில் நுட்பம்!!!!! புதியதோர் வாய்ப்பு!!.
Full HD,SDமுறையில் அனைத்து நிகழ்வுகளையும் Video-Photo செய்யவும்,சிறந்த முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்டு, Blue Ray DVD பதிவுக்கும்அனைத்து நிகழ்வுகளை விழா நடக்கும் இடத்தில் இருந்து செய்மதிமூலம் உலகெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் இவை அனைத்தும் மாதாந்த தவணை முறையில் வங்கியூடாக பெற்றுக் கொள்வதற்கும்
Schevenhoferweg-24 42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de

அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

# கடந்த ஆண்டில் மட்டும் பணிப்பெண்களாக சென்றவர்களில் 463 பேர் அங்கு மரணம்!



பணிப்பெண்களாக சென்றவர்களில் 463 பேர் சடலங்களாக அனுப்பப்பட்டனர்:
ரஞ்சன் ராமநாயக்க
பணிப்பெண்களாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களில் 463 பேர் கடந்த வருடத்தில் சடலங்களாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 300க்கும் அதிகமானோர் 30 வயதுக்கும் குறைவானவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.யான ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வின் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கேள்வியொன்றைத் தொடுத்து விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.
அவர் மேலும் கூறுகையில்,

சட்டங்களும் கட்டுப்பாடுகளும் மீறப்பட்ட நிலையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வோர் அங்கு பல்வேறு கொடுமைகளையும் சித்திரவதைகளையும் அனுபவிக்கின்றனர்.

இதேவேளை, 2012ஆம் ஆண்டில் மாத்திரம் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 463 பணிப்பெண்களின் சடலங்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 300க்கும் அதிகமானவை 30 வயதுக்கும் குறைவான பெண்களுடையதாகும். இவர்கள் மாரடைப்பின் காரணத்தினாலேயே மரணித்திருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பணிப்பெண்களாக செல்வோர் உடலளவில் ஆரோக்கியமானவர்கள் என்ற மருத்துவ சான்றிதழும் வழங்கப்படுகின்றது. நிலைமை இவ்வாறிருக்கும் போது எப்படி இவ்வளவு பெரும் தொகையினர் மாரடைப்பால் மரணிக்க முடியும்? இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற உடல்களில் காயங்கள் காணப்படுகின்ற அதேவேளை உடலின் சில உறுப்புகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது. எனவே, இது குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், பணிப்பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## ஆணியும், பணிப்பெண்ணும்

ஜோர்தானுக்கு வேலைக்குச் சென்ற மன்னம்பிட்டியைச்சேர்ந்த சாந்திக்கு வலுக்கட்டாயமாக 6 ஆணிகள் பருக்கப்பட்ட சம்பவம் 2010 ஒக்டபர்மாதம் நடந்திருக்கிறது, சுகயீனமுற்ற சாந்தினி தன்னை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும்படி கேட்டுள்ளார். அதற்கு வீட்டு எஜமானியால் தாக்கப்பட்டு கிளாசில் தண்ணிருககுள் ஆறுஆணிகளை இட்டு பலவந்தமாக விழுங்கச் செய்திருக்கிறார். 4 ஆணிகள் இன்னும் சாந்தியின் வயிற்றிலேயே இருக்கின்றன. சிறுநீர் கழிக்கும் போது இரத்தம் வெளியேறுவதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.






# ஆசை வெட்கமறியாதோ..?



குரு அரவிந்தன்

**(நான் காதல் என்றேன், அவள் டேற்றிங் என்றாள். ஒன்று மனசைத் தொட்டு உடலைத் தொடுவது, மற்றது உடலைத் தொட்டு மனசைத் தொடுவது. சரியா பிழையா தெரியவில்லை. )**

எழுபது கிலோ மீற்றர் வேகத்தில் சென்ற நான் சைகைவிளக்கு சிகப்பு நிறத்திற்கு மாறவே வண்டியை நிறுத்தினேன். அதே வேகத்தில் வந்த அவள் எனது வண்டிக்கு அருகே தனது சிகப்புநிற வண்டியை நிறுத்திவிட்டு உதட்டுக்குச் சாயம் பூசிக்கொண்டிருந்தாள். இப்படியான முகஅலங் காரங்களை சாதாரணமாக சைகை விளக்குகளில் வண்டியை நிறுத்தும் போது பெண்கள் செய்வது வழக்கம். ஆனால் இவள் தலையை ஒரே சீராக வேகமாக அசைத்துக் கொண்டு உதட்டுக்கு அலங்காரம் செய்ததால் அவளது அந்தச் செய்கை என்னை அவளது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. ஏதாவது பாட்டைப் போட்டுவிட்டு அதற்கேற்பத் தலையசைக்கின்றாள் என்பது புரிந்தது. இளமை ஒருபக்கம் அவளிடம் துள்ளி விளையாட, அவள் சுறுசுறுப்பாகவும், அழகாகவும் இருந்தில் என்னை அவள் கவர்ந்திருந்தாள்.

பச்சை விளக்கு எரியவே நான் வண்டியை முன்நோக்கி ஓட்டிச் சென்றேன். அடுத்த பச்சை விளக்கைத் தாண்டும் போது சட்டென்று மஞ்சள் விளக்கு எரிந்தது. கடந்து மறுபக்கம் போய்விடலாம் என்றுதான் நினைத்தேன், ஆனால் முன்னால் சென்ற வண்டிகள் ஏதோகாரணத்தால் மெதுவாக நகரத் தொடங்கவே எனது வண்டி பாதுகாப்புக் கோட்டைக் கடக்கும்போது சிகப்பு விளக்கு எரியத் தொடங்கிவிட்டது. பொதுவாக வீதியைக் கடக்கும்போது இப்படியாக நடப்பதுண்டு என்பதால் ஏதோ கற்பனையில் இருந்த நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இரண்டு வாரங்கள் கழித்து எனக்கு சிகப்பு விளக்கில் தெருவைக் கடந்ததற்காகத் தண்டப்பணம் கொடுக்கும்படி தபாலில் அறிவிப்பு வந்தது.

அங்கே அந்த சந்தியில் கண்காணிப்புக் கமெரா இணைக்கப்பட்டிருந்ததை அவர்கள் அனுப்பிய படத்தில் இருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. எனது வண்டி கோட்டைத் தாண்டும்போது சிவப்பு விளக்கு எரிவதைத் துல்லியமாகத் தானியங்கிக் கமெரா படம் பிடித்திருந்தது. எனது கவனமெல்லாம் அவளது சிகப்பு நிற வண்டியில் இருந்ததால் நான் பாதையைக் கடக்கும்போது கமெராவைக் கவனிக்காமல் போயிருக்கலாம். அவர்கள் ஆதாரத்திற்காக அனுப்பிய புகைப்படத்தில் இன்னுமொரு விடயத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. அதாவது எனக்கருகே வண்டி ஓட்டிக் கொண்டு வந்த அந்தப் பெண்ணின் சிகப்பு நிற வண்டியும் எனது வண்டியைப் போலவே சிகப்பு விளக்கில் அகப்பட்டிருந்தது.

வண்டியின் இலக்கத்தை எடுத்து நண்பன் மூலம் எப்படியோ அவளது தொலைபேசி இலக்கத்தைக் கண்டறிந்து அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். முதலில் ஒன்றுமே தெரியாதது போல நடித்தவள் அந்தப் படத்தில் அருகே இருப்பது தனது வண்டிதான் என்பதை ஏற்றுக் கொண்டாள். தனது பெயர் நிஷா என்றும், தனக்கும் தண்டப்பணம் கட்டும்படி அறிவிப்பு வந்திருப்பதாகவும் அறிமுகப்படுத்திக் கொண்டாள். அவளது முகத்தை மட்டும் ஞாபகம் வைத்திருந்த எனக்கு அவளது குரலிலும் ஒருவித கவர்ச்சி இருப்பது, அவளோடு தொலைபேசியில் பேசும்போது புரிந்தது.

தண்டப்பணம் கட்டினால் புள்ளிகள் பறிபோய்விடும், அதனால் வண்டிக்கான காப்புறுதி அதிகரித்து விடும் என்பதை அவளுக்கு விளங்கப்படுத்தினேன். நான் ஒரு சட்டத்தரணி என்பதைச் சொல்லி, எனக்காக நான் வாதாடும்போது அவளுக்கும் சேர்த்து வாதாடப்போவதாகச் சொன்னேன். முதலில் தயங்கியவள் ஒருவிதமாக ஒப்புக் கொண்டாள். அவளை முதன்முதலாகக் கண்ட அன்றே அவள்மீது எனக்கு ஒருவகை ஈர்ப்பு இருந்ததால் அவளது சம்மதம் எனக்குள் ஒருவித கிளுகிளுப்பை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான்.

நான் தண்டப்பணம் சம்பந்தமாக சில விவரங்களை அவளிடம் கேட்டிருந்தேன். நானே அவளிடம் வந்து பெற்றுக் கொள்வதாகச் சொன்னபோது அவள் அதை மறுத்து தானே நேரில் கொண்டு வந்து தருவதாகச் சொன்னாள். எனவே தொடர்பு கொள்வதற்குச் சாதகமாக எனது செல்பேசி இலக்கத்தைக் கொடுத்திருந்தேன். மறுநாளே அவள் என்னைத் தொடர்பு கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டு என்னைத்தேடி வந்திருந்தாள். எங்கேயாவது தனியாக உட்கார்ந்து ஆறுதலாகப் பேசலாம் என்று நினைத்து அவளை அழைத்தேன்.

'வாங்க, ரிம்ஹோட்டனில காப்பி குடிச்சிட்டே உட்கார்ந்து பேசுவோமா?' என்றேன்.

தலையசைத்துவிட்டு என்னோடு வந்தாள். ஆளுக்கொரு காப்பி எடுத்துக் கொண்டு ஓரமாய் உட்கார்ந்தோம்.

'அப்புறம் சொல்லுங்க, நீங்க இங்கேதான் பிறந்தீங்களா நிஷா?'

'ஆமா, நான் இங்கேதான் பிறந்தேன். எங்க அப்பா அம்மாதான் சிலோன்லை இருந்து வந்தவங்க'

'இலங்கையில் எங்கே..?' என்றேன்.

'யாழ்ப்பாணம்' என்று மொட்டையாய்ச் சொன்னாள்.

உங்க குடும்பத்தில நீங்க எத்தனைபேர், நீங்கதான் மூத்த பெண்ணா?

அவள் நெற்றியைச் சுருக்கி என்னை ஒரு மாதிரிப்பார்த்தாள்.

'எனக்குத் தெரியுமே, ஏற்கெனவே சொன்னாங்க நான்தான் நம்பவில்லை' என்றாள்.

'என்ன சொன்னாங்க, யார் சொன்னாங்க?' என்றேன்.

'சொன்னாங்க, கொஞ்சம் இடம் கொடுத்தா எல்லாமே விசாரிப்பாங்க என்று சொன்னாங்கள்.'

'எல்லாமே என்றால்?'

'ஊரைச் சொன்னால், ஊரில வடக்கா கிழக்கா தெற்கா மேற்கா என்றெல்லாம் கேட்பாங்க என்று சொன்னாங்கள்´ என்றாள்.

'ஓ அதுவா உங்க பிரச்சனை, நான் அதைக் கேட்கவில்லை. எனக்கு அது தேவையுமில்லை'

'அப்போ என்னோட பிறந்த தினத்தை வைத்து எண்சோதிடம் பார்க்கப் போறீங்களா?'

'என்ன நீங்க எல்லாமே தப்புத் தப்பாய் சிந்திக்கிறீங்க'

'இப்ப எதுக்கு என்னை இங்கே வரச் சொன்னீங்க, இது எங்க முதலாவது டேற்றிங் தானே?' என்று அதிரடியாய்க் கேட்டாள்.

'டேற்றிங்கா என்ன சொல்லுறீங்க?' எனக்குக் மெல்ல உதறல் எடுத்தது.

'அப்போ ஏன் வரச்சொல்லிக் கூப்பிட்டீங்க' என்றாள்.

'நானா வரச்சொன்னேன், நீங்க தானே வருவதாகச் சொன்னீங்க, வந்த இடத்தில் ஒரு காப்பி சாப்பிடுவோமா என்று உங்களை உபசரித்தது தப்பா?' என்றேன்.

'நானா கேட்டேன், நீங்கதானே காப்பிக்குக் கூப்பிட்டீங்க, அப்புறம் இன்னொருநாள் டினருக்குக் கூப்பிடுவீங்க, அது இரண்டாவது டேற்றிங்காய் போயிடும், அப்புறம் மூண்டாவது டேற்றிங்.. தெரியும்தானே மூணாவது தடவை சந்திக்கும்போது என்ன செய்வாங்க என்று' சொன்னவள் மீதமிருந்த காபியை உறிஞ்சியபடியே என் முகத்தில் ஏதாவது மாற்றங்கள் தெரிகிறதா என்று விழி உயர்த்திப் பார்த்தாள்.

தொடர்ச்சி 24ம் பக்கம்.

டொச்மொழி, ஆங்கிலம் நன்கு தேர்ச்சிபெற்றவர்கள் வேலைக்குத் தேவை. எமது தொலைபேசி இலக்கத்திற்கு உடன் தொடர்பு கொள்ளவும். BCN Travals

BCN Travals
Consulting Network(TBW)UG
Tel:-0231-10876361
Handy.-0163-8714369
Tel 0231-98539416
Fax.- 0231.10876362
Web:www.bcnugonline.com
Adler str-30
44137Dortmund
மின்னஞ்சல் :-bcntravels@hotmail.de -

நம்பிக்கையான விமானச் சேவை
இலங்கை இந்தியா கனடா அமெரிக்கா
அவுஸ்த்திரேலியா சிங்கப்பூர் மலேசியா ஐரோப்பா உட்பட
அனைத்து நாடுகளுக்கும்சலுகை விலையில்
விமானச்சீட்டுக்களைப் பெற்றுத்தருகின்றோம்.
அத்துடன் ஐரோப்பாநாடுகளுக்கான
Euro Line சொகுசு பஸ் பயணச்சீட்டுக்களையும் இங்கே
பெற்றுக்கொள்ளலாம். மேலும்
இந்தியா செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்குரிய
ஒழுங்குகள் செய்து தரப்படும்.



23 பக்கத்தொடர்ச்சி

# ஆசை வெட்கமறியாதோ..?



இவளோடு கவனமாகப் பழகவேண்டும் என்று என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். இங்கே பிறந்தவள் என்பதால் டேற்ரிங் என்பதை சாதாரண விடயமாக எடுத்துக் கொள்கிறாளா, எனக்கும் அவளுக்கும் இந்த விடயத்தில் என்ன வித்தியாசம். நாங்களும் எமக்குப் பிடித்தவர்களோடு ஆண் பெண் வித்தியாசம் பாராட்டாமல் பழகுகின்றோம். கொஞ்சம் நெருக்கமாகப் பழகும்போது அவர்களைப் புரிந்து கொள்கிறோம். அவர்கள் எதிர்ப்பாலாக இருந்தால் சிலசமயம் அவர்கள்மீது எங்களுக்கு ஒரு வகை ஈர்ப்பு எற்படுகின்றது.

இருவருக்கும் நல்ல புரிந்துணர்வோடு ஒருவர்மேல் மற்றவருக்கு ஈர்ப்பு ஏற்பட்டால் அதைச் சந்தர்ப்பம் பார்த்து வெளிப்படுத்துகின்றோம். இதுதான் காதலாகிறது. அந்தக் காதல்தான் அடுத்த கட்டத்திற்குச் சென்று காதல் திருமணமாகிறது. ஏதாவது காரணங்களால் இந்தக் காதல் தடைப்பட்டும் போகலாம். எங்களுடைய இந்தக் கலாச்சாரத்தைத்தான் இவள் தவறாகப் புரிந்து கொண்டு எடுத்ததற்கெல்லாம் டேற்ரிங் என்கிறாளோ என நினைக்கத் தோன்றியது.

வழக்குச் சம்பந்தமாக அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். மீண்டும் ஒருதடவை சந்தித்துக் கொண்டோம். நீதிமன்றத்தில் வழக்கு எடுக்கப்பட்ட திகதியைத் தொலைபேசி மூலம் அவளுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன். கட்டாயம் வருவதாகச் செல்லியிருந்தாள்.

வாகனப்போக்குவரத்து நீதி மன்றத்தில் இந்த வழக்கு எடுக்கப்பட்டபோது சொன்னபடியே அவளும் அங்கே வந்திருந்தாள். பனிக்காலமாகையால் வீதிப்பாதுகாப்பு காரணமாக மெதுவாகவே வண்டிகள் ஊர்ந்தன என்பதை முக்கிய காரணமாக எடுத்து அதை நீதிபதிக்கு விளங்கப் படுத்தினேன். எனது வாதத்தை நீதிபதி ஏற்றுக் கொண்டு வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தார். தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாகவே அமைந்திருந்ததால் அவள் முகத்தில் புன்னகை பூத்திருந்தது. இருவரும் நீதிமன்ற அறையைவிட்டு வெளியே வந்து வண்டியை நோக்கி நடந்தோம்.

அருகே வந்து கைகொடுத்து நன்றி சொல்லிவிட்டு கைப்பையை எடுத்தபடி 'உங்க பீஸ்' என்றாள்.

'நான் பெரிதா எதுவம் செய்யவில்லை. எனக்காக வாதாடும்போது உங்களுக்கும் சேர்த்து வாதாடினேன். அவ்வளவுதான்' என்றேன்.

'இல்லை வேறுயாரிடமாவது சென்றிருந்தால் நான் பணம் கொடுத்துத்தானே வாதாடியிருப்பேன். இது உங்க தொழில், சொல்லுங்க எவ்வளவு?' என்றாள்.

'எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன் என்றால் நான் என்ன செய்யிறது. இதை ஒரு கடனாய் நினைச்சால் தாங்க, உங்க மனம் நோகக் கூடாது என்பதற்காக வாங்கிறேன்' என்றேன்.

'நானும் உங்க மனசை நோகவைக்கவில்லை. உங்களைப்பற்றி நிறையவே அறிந்து வைத்திருக்கிறேன், யூ ஆ ஸோ ஸிமாட் அதனாலே.. நீங்க செய்த இந்த உதவிக்கு ஏதாவது தரணும்..!'

'விடமாட்டீங்க போல இருக்கே, உங்க இஷ்டம். தருவதை வாங்கிக் கொள்கிறேன்' என்றேன்.

அவள் அருகே வரவே ஏதாவது பணம் கொடுக்கப்போகிறாள் என நினைத்தேன், ஆனால் அவள் இச் சென்ற ஓசையோடு எட்டி ஒரு முத்தம் கொடுத்தாள். எதிர்பாராத முத்தத்தால் ஒருகணம் நான் உறைந்து போயிருந்தேன். யாராவது பார்த்திருப்பார்களோ என்ற அச்சத்தில் அக்கம் பக்கம் பார்த்தேன். இவ்வளவு விரைவில் அதிகம் பழகாத ஒரு பெண்ணிடம் இருந்து முத்தம் கிடைக்குமா? அவள் இந்த சூழ்நிலையில் வளர்ந்தவள் என்ற துணிச்சலா? எனது சிந்தனையின் இடைவெளியில் அவள் மறைந்து போயிருந்தாள். மூன்றாவது சந்திப்பில் என்ன நடக்குமென்று தெரியும்தானே என்று இதைத்தான் அன்று அவள் சொன்னாளா?

வண்டியில் ஏறி, கண்ணாடியில் கன்னத்தைப் பார்த்தேன். உதட்டுச்சாயம் மெல்லிய கோடாய்ப் பதிந்திருந்தது. இதுவரை இல்லாத, சொன்னால் புரியாத இனிய உணர்வுகள் உடம்பெல்லாம் பரவியது. மறுகன்னத்தையும் காட்டியிருக்கலாமோ என்று ஒருகணம் எண்ணத் தோன்றியது. டேற்ரிங் என்றால் என்னவென்று புரிந்தது போலவும் புரியாதது போலவும் ஒருவித தடுமாற்றமிருந்தது.

அடுத்த சந்திப்பு எப்போ கிடைக்கும் என்று மனசு ஏங்கத் தொடங்கியதென்னவோ உண்மைதான். நான் காதல் என்றேன், அவள் டேற்ரிங் என்றாள். ஒன்று மனசைத் தொட்டு உடலைத் தொடுவது, மற்றது உடலைத் தொட்டு மனசைத் தொடுவது. சரியா பிழையா தெரியவில்லை. அந்த நேரம் எல்லாமே ஒன்றுதான் என்பது போல மயக்கமாயுமிருந்தது. அவள் சென்று நெடுநேரமாகியும் அவளது மூச்சுக் காற்று எனது காதுமடலை வருடிக்கொண்டிருந்தது.

## யாழ் வெற்றிமணி...



## வெற்றிமணி கல்விப்பணி மையத்தின் (Vettimany Education Service Centre) ஏற்பாட்டில் பாடசாலை நூலகங்களிற்கான இலவச நூல்கள் அன்பளிப்பு

வெற்றிமணி கல்விப்பணி மையத்தின் (Vettimany Education Service Centre) ஏற்பாட்டில் பாடசாலை நூலகங்களிற்கான இலவச நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றன.உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு இவ் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக ஆனைக்கோட்டை றோ.க.த பாடசாலைக்கும், ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கும் இவ் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.இவ் நிகழ்வுகளில் வெற்றிமணி யாழ் இதழின் ஆசிரியர் திருமதி இளங்கோவன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உஷாந்தன், வெற்றிமணி கல்விப்பணி மன்ற இணைப்பாளர் சுபோதினி உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டு மாணவர்களிற்கான நூல்களை வழங்கி வைத்தனர். தொடர்ச்சியாகவும் பாடசாலைகளிற்கு இவ்வாறு நூல்கள் அன்பளிப்பு செய்யப்படுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.






**- முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் -**

உலகிலே தோன்றிய உயிர்கள் அனைத்தும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவே விரும்புகின்றன. அதிலும் ஆறறிவு படைத்த மனிதன் ஏனைய உயிர்களைவிட எப்போதுமே மகிழ்வாக இருக்க விரும்புகிறான். அதற்காகவே அல்லும் பகலும் அரிய முயற்சிகளை எல்லாம் செய்துகொண்டிருக்கிறான். ஆனால் மகிழ்வாக இருப்பது என்றால் என்னவென்பது இன்னும் பலருக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இன்றைய வேகமான வாழ்க்கை ஓட்டத்திலே மகிழ்ச்சியையும் தேடி ஓடுவதே மனித வாழ்க்கையாகிவிட்டது. மகிழ்ச்சி என்பது உள்ளத்திலே ஏற்படும் ஒரு நிறைவு. அது ஏற்படும்போது முகம் அந்த நிறைவைக் காட்டிநிற்கும்.

முகத்திலே மகிழ்ச்சியை ஏற்படுத்த இன்று பல செயற்பாடுகளை மேற்கொள்கிறோம். முதலிலே எமது முகம் அழகாக இருக்கவேண்டுமெனப் பல பூச்சுகள். பல புனைவுகள். அதற்கான பொருட்செலவு. சிறப்பாகப் பெண்களுக்கு இதற்கான செலவு அதிகம். முகத்திலே நெற்றி, புருவம், கண், மூக்கு, உதடு, பல், கன்னம் என எல்லாவற்றிற்கும் தனியான அழகுப் புனைவுகள். அவற்றையெல்லாம் அழகாகப் பொலிவுபடுத்துவதற்குத் தனியான அழகுபடுத்தும் மாடங்கள். ஆண்களைப் பொறுத்தவரையிலும் இதேநிலைதான் என்று சொல்லவேண்டும். முகத்தை அழகாக்கப் பல்வேறு வரைபடம் போன்ற அணல் (தாடி) தோற்றங்கள். அதிலும் முதுமையும் இளமையும் போட்டிபோடுகின்றன. இவ்வாறு அழகுபடுத்திய முகக்கோலத்தைக் கண்டு பிறர் அழகாக இருக்கிறீர்கள் என்று பாராட்டும்போதுதான் உண்மையான மகிழ்ச்சி அவர்களை வந்து பற்றிக்கொள்கிறது. எனவே மகிழ்ச்சியென்பது பிறருடைய பாராட்டுதலிலே தான் இன்று தங்கிநிற்கின்றது என்றும் சொல்லலாம்.

இளமைத் தோற்றத்தோடு நீண்டகாலம் வாழ்பவரே மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பவர் என பண்டைய தமிழ்ப் புலவர் பிசிராந்தையார் தனது பட்டறிவை ஒரு பாடலிலே பதிவு செய்துள்ளார். அவர் நடந்து வந்துகொண்டிருந்தபோது அவரை நேரிற் பார்த்தவர்கள் வியந்துபோனார்கள். அவர்கள் எண்ணத்திலே கேள்வி ஒன்று ஒருவாகியது. அதனைப் பிசிராந்தையாரிடம் கேட்டும் விட்டார்கள். அவர் அதற்கான மறுமொழியை ஒரு கவிதையாகவே கூறினார்.

யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர் எனவினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்க அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. (புறநானூறு 191)

பல ஆண்டுகள் கழிந்த பின்னரும் தலையிலே நரைமயிர் தோன்றாமல் இருப்பது எப்படி என்று கேட்பீர் ஆயின் அதற்குரிய காரணங்களைக் கூறுகிறேன். என் மனைவியோ சிறந்த குணம் உடையவள். மக்கட்செல்வத்தையும் பெற்றுள்ளேன். என்னோடு இணைந்துள்ள இளையவர்களும் முரண்படாதவரே. என் வேந்தனும் அல்லாதவற்றைச் செய்யாத நல்லாட்சியைச் செய்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக நான் வாழ்கின்ற ஊரிலே பல சான்றோரும் வாழ்கின்றனர். அதனால் எனக்கு எவ்விதமான குறையும் இல்லை.

இப்புலவர் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன்னர் மகிழ்வாக வாழ்வதற்குத் தேவை யானவற்றைத் தாமே அறிந்து உணர்ந்து பதிவு செய்துள்ளார். ஒரு மனிதன் வாழ்வில் இளமை முதல் முதுமை வரை நீண்டகாலம் துணையாக இருப்பவள் அவனுடைய மனைவி ஆவாள். ஒருவனுக்குத் தாய் ஏறக்குறைய 25 ஆண்டுகள் துணையாக இருக்கலாம். ஆனால் மனைவியோ 50 ஆண்டுகளுக்கு மேல் துணையாக இருப்பாள். இந்த நிலையைத் 'தாய்க்குப்பின் தாரம்' என்ற முதுமொழி இன்றுவரையும் விளக்கி நிற்கிறது. வள்ளுவர் இச்சிறப்புநிலை கருதியே மனைவியை ஆணின் 'வாழ்க்கைத் துணைநலம்' என்று பெருமைப்படுத்திக் கூறியுள்ளார். இத்தகைய நற்குணமுடைய மனைவி மக்கட்செல்வத்தையும் பெற்றுத் தருபவள். அதுமட்டுமன்றி அந்த மக்களை நன் மக்களாக வளர்க்கின்ற தாய்மைப் பொறுப்பையும் ஏற்பவள். மனைக்குத் தலைவியாக இருப்பவள். இல்லறக் கடமைகளை இனிதே நிறைவேற்றி இல்லத்தை ஆளும் இல்லாளாகத் திகழ்பவள்.

முதுமையும் இளமையும் முரண்பட்டு நின்றால் இருவருக்குமே மகிழ்ச்சி இல்லை. ஆனால் பிசிராந்தையார் முதுமையடைந்தாலும் அவரோடு இளையவர்களும் இணைந்திருந்தார்கள். அதனால் முரண்பாடுகளுக்கு இடமில்லை. முதுமையின் அநுபவ அறிவும் இளமையின் செயற்பாட்டு ஆற்றலும் இணைந்திருப்பின் எல்லாம் ஒழுங்காகவே நடைபெறும். எனவே வீட்டு நிலையிலும் வெளிப்புற நிலையிலும் புலவருக்கு எந்தவிதமான குறையும் இருக்கவில்லை. வீடும் ஊரும் மகிழ்ச்சி தரும் இடங்கள். தலைமுறை இடைவெளிகள் இணைந்து ஒன்றாகச் செயற்படும் மகிழ்ச்சியே தனியானது. இன்று இதுவே எங்கும் சிக்கல்களை உருவாக்கியுள்ளது. முதுமையின் வாழ்வியல் அநுபவத்தை இளமை ஏற்க மறுக்கிறது. வாழ்வியல் மாற்றத்தை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளப் பின்னிற்கின்றனர். பண்டைய வாழ்வியல் மரபுகளை முற்றாக நீக்கக் கூடாது என்பதில் முதுமை உறுதியாக இருக்கிறது. ஆனால் இளமையோ பிற பண்பாட்டுத் தளமொன்றையே உருவாக்கி மகிழ நினைக்கிறது. புலம்பெயர் நாட்டில் இந்த முரண்பாடு வெளிப்படையாகவெ தெரிகிறது. வாழிட மொழியே வாழ்க்கைக்கு வேண்டியது என இளமை எண்ணிச் செயற்படுகிறது. தாய் மொழியின் ஆற்றலை அறியாமையால் ஏற்படும் தடுமாற்றம் இது. இத்தடுமாற்றம் ஏற்பட முதுமையும் ஒரு காரணம். பல்லினப் பண்பாட்டு வாழ்வுச் சூழலில் தனது இனத்தின் பண்பாட்டைப் பற்றி அறிவதற்குத் தாய்மொழியறிவு இன்றியமையாதது என்ற உண்மை இளமைக்குப் புகட்டப்பட வில்லை. அதற்கு மேலாக உலகிலே உள்ள சிறந்தவற்றைத் தேடி இணையத்திலே உலா வரும் இளமைக்கு உலகச் செம்மொழிகளில் தமிழ்மொழி இன்று இரண்டாவது இடத்தில் இருப்பதும் உணர்த்தப்படவில்லை. எனவே இளமையை ஏற்ற வகையில் வழிநடத்த முதுமையும் புதிய செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அடுத்துப் பிசிராந்தையார் குறிப்பிடும் வேந்தனுடைய ஆளுகைச் சிறப்பு மக்களை மகிழ்வாக வாழவைக்கும். புலவர் வாழ்ந்த காலத்தில் மன்னனே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தான். அவனுடைய நல் ஆட்சி மக்களை மகிழ்வித்தது. அக்கால மன்னன் கடனை மோசிகீரனார் என்னும் புலவர் வருமாறு கூறியுள்ளார்:

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புறநானூறு 186)

மக்களுக்கு உணவாகும் நெல்லும் உயிரன்று. இன்றியமையாத நீரும் உயிரன்று. மன்னன்தான் உலக மக்களுக்கு உயிர் ஆனவன். எனவே நான் மக்களுக்கு உயிர் போன்றவன் என்பதை மறவாதிருப்பதே வேல் படையை மிகுதியாகக் கொண்டிருக்கும் மன்னனுக்குரிய கடமையாகும். பிசிராந்தையார் வாழ்ந்த காலம் இத்தகைய கடமையுணர்வோடு மன்னன் மக்களைப் பாதுகாத்த காலம்.

தொடர்ச்சி 26ம் பக்கம்



# மகிழ்வான வாழ்க்கை வாழ வேண்டுமா?

25ம் பக்கத்தொடர்ச்சி

எனவே தம்மை மன்னன் பாதுகாப்பான் என்ற உறுதியான நம்பிக்கையோடு மக்கள் வாழ்ந்தார்கள். கவலையற்ற மகிழ்வான வாழ்வு வாழ்ந்தமையால் பிசிராந்தையார் தலையில் நரைமுடி தோன்றவில்லை.

பிறிதொரு காரணத்தையும் பிசிராந்தையார் பாடலில் குறிப்பிட்டுள்ளார். நிறைந்த அநுபவத்தைப் பெற்ற சிறந்த கொள்கையுடைய சான்றோர்கள் பலர் அக்காலத்திலே வாழ்ந்தனர். சான்றோருடைய இயல்பைத் திருக்குறள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து குணங்களையும் உடையவரே சான்றோராவார். இவர்களுடைய குண இயல்பு தன்னலத்தைப் பேணாது. எப்போதும் பிறர்நலம் நாடவே விழையும். அக்குண இயல்புடையோர் மனவுரம் தவறாதவர்கள். அதனால் சான்றோர் இருக்கும் ஊரில் எதுவித பிணக்குகளுக்கும் இடமிருக்காது. எனவே மகிழ்ச்சிக்கும் குறைவில்லை. ஆனால் இன்று இத்தகைய சான்றோரையும் காணமுடியாதுள்ளது. பரநலப்பண்புடையோர் அருகிவிட்டனர். தன்னலம் பேணுவதே வாழ்க்கையின் இலக்கு என்ற எண்ணமே தோன்றி நிலை பெற்றும் விட்டது.

பிசிராந்தையார் கூறிய மகிழ்வான வாழ்க்கையின் அடிப்படைகள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். மனித இனம் மகிழ்வோடு என்றும் வாழ்வதற்கு நல்ல மனைவி, நிறைந்த மக்கள், இளைய தலைமுறையின் இணைப்பு, அறிவார்ந்த சான்றோர் தொடர்பு, சிறப்பான ஆட்சிமுறை என்பன இன்றியமையாதவை. வீடு, ஊர், நாடு, உலகம் என்ற நிலையில் தொடர்புற்றிருக்கும் மனிதன் மகிழ்வாக இருக்கப் பிசிராந்தையார் பாடல் வழிகாட்டுகிறது. ஆனால் இப்பாடல் இன்று பலர் அறியாத பாடலாகவே உள்ளது. இணையத்தளத்திலே பாடல் ஏற்றப்பட்டுள்ளது. ஆனால் இப்பாடலைப் படிக்கும் ஆர்வமும் தேவையும் பயிற்றப்படவில்லை. ஆய்வு மாணவரும் விரிவுரையாளரும் மேற்பட்டம் பெறப் பாடலைப் படிக்கின்ற அளவிலேயே அதன் பயன்பாடு இன்று சுருங்கிவிட்டது. அடுத்த தலைமுறையினர் இப்பாடலை தமது அடுத்த தலைமுறையினருக்கும் அறிமுகம் செய்யவேண்டும். இத்தகைய இலக்குடைய புதிய செயற்பாடு ஒன்று திட்டமிடப்பட வேண்டும். அதுவே தமிழ்மொழியையும் பண்பாட்டையும் பேணும் நடைமுறையாகும்.

## ஒருவனே வில்லன்



நவீன கதைகளுடாக வில்லன் பற்றிய நல்ல அறிவுடையவர்களாக நாம் இருக்கிறோம். பெரியபுராணம் என்னும் காவியக் கதைகளை நீங்கள் படித்துப்பாருங்கள். அக்கதைகள் எல்லாவற்றிலுமே ஒருவன்தான் வில்லனாக வருகின்றான். அது பிள்ளைக்கறி கேட்டவனாக இருக்கலாம், 'உன்னுடைய மனைவியை எனக்குத் தா' என்று கேட்டவனாக இருக்கலாம், 'நீ என்னுடைய அடிமை' என்று சுந்தரருக்குக் கூறியவனாக இருக்கலாம். சம்பந்தப்பிள்ளைக்கும் அப்பருக்கும் சமணர் வில்லன்களாக இருக்கும் ஒன்றைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் நம்முடைய இறைவனே வில்லனாக வருகின்றான். வேறு வில்லன் வந்தால் சிலவேளை தீமையும் நிகழலாம் என்பதால் கருணை கூர்ந்த இறை தன்னையே வில்லனாக்கிக்கொண்டது.

தகவல்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## யேர்மனியில் சாதனை படைக்கும் மாணவன்!

### தே. யதார்த்தனன்

கிறீபீல்ட் நகரத்தில் வசித்து வருகின்ற திரு. திருமதி. தேவகுருபரன் வசந்தினி தம்பதிகளின் புதல்வனான செல்வன். தே. யதார்த்தனுக்கு நோட்றைன் வெஸ்பாலின் கல்வி அமைச்சின் புலமைப்பரிசு கிடைத்துள்ளது. அதனை அறிந்து கொண்ட வெஸ்ற் டொச்சர் என்ற பத்திரிகை அவரைப் பேட்டி கண்டு பாராட்டி எழுதியுள்ளது என்ற நற்செய்தியை இங்கே பதிவு செய்கின்றோம். செல்வன் தே.யதார்த்தன் 10ஆம் வகுப்பில் படிக்கும் போதே சிறந்த மாணவருக்கான விருதைப் பெற்று, தற்போது கிறீபீலட் கோர்க்ஸ் கிறாத் கிம்னாசியத்தில் படித்து வருகின்றார். இப்புலமைப்பரிசிற்கான தெரிவிற்கு கிட்டத்தட்ட 650க்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித் திருந்தனர். அவர்களிலிருந்து 56 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அதிலிருந்து திறமை அடிப்படையில் 9 மாணவர்களுக்கே ரெலிகொம் பரிசு கிடைத்துள்ளது. இவ்விரண்டிலும் செல்வன் தே.யதார்த்தன் சிறப்பாக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
இப்புலமைப் பரிசு தேர்வானது இவரின் கல்வித் திறமையுடன் தனிப்பட்ட திறமைகளான விளையாட்டு, தபேலா, மிருதங்கம், சுற்றுப்பறை என்ற டிரம் போன்ற வற்றறை மீட்டுகின்ற திறமையைக் கவனத்திற் கொண்டெ அளிக்கப்பட்டது. இதே போன்று இவரது சகோதரி செல்வி. தே. சாருகா 8ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே இவரின் கல்வித்திறமை யைக்கவனித்து, 8ஆம் வகுப்பில் படித்த சமகாலத்திலிருந்தே எசன் டுசில்டோப் நகரங்களி லுள்ள பல்கலைக் கழகங்களில் மருத்துவபடிப்பிற்கான விரிவுரை களுக்கும் செய்முறை பயிற்சிக்கும் சென்றுவரு கின்றார் என்பதையும் மகிழ்வுடன் தெரிவிக் கின்றோம். செல்வி. தே. சாருகா வீணை இசையை பயின்ற வருவதுடன், நடனத்தையும் பயின்று வருகின்றார்.

வெற்றிமணி இவர்களிருவரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றது. அதே வேளையில் எமது மாணவர்கள் பள்ளிக் கல்வியுடன் நின்றுவிடாது ஆக்கபூர்வமான தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டு மென்பதை இம்மாணவர்களின் புலமைப்பரிசுத் தெரிவு உணர்த்துகின்றது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.



கிறீபீலட் நகரத்திலிருந்து புலமைப்பரிசு பெற்ற இந்த இரு மாண வர்களும் புகழ்பூத்த தாளவாத்திய இசைக் கலைஞர் திரு. ச. தேவகுருபரனின் மகனாவர்.


**Nirubagini Magendiran**

Tamil- Deutsch
Deutsch- TamilTel: 0176/ 24012135
Email:
nirumagendiran@hotmail.com
Vereidigte Dolmetscherin
und
ermächtigte Übersetzerin

மொழிபெயர்ப்பாளர்
தமிழ்
யேர்மன்
யேர்மன்
தமிழ்

அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்முண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்

**Sweet Chilli**

www.sweetchilli-do.de




*Original Srilankisches & Indisches Restaurant*
50 Sitzplätze
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter

இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள்,அனைத்தும் ஒரே கூரையின் கீழ் .தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை

Tel: 0231 315 46 84
Rheinische str.60
44137 Dortmund

Herzlich Willkommen!
Buffet & Party Service






# தன்னம்பிக்கையும் மனிதநேயமும் கைகோர்த்து நடக்கிறது!

**கனக்ஸ்-கனடா**

நீ அதிதீவிர கவனிப்புப் (ICU) பிரிவிலிருந்தது போதும். 7வது மாடியில் படுக்கை ஒதுக்கப் பட்டுள்ளது அங்கு கொண்டு செல்லவுள்ளோம் என்றார்கள். அந்த அறையும் வந்தது. ஜன்னல் பக்கத்துக் கட்டில் என்றால் நல்லது. இது ஜன்னல் பக்கமாகத் தான் இருக்கும் என எண்ணிய எனக்கு ஏமாற்றம். அந்தப் பக்கத்தில் இன்னொரு நோயாளி படுத்திருந்தார். என்னை கட்டிலிலிருந்து நிரந்தர படுக்கைக்குத் தொழிலர் இடம் மாற்றிக் கொண்டிருந்த போது அசரீரி ஒன்று, “ welcome to the play park of St. Michaels' hospital” எனக் கேட்டது.

திரும்பிப் பார்த்தேன். குள்ளமான மனிதர் ஒருவர் வைத்திய சாலை உடையுடன் நின்றார். சிவந்த மேனி, வெள்ளைத் தலைமயிர் அகன்ற நெற்றி. குவிந்த வாய், வாளிப்பான உயரத்திற்கு மீறிய பருமனுடைய உடல், சிரித்த படியேஇ “இங்கே பார் நீ உலகிலேயே மிகத் தரமான ஒரு வைத்திய சாலைக்கு வந்துள்ளாய், நிச்சயமாகச் சுகதேகியாகத்தான் வீடேகுவாய் என அருள்வாக்குக் கூறினார். வாய்ச் சவடால் நிறையவே உள்ளவர் என்பது தெரிந்தது. தொடர்ந்தார். என்னைப் பார். எனக்கு ஐந்து முறை மூளைச் செயலிழப்பு (Stroke) ஏற்பட்டுள்ளது. இரண்டு முறை இதயமாற்றுவழி அறுவை வைத்தியம் செய்துள்ளேன், சலரோகம் நீண்டகாலமாக என்னுடனே உறவாடி வருகிறது. இப்போ சிறுநீரகப் பிரச்சினை அதனால் நீர்ப்பாயத் தேக்கம் (Odema) உள்ளமையால் நான்கு வாரமாக இங்கே தங்கியுள்ளேன். என்னைச் சுகதேகியாக்கிய பின்னரே வீட்டிற்கு அனுப்புவார்கள். நான் இவ்வைத்தியசாலையின் பெருமை பற்றி கட்டாயமாக ஒரு புத்தகம் எழுதியே தீருவேன் என்று கூறி, சற்று நானும் வாய் திறக்க சிறிது அவகாசம் தந்தார்.

நான் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கலாம். தெரியாத் தனமாகக் கேட்டு விட்டேன். 'நீங்கள் எந்த நாட்டிலிருந்து இங்கு புலம் பெயர்ந்தீர்கள்' என்றேன். மடை திறந்தது. நான் அயர்லாந்தினைச் சேர்ந்தவன். எனது மனைவி ஸ்காத்லாந்தினைச் சேர்ந்தவள். எனது வாலிபப் பிராயத்திலேயே நான் இந்நாட்டிற்கு வந்து விட்டேன். நீ அயர்லாந்தினுக்குப் போயுள்ளாயா? என்றார். நான் போகவில்லை என்றேன். அருமையான நாடு,மிகவும் அழகான நாடு நீ பார்க்கத் தவறி விட்டாய் என்றவர் நாட்டின் வளம் பற்றியும் சுற்றுலாப் பிரதேசங்கள் பற்றியும் வருணிக்கத் தொடங்கிவிட்டார். எனக்கோ சங்கடமாக இருந்தது. எனது தந்தையார் முதலாவது உலகப் போரினில் பங்கு பற்றியவர் தெரியுமா என்றவர் திடீரென அவருக்கு எத்தனை பேரப் பிள்ளைகள் சொல்லு பார்க்கலாம் என்றார். ஏதோ ஒரு தொகையினைச் சொல்லலாம் என எண்ணியவனாக ஒரு இருபது இருக்குமா என்றேன்.
என்ன பகிடி விடுகிறாய்.

மொத்தமாக 105 பேரப்பிள்ளைகள். என்ன வாயைப் பிளக்கிறாய். அவருக்கு 22 பிள்ளைகள். உலகப் போர் முடிந்து வீடு திரும்பியவருக்கு வேறு பொழுது போக்கு இருக்கவில்லை. தொலைக் காட்சியும் அன்றில்லை. எனவே இதுவேதான் பொழுது போக்காக இருந்தது எனக்கூறியவர், தனது நகைச் சுவையினைத் தானே ரசித்தார்.

நான் சிறிது தூரம் நடந்து விட்டு வரப்போகிறேன், நீயும் அதனைப் பின்பற்று எனக்கூறியவர் கைத்தடியுடன் உலாவக் கிழம்பி விட்டார். சிறிது நேரத்தின் பின்னர் தனது கட்டிலுக்குத் திரும்பியவரைப் பரிசோதித்த தாதி “உங்களை இன்னும் இரண்டு நாட்களில் வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள் போல் உள்ளது' என்றார். அப்படி என்றால் நான் உன்னை நாளை இரவு ஒரு பிரபலபலமான உணவு விடுத்திக்கு அழைத்துச் சென்று விருந்து தருவேன் என்றார். அப்போ என்னைக் கூட்டிச் செல்லவில்லையா என்றேன். உன்னை நான் அயர்லாந்தினுக்கு அழைத்தல்லவா போகப் போகிறேன். அங்கேயே உன்னைத் தங்க வைத்து விட்டு வந்து விடுவேன் என்றார். ஐயையோ பிள்ளைகள் பாவம் கஷ்டப் படுவார்கள் என்றேன். அவர்களுக்கு என்ன கஷ்டம். ஆஸ்பத்திரி வீடு என அலையத் தேவையில்லை.

இங்கே பார் எனது தாயார் 22 பிள்ளைகளைப் பெற்றார். புண்ணியவதி 45 வயதில் மறைந்து விட்டார். நாம் எல்லோரும் வாழவில்லையா? உனக்கு எத்தனை பிள்ளைகள் என்றார். நான்கு பிள்ளைகள். அவர்களில் ஒருவர் புற்றுநோயினால் உயிரிழந்து விட்டார் என்றேன். ஓ அந்தக் கொடிய நோய் தான் எனது தாயாரையும் அபகரித்தது. 250 இறாத்தல் நிறையுடைய வராயிருந்த அந்தப் பெண்மணி இறக்கும் பொழுது வெறும் 48 இறாத்தல் நிறைக்குச் சுருங்கி விட்டார். மிகவும் அல்லல் பட்டார். அவரை நான் மிகவும் நேசித்தேன். அவரது இறுதி ஊர்வலம் தேவாலயத்திலிருந்து மயானம் வரை 16 மைல்கள். மற்றைய எல்லோரும் வாகனங்களில் சென்றார்கள். நான் மட்டும் அழுதபடி இறுதி வரை நடந்தே சென்றேன். அவரது பிரிவு என்னால் தாங்க முடியவில்லை. அந்நாட்டினில் தொடர்ந்து வாழ எனக்குப் பிடிக்கவில்லை. நாட்டை விட்டே வெளியேறி விட்டேன்.

தாய் நாடு பிடிக்காமல் இல்லை. எனது தாய் இல்லாத நாட்டினை என்னால் நினைத்தே பார்க்க முடியாதிருந்தது.

இங்கு வந்த நான் தெருப்பாடகனாக, சுரங்கத் தொழிலாளியாக இன்னும் பலப்பல அவதாரங்கள் எடுத்தேன். அவர் தாயின் மேல் வைத்திருந்த அபரிமிதமான பக்தி இத்தனை வருடங்களின் பின்னரும் அவரது முகத்தில் பிரதிபலித்த உணர்வாலும் பேச்சில் துலங்கிய ஏக்கத்தாலும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கதையினை மாற்றும் பொருட்டு உனக்குப் பாடவும் வருமா என்றேன். என்ன அப்படிக் கேட்டுவிட்டாய். பலரின் பெயர்களைக் கூறி இப்பாடகர்களுடன் எனக்குப் பரிச்சயம் உள்ளது என்றார். மகாராணி எலிசபெத் 1954ஆம் ஆண்டினிலே முடிசூடினார் அல்லவா. அன்றைய தினம் நானும் எனது தந்தையும் ஒரு இசைப்பாடல் இயற்றிப் பாடியுள்ளோம். அப்போ எனக்குப் 16 வயது. இதோ கேட்டுப்பார் எனக் கூறி பாடியும் காட்டினார். நன்றாகவே இருந்தது. என் வீட்டில் 5000 இசைத் தட்டுக்கள் வைத்துள்ளேன் என்றார்.
நான் ஒரு பேப்ரையும் பேனாவையும் அவரிடம் கொடுத்து தயவு செய்து அந்த இசைப் பாடலை எழுதித் தருவீர்களா எனக் கேட்டேன். மன்னித்துக் கொள், எனக்கு ஐந்து முறை மூளைச் செயலிழப்பு ஏற்பட்டதாகக் கூறினேன் அல்லவா அதன் விளைவாக இப்போ எனக்கு எழுத வாசிக்க முடியாதுள்ளது. அதற்கான பயிற்சியை Western Hospital லில் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இப்போ நான் பாடுகிறேன் நீ எழுதிக் கொள் என்றார். எழுதினேன் ஒப்பமிட்டுத் தந்தார். அந்தப்பாடல் இதுதான்.

தொடர்ச்சி 28ம் பக்கம்.




எங்கள் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

## நெடுந்தீவில் பத்துத்தலைப் பனைமரம்

நெடுந்தீவு மேற்கு பிரதேசத்தில் 16 வட்டுக்களைக் கொண்ட பனை மரம் ஒன்று காணப்படுகின்றது. நீண்ட காலமாக இங்கு உள்ள போதும், இப்போதுதான் எம்மவர்களின் கண்ணில் அகப்பட்டுள்ளது. பெருமளவிலான மக்கள் இதனைப் பார்வையிடுகின்றனர். இப்பனையின் பல கிளைகளில் பனம்பழம் காய்த்திருப்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.



இதுபோன்று ஒரு பனைமரம் இரண்டு கிளையுடன் தொண்டமனாறுப் பகுதியில் உள்ளதை மறந்திருக்கமாட்டுடீர்கள். இன்னும் இப்படி எத்தனை எத்தனை வனப்புக்கள் எம்மணில் மறைந்து இருக்கும். இப்போ கையில் இருக்கும் மூன்றாம் கண்கொண்டு (கமறா) உலகுக் குக் காட்டுங்கள்.

படமும் தகவலும் **சுஜி தர்மரத்தினம்**-யாழ்ப்பாணம்.

## இரசிக்கவும் சிந்திக்கவும் இரண்டுபடம்




எமது கட்டடக்கலை பாரம்பரியத்தை கட்டியம் கூறும் அற்புதமான படைப்பு. வீதியால் வருவோர் வெயிலின் கொடுமைக்கு தங்கி இளைப்பாறி போவதற்கு என எமது முன்னோர்கள் அமைத்த பல நிழல் கூடங்களில் முக்கியமானதொன்று. வீட்டின் பிரதான வாயிலுக்கு மேலாக கூரைபோடப்பட்டு அத்துடன் கீழே இரு பறமும் அமர்வதற்கும் தூங்குவதற்கும் வசதியாக குந்துகளும் அமைக்கப்பட்டு இருக்கும். அதன் ஒரு மூலையில் மண்குடத்தில் தண்ணீரும் வைக்கப்பட்டு இருக்கும். தமிழர்களின் விருந்தோம்பல் பண்புக்கு முக்கிய சாட்சியாக மிளிர்வது சங்கடன் படலை என்றால் மிகையாகாது.

(படமும் கருத்தும் சர்வேஸ்)

## தன்னம்பிக்கையும்... 27ம் பக்கத்தொடர்ச்சி

In a golden coach, there is a heart of gold
riding to all London town.

The sweetest queen, the world has ever seen.
Bearing the golden crown, she rides in state to the palace gate.

A beauty the whole world will see in a golden coach
There is a heart of gold riding to all London Town.

D.S Neilly

வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இந்த ஒரு நிமிடம் எமக்குக் கிடைத்த பாக்கியம் ஆகவே அதை உபயோகப் படுத்துவது எனது கடமை. எனது பேரனார் 110 வயது வரை வாழ்ந்தார். பாட்டி 111 வரை வாழ்ந்தார். நான் இவர்களது சாதனையை முறியடிப்பேன். " Irish man never dies ; he only fades" என்ற கூற்றுடன் முடித்தார். வாழவேண்டும் என்ற அவரது மன உறுதி, வாழ்வேன் என்ற திடநம்பிக்கை ஆச்சரியத்தை தந்தது.

அன்றைய தினம் எனது தாதியாகக் கடமையாற்றியவர் நேசா. தமிழ்ப் பெண்.அப்போது அங்கு வந்த அவரிடம், இன்று இரவு 10:00 மணிக்கு நானும் என்னைச் சுட்டிக் காட்டி இவரும் இங்கே நடனமாடவுள்ளோம் நீ கட்டாயமாக வந்து பார்க்க வேண்டும் என்றார். நேசா7:30 மணியுடன் வீடு போய் விடுவாரே என்றேன். நான் இரண்டு நாட்களின் பின்னர் இரவு வேலைக்கு வருவேன் அன்றைய தினம் பார்க்கிறேனே என்றார் நேசா. நான் சிறிது நடக்கப் போகிறேன் என்றவர் கைத்தடியுடன் கிளம்பி விட்டார். நான் கட்டிலில் ஓய்வாகச் சாய்ந்தேன். சிறு சலசலப்புச் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். நேசாவும் இன்னும் இரு தாதியரும் அவரைத் தூக்கிக் கொண்டு வந்து அவரது கட்டிலில் கிடத்தினார்கள். அவசர அவசரமாக வைத்தியர் ஒருவரும் வந்தார். நடந்து சென்றவர் மயங்கிவிழவிருந்தார் பின்னால் சென்ற நான் தாவிப்பிடித்து விட்டேன். அழைத்த போது மற்றவர்களும் வந்ததையால் தரையிலே விழாமல் காப்பாற்றி விட்டோம் என்றார் நேசா.

சிறிது நேரத்தின் பின்னர் அவர் சுய நிலையை அடைந்தார். ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு அவர்கள் யாபேரும் சென்றுவிட்டனர். ஒரு மணித்தியாலம் வரை சென்றிருக்கும். கைத்தடியுடன் எனது படுக்கையைத் தாண்டியவர் நான் சிறிது நடக்கப் போகிறேன் என்றார். சற்று நிதானமாகச் செய்யலாமே என்றேன். இந்கே பார். இந்கே தங்கியிருந்த இந்த நாலு வாரங்களில் நான் ஐந்து முறை வரை விழுந்துள்ளேன் ஆனால் எனக்கு ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் நடக்கிறபோது நடக்கும் என்றார்.

எனக்கு ஐந்து முறை மூளை செயலிழப்பு ஏற்பட்டது என்று சொன்னேன் அல்லவா. எப்படி நடந்தது தெரியுமா? எனது முதல் மனைவி அந்த ஐந்து முறையும் பொரியல் தட்டினால் ( Frying pan) என்தலையில் ஓங்கி அடித்ததால் ஏற்பட்டது. எனது ஐந்து பிள்ளைகளும் அவளுடன் நடத்திய தாம்பத்தியத்தினாலேயே பிறந்தன. ஆனால் நான் இரண்டாவது திருமணம் செய்த போது அவளுடன் பிள்ளை பெறுவதில்லை என்ற உடன்படிக்கை செய்து கொண்டோம். நிறைவேற்றியும் உள்ளோம். ஐந்து பிள்ளைகளையும் வளரவைத்து ஆளாக்கி நல்ல நிலையில் இருக்க வைத்துள்ளோம். வருகிற மாதம் எனது முதல் மனைவி இதே வைத்தியசாலையில் பிரதானமான ஒரு அறுவை வைத்தியம் செய்யவுள்ளார் நான் தான் இங்கு வந்து அவரைப் பராமரிக்கப் போகிறேன் என்றார்.

இத்தகைய ஒரு மனிதரா. அவரது மனிதாபிமானம் என்னை வியக்க வைத்தது. 'எல்லோரும் நல்லவர்களே. சில சமயங்களில் கோபம் அத்து மீறி விடுகிறது. இந்த வருட நத்தார் தினத்தில் எனனுடன் உள்ள கிறிஸ்துமஸ் தாத்தா உடையினைப் போட்டபடி இந்த வைத்தியசாலை வாயிலில் வந்து நின்று எல்லோருக்கும் சொக்கலேற் கொடுக்கவுள்ளேன். நீயம் வருகிறாயா' என்றார்.

நான் வருவதற்கில்லை என்றேன் வருவதானால் சொல்லு உனக்கு ஏற்ற உடையும் என்னிடம் உள்ளது என்றார். நான் சிரித்து மழுப்பினேன். அவர் நடக்கப் போய் விட்டார்.






# சீனாவில் 20 வது வயதில் திருமணம் செய்யவில்லை என்றால் கைவிட்ட பெண்கள் என்று பெயர் வருமாம்!



## கணவர் கிடைக்காது திண்டாடும் 5 இலட்சம் பெண்கள்

முன்பு எல்லாம் இலங்கையில் திருமணம் என்றால் பெற்றோருக்கு பெரும் பொறுப்பு. திருமணத்தை அன்று தீர்மானித்தது கல்வி, காசு,சிறந்த உத்தி யோகம்,சீதனம்,சாதி,மதம்,திருமணப் பொருத்தம், மேலும் மதுப்பழக்கம், ஏன் புகைப்பழக்கமும்கூட. இவற்றை எல்லாம் உன்னிப்பாகக் கவனித்து திருமணம் நிச்சயம் செய்ய பெண்களுக்கு வயது வட்டுக்குள் சென்று விடும்.
இப்போ ஆணும் பெண்ணும் பேசிமுடித்ததும் முடித்து விடுகிறாா்கள் திருமணத்தை. அதனால் நாம் ஒரு வகையில் தப்பிக்கொண்டோம்.

பாருங்கள் சீனாவில் பெண்கள் படும் பாட்டை! 20 வது வயதில் திருமணம் செய்யவில்லை என்றால் கைவிட்ட பெண்கள் என்று பெயர் வேறு வந்துவிடுமாம்.!

பெய்ஜிங்கில் கணவர் கிடைக்காது திண்டாடும் 5 இலட்சம் பெண்கள்

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கிட்டத்தட்ட 5 இலட்சம் பெண்கள் நல்ல கணவர் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்களாம். இவர்கள் அனைவருமே காதல் மற்றும் திருமண வயதைத் தாண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எத்தனையோ முறை டேட்டிங் போயும் கூட தங்களுக்கு நல்ல காதலர் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள் இப்பெண்கள்.

சிஜியாஜிக்கு 31 வயதாகிறது. நல்ல வேலை, கை நிறைய சம்பளம். ஆனால் இன்னும் திருமண மாகவில்லை. காரணம் நல்ல மாப்பிள்ளை கிடைக் கவில்லை. இதனால் வீட்டிலும், அலுவலகத்திலும் நிறைய கேள்விகளை எதிர்கொண்டு தர்மசங் கடத்தில் தவிக்கிறார்களாம்.
இதுகுறித்து அப்பெண் கூறுகையில், நகர்ப்புற சீன ஆண்கள், தங்களது மனைவி அல்லது காதலி தங்களை விட குறைந்த படிப்பை படித்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். சம்பளம் குறைவாகப் பெற வேண்டும் என்றும் எதிர்பார்க் கிறார்கள்.
கண்ணை மூடிக் கொண்டு திருமணம் செய்ய அவர்கள் தயாராக இல்லை. இதுதான் பெரிய பிரச்சினை என்கிறார்.
மேலும் அவர் கூறுகையில் எங்களை எல்லோரும் ஷெங்னு என்று சொல்லிக் கூப்பிடுகிறார்கள். ஷெங்னு என்றால் கைவிடப்பட்ட பெண்கள் என்று அர்த்தம்.
20 வயதுகளில் திருமணமாகாவிட்டால் அப்படிப் பெயர் வைத்து விடுகிறார்கள்.

சீனாவின் பிரபலமான திருமண தொலைக்காட்சி ஷோவை நடத்தி வரும் நிலின் என்பவர் கூறுகையில், சீன ஆண்கள் பெரும்பாலும் தங்களை விட குறைந்தவர்களைத்தான் திரு மணம் செய்ய முயலுகின்றனர்.

ஏ கிரேடு ஆண்கள் பி கிரேடு பெண்களைத் திருமணம் செய்கின்னர். பி கிரேடு ஆண்கள், சி கிரேடு பெண்களையும், சி கிரேடு ஆண்கள் டி கிரேடு பெண்களையும் மணக்கின்றனர்.
இதில் ஏ கிரேடு பெண்களும், டி கிரேடு ஆண்களும்தான் ஜோடி கிடைக்காமல் தவிக்கும் நிலை ஏற்படுகிறது.

பெய்ஜிங் நகரில் 20 மற்றும் 30 வயதைத் தாண்டிய பெண்களில் மூன்றில் ஒரு பங்குப் பேர் திருமணமாகாமல் தவிக்கின்றனர். தலைநகரில் மட்டும் கிட்டத்தட்ட 5 இலட்சம் பெண்கள் நல்ல கணவர் கிடைக்காமல் தவிக்கின்றனர்.
ஷாங்காய் நகரில் திருமணமாகமல் இருக்கும் பெண்களின் நலனுக்காக அரசே வரண் பார்க்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து தருகிறதாம். இருந்தும் கூட சரியான கணவர்களைப் பெறும் பெண்கள் எண்ணிக்கை குறைவாகவே இருக் கிறதாம்.

**பாலகன் யேசுக் குழந்தையே**
**பாதம் தொட்டு வணங்குகிறோம்.**



வானவர் பாடிய கீதம்
ஈனருக்கு புரியாத நாதம்
பாதையில் மாற்றம்
பயணத்தில் குதூகலம்
பாவமது தொடர
பாவி என்ற பட்டம்
பரம் பொருளுக்கு மகிமை

பாரில் பொருள் தேடுவோர்க்கு பிரமை
பாடலுக்கு விளக்கம் பெற
தேடலில் மானிடர்
இருள் மேகம் விலகி
அருள் மழை வேண்டி

கவலையால் நிறைந்து
கண்ணீரால் கலங்கி
வேதனையால் வருந்தி
பாதை தெரியாத
பாலகர் போல
பாவிகள் நாம்

பாலகன் யேசுக் குழந்தையே
பாதம் தொட்டு வணங்குகிறோம்.

ஆக்கம் **ஏ.றி.இமானுவேல்**
வூப்பெற்றால்.




இன்று இலங்கையில் நடனத்துறையில் பேசப்படும் ஒரு சிறந்த பரதக் கலையரசி திருமதி.திவ்வியா.சுஜன். இவர் பல நடனமணிகளை உருவாக்கி வருவதுடன், இளம் வயதிலேயே பரதத்தில் பல பரிமாணங்களைத் தொட்டவர். இவரது பரதக்கலைச் சேவையைப் பாராட்டி, அண்மையில் கொழும்பு காலச்சார அமைப்பினர் விருதுகொடுத்து (Blessed with an award for the best contribution & Service to the DANCE field ) கௌரவித்தனர். கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சிவத்தமிழ் சிறப்பிதழ் (அன்னை நவநிதிக்கு சமர்ப்பணமாக 03.11.2013 ) வெளியீட்டின்போது திருமதி திவ்வியாவுடன் வெற்றிமணி சிவத்தமிழ் ஆசிரியர்.





யேர்மனியில் பிராங்பேட் நகரில்...
# Jaffna Basar
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்

Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main
உரிமையாளர் நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53

யேர்மனியில் முல்கைம் நகரில்...
Jaffna Basar
இல்லத்திற்கு வேண்டிய மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.
தொலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany
Tel:02086 96 64 85
Tel:01787633084

# எனக்கு ஏற்ற ஜோடி நயன்தாரா தான்! - ஆரியா


ஒரு விழிப்பார்வை

பிரபலமான நடிகர்கள் தம்மைச் சிக்கலில் மாட்டிக்கொள்ளும் கேள்வியான "உங்களுக்கு பிடித்த நடிகை யார்? யாருடன் நடிக்க உங்களுக்கு ஆசை" என்று கேட்டால், தப்பித்துக்கொள்ள தற்போது நடிப்புத்துறையில் இல்லாத சரோஜாதேவி விஜயகுமாரி அல்லது காலஞ்சென்ற நடிகைகளான பத்மினி தேவிகா சாவித்திரி என்று சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள், ஆனால் ஆரியாவோ சட்டென்று பதில் அளித்துவிட்டார்.
"தனக்கேற்ற ஜோடி என்றால், அது நயன்தாரா" தான் என நடிகர் ஆர்யா தெரிவித்துள்ளார். செல்வராகவன் இயக்கத்தில் ஆர்யா, அனுஷ்கா நடித்துள்ள இரண்டாம் உலகம் படம் வரும் 22ம் திகதி வெளியாகிறது. இந்த படம் தெலுங்கிலும் வெளியாகிறது.

தெலுங்கில் அனுஷ்காவுக்கு நல்ல செல்வாக்கு உள்ளதால் அங்கு படம் நல்ல வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் சென்னையில் இரண்டாம் உலகம் படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடந்தது. இதில் கலந்து கொண்ட ஆர்யா செய்தியாளர்களிடம் கூறுகையில்,எப்படி தான் படமோ? செல்வராகவன் என்னிடம் இரண்டாம் உலகம் படத்தின் கதையை கூறியபோது இதை எப்படித் தான் படமாக்கப் போகிறாரோ என்று நினைத்தேன். ஆனால் தற்போது படத்தை பார்த்தால் அதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. இத்தகைய பெரிய பட்ஜெட் மற்றும் லேசில்லாத கதையை படமாக்க நிறைய திட்டமும், தில்லும் வேண்டும் என்றார் ஆர்யா.பெரிய நடிகரை எடுத்திருக்கலாம் இரண்டாம் உலகம் எனது கெரியரின் மிகப் பெரிய படங்களில் ஒன்றாக இருக்கும் என்று நம்புகிறேன்.
செல்வா நினைத்திருந்தால் வேறு ஹீரோக்களை நடிக்க வைத்திருக்கலாம். பெரிய பட்ஜெட் என்பதால் பெரிய ஹீரோவை நடிக்க வைத்திருந்திருக்கலாம். என் மீது நம்பிக்கை வைத்து வாய்ப்பளித்ததற்கு செல்வாக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று நெகிழ்ந்தார் ஆர்யா.நான் கடவுள் நான் கடவுள், இரண்டாம் உலகம் என்று ஆண்டுக் கணக்கில் எடுக்கும் படங்களில் ஏன் நடிக்கிறீர்கள் என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். பாலா, செல்வராகவன் ஆகியோர் ஆண்டுக் கணக்கில் படத்தை எடுப்பதற்காக நான் வருந்தவில்லை. ஒவ்வொரு காட்சியும் சிறப்பாக வர அவர்கள் கடினமாக உழைக்கிறார்கள். அதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன் என்று ஆர்யா தெரிவித்தார்.நயன்தாரா எனக்கு பிடித்த நடிகை நயன்தாரா. அவர் தான் எனக்கேற்ற ஜோடி என்று ஆர்யா கூறினார். உங்களுக்கு பிடித்த நடிகை யார் என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு தான் ஆர்யா இந்த பதிலை அளித்தரா்.

## சிம்புவுடன் படத்தில் நடிக்க நயன்தாராவுக்கு ஒன்றேகால் கோடி! ஒரே தவணையில்!!

சிம்பு படத்தில் நடிக்க நயன்தாராவுக்கு பேசப்பட்டுள்ள சம்பளம் ஒன்றேகால் கோடி என்றும், அதையும் ஒரே தவணையில் கொடுக்க ஒப்புக் கொண்டதாலேயே அவர் நடிக்க சம்மதித்ததாகவும் தெரிய வந்துள்ளது.
பாண்டிராஜ் படத்தில் நடிக்க நயன்தாரா ஒப்புக் கொண்டுள்ளதாக பாண்டிராஜ் அறிவித்ததிலிருந்து பல்வேறு செய்திகள் இறக்கை கட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளன.

ஆனால் இந்தப் படத்தை நயன்தாரா ஒப்புக் கொண்டதற்கு முக்கிய காரணம், குறைந்த திகதிகள் மற்றும் அதிகபட்ச சம்பளம். கூடவே இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு கிடைக்கப் போகும் பரபரப்பு பப்ளிசிட்டி போன்றவைதானாம்.

இந்தப் படத்துக்கு அவர் குறைந்த நாட்கள் கால்ஷீட் தந்தாலே போதும் என்று பாண்டிராஜ் உறுதியளித்திருக்கிறார். காரணம் சிம்பு தொடர்பான காட்சிகள் ஏற்கெனவே எடுத்துமுடிந்துவிட்டன. இதைத் தவிர, ஒன்றேகால் கோடி ரூபாயை ஒரே தவணையில் மொத்தமாகத் தர தயாரிப்பாளரான சிம்புவும் ஒப்புக் கொண்டாராம்.

Milin Impex
Asiatische Lebensmittel
Groß und Einzelhandel
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள் இனிய நத்தார் புதுவரு நல்வாழ்த்துக்கள்
யேர்மனியில் தலைமுறை, தலைமுறையாக தரமான ஆசிய, ஆபிரிக்க உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களும், மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.
யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான தரமான
இலங்கை,இந்திய,மற்றும் ஆபிரிக்கா உணவுப் பொருட்களைச் சிரமம்மின்றி
ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஒரு 22 வருட அனுபவமிக்க நிறுவனம்.
Tel:0231 45 96 17 / 28

வாடிக்கையாளருக்கு ஓர் இனிய செய்தி!
வாடிக்கையாளர்களே நீங்கள் தரமானபொருட்களை ஒரே இடத்தில் சிரமமின்றி மலிவாகவும் தரமாகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட, வேறு எந்த நிறுவனங்களின் விலைகளுடனும் ஒப்பிட்டுப்பார்த்து வாங்க நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்!
ஒவ்வொரு திங்களும் உடன் மீன்கள் எம்மிடம் கிடைக்கும்
FRISCH FISCH

வார வாரம் எமது மலிவு விலைகளைப் பார்வையிட எமது இணையத்தளத்திற்குச் செல்லவும்.
Web :www.milinimpex.de
Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen
Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288
Milin Impex
Lüdenscheid நகரில்
Höch Str.8a
58511 Lüdenscheid
Tel:02351 9742131
Mail:info@milinimpex.de

# திரை உலகம்





## எதிர்கால சமூகத்தில்
# என் மகளை நினைத்தால் பயமாக உள்ளது! - சூர்யா

எதிர்கால சூழலில் என் மகளை நினைத்துப் பார்த்தால் பயமாக உள்ளது என்று நடிகர் சூர்யா கூறினார். ஸ்ரீப்ரியாவின் இயக்கத்தில் உருவாகியிருக்கும் மாலினி 22 பாளையங்கோட்டை திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா இன்று சத்யம் திரையரங்கில் நடைபெற்றது. மாலினி 22 பாளையங்கோட்டை திரைப்படத்தின் பாடல்களை கமல்ஹாசன் வெளியிட சூர்யா பெற்றுக்கொண்டார்.

விழாவில் கலந்து கொண்டு பேசிய சூர்யா, ”மாலினி 22 பாளையங்கோட்டை படம் துவங்கிய நாளிலிருந்தே எனக்கு தெரியும். படம் என்பது இரண்டரை மணி நேர எண்டர்டெயின்மெண்டாக இல்லாமல், படம் பார்த்துவிட்டு வீட்டுக்கு போனபிறகும் படம் பார்த்த தாக்கம் இருக்கவேண்டும். எதிர்கால சமூகத்தில் என் மகளை நினைத்தால் பயமாக உள்ளது! - சூர்யா ஒரு கருத்தை மக்கள் மனதில் பதிய வைக்கும் படங்கள் எத்தனை என்பதை கடைசி 3 வருடங்களில் விரல்விட்டு எண்ணிவிடலாம். மற்ற துறையில் இருப்பவர்களிடம் பேசும்போது நல்ல கருத்துள்ள படங்கள் என்றால் 2-3 படங்கள்தான் நினைவுக்கு வருகின்றன. இதில் நானும் அடக்கம் என்பதை மறுக்கவில்லை. தற்போதைய தலைமுறையின் மீது பெரிய பழியே இருக்கிறது. என் மகளின் தலைமுறை வெளிவரும்போது சமூகம் எப்படி இருக்கும் என்று ஒரு பயம் கண்முன்னே தெரிகிறது. இன்று ஒரு அமெரிக்க பேப்பரில் அஸ்ஸாம் மாநிலத்தில் நாட்டில் நடப்பதை சினிமாவாக எடுக்கிறோம். சினிமாவில் எடுப்பதுதான் நாட்டில் நடக்கிறது. நம்மிடம் மிகவும் பலமான காட்சி ஊடகம் இருக்கிறது. இதை வைத்து நாம் செய்ய நினைப்பதை செய்யலாம். புதுமைப்பெண், அச்சமில்லை அச்சமில்லை, மனதில் உறுதி வேண்டும் போன்ற படங்கள் வேண்டும் என தோன்றுகிறது. கலைத் துறையிலும் தொழில் நுட்பத்துறையிலும் பெண்கள் அதிக அளவில் வரவேண்டும் என எதிர்பார்க்கிறேன். அதற்கு இந்த படம் ஒரு முயற்சியாக இருக்கும் என்று நம்புகிறேன்” என்று பேசினார்.

## மனைவி சொல்மிக்க மந்திரம் இல்லை





## “கெட்டவனா நடிச்சது போதும்... இனி நல்லவனா நடிங்க”
### ஷாலினியின் புத்திமதியால் மாறிய அஜீத்

கெட்டவனாகவே நடித்தது போதும்... இனி நல்லவர் வேடங்களில் நடிங்க என்று மனைவி ஷாலினி சொன்னதைக் கேட்டுத்தான் அஜீத், வீரம் படத்தில் நல்ல ஹீரோ வேடத்தில் நடித்துள்ளாராம். 'பில்லா“, “அசல்“, 'பில்லா-2“, 'மங்காத்தா“, 'ஆரம்பம்“ என தொடர்ந்து வில்லத்தனம் கலந்த ஹீரோவாகவே நடித்து வருகிறார் அஜீத். வில்லத்தனம் கலந்த ஹீரோ என்றால் பல விதங்களிலும் வசதி என நினைத்துதான் அந்த மாதிரி வேடங்களைக் கேட்டு நடித்தாராம். ஆனால் இப்போது அஜீத் என்றால் கெட்டவர் என்பதுபோன்ற இமேஜ் வருவதை அஜீத் மனைவி ஷாலினி சுத்தமாக விரும்பவே இல்லையாம். அதனால்தான் 'சிறுத்தை“ சிவா இயக்கும் 'வீரம்“ படத்தில் நல்ல ஹீரோவாக நடிக்க ஒப்புக் கொண்டாராம். 'வீரம்“ படத்தில் அஜீத் வேட்டி-சட்டை அணிந்து, பாசமிகு அண்ணனாகவும் அநியாயத்துக்கு எதிராக போராடுபவராகவும் வருகிறாராம். இந்தப் படத்துக்கான கதை விவாதத்தின் போது, தன் கதாபாத்திரம் குறித்து இயக்குநர் சிவா வர்ணித்ததை ரசித்த அஜீத் உடனே ஒப்புக் கொண்டாராம். இதற்கு முக்கிய காரணமே, ஷாலினியின் வேண்டுகோள்தானாம். தொடர்ந்து வில்லனாக நடிக்க வேண்டாம். இனி நல்ல ஹீரோவாக நடியுங்கள் என ஆரம்பம் படப்பிடிப்பின் போதிருந்தே சொல்லிக் கொண்டு வந்தாராம். உண்மையில் மக்கள் மனதில் கெட்டவன் என்று பெயர் எடுக்க ஒரு படம் போதும். நல்லவன் என்று பெயர் எடுக்க ஒரு படம் மட்டுமல்ல நல்லபடமாகவும் வேண்டும். மக்கள்திலகத்தின் அனைத்து வெற்றிகளுக்கும் முதுகெலும்பாக இருந்தது அவரது படங்களில் அவரது பாத்திரப்படைப்பே.

சிவாஜிகணேசன் எல்லாப் பாத்திரங்களிலும் நடித்து நடிகர்திலகம் என்று பெயர் பெற்றார். எம்.ஜி.ஆர் பாத்திரம் அறிந்து நல்லவனாகவே நடித்து மக்கள் திலகம் என்று பெயர்பெற்றார். இன்று மக்கள்திலகம் என்று பெயர் பெறவே இளம் நடிகர்கள் பாடப் படுகிறார்கள். அதில் தப்பேதும் இல்லையே.







19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

# LITTLE INDIA

*Textile & Jewellery*

அழகான ஆடைகளுக்கும்
பஞ்சாபி வகைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

LITTLE INDIA

02131 273692



Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Little India வின் மற்றுமொரு சேவை

# EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



# ASIA BAZAR

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

Ria Money Transfer

MoneyGram International Money Transfer

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை,
இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

தீபம்

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

தீபம்
தொலைக்காட்சி
அட்டைகள்
எம்மிடம் கிடைக்கும்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும்
தரும்...



Tel:0231- 7252859

# CEYLON IMBISS

இலங்கை உணவகம்

இலங்கை,இந்திய,
உணவுகள், தரம்
குன்றாத சுவையுடன்
கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை
நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen



T.Mohanadas

# Jasmine Silk House

என்றும் புதியன, அழகுக்கு அழகுசேர்க்கும் அற்புதமான டிசைன்களில் அழகிய சேலைகள். மங்கையர் மனம் நாடும் பஞ்சாபிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள்அனைத்தும் நிறைவான தெரிவுக்கு நம்மை நாடுங்கள்

01.012.2013 முதல் 14.01.2014 வரை எமது ஸ்தாபனம் திருத்தவேலைக்காக மூடப்பட்டிருக்கும்

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்



Tel:02102 844744

# StaR - Impex

StaR-Impex

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

6 வது ஆண்டில் பவனிக்கும் எங்கள் வர்த்தகச் சேவைக்கு வலுச்சேர்க்கும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள்!

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

StaR Impex
Gutschein

எம்மிடம் 100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை ஒரு முத்திரை பதிக்கப்படும். இவ்வாறு 10 முத்திரை நீங்கள் பெற்றபின் எம்மிடம் இருந்து 50 யூரோவிற்கான Gutschein ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை நேரடியாக உடன் பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே)

கடல் உணவு வகைகள் மற்றும் பசுமையான மரக்கறிகள் வாரவாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!



தரமான முத்திரை பதித்த தயாரிப்புக்களான Niru,Kings,NGR, Rabeena, Suriya,Vaani,Leela,TRS பொருட்கள் எம்மிடம் நியாயவிலையில் கிடைக்கும்!

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

Tel:0231 860 26 96

StaR Impex : Inh :K.Sivasubramaniam
Mobil: 0172/2183703 -Tel:0231 860 26 96 E-Mail: star-impex@live.de - Web.Star-impex.net Fax: 0231/8602698